

# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

புரட்டாதி

2013





வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி


**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை யிழுக்கத்தின்**
**எய்துவ ரெய்தாப் பழி.**

**பொருள் :** ஒழுக்கத்தினால் மேன்மை உண்டாகும்; ஒழுக்கந் தவறினால் அவன் செய்யாத பழியும் அவனை வந்தடையும். (137)

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்**
**என்று மிடும்பை தரும்.**

**பொருள் :** ஒருவனுக்கு நல்லொழுக்கம் புண்ணியத்திற்குக் காரணமாய் இந்தப் பிறவியிலும் அடுத்துவரும் பிறவியிலும் இன்பந்தரும்; தீயொழுக்கம் பாவத்துக்குக் காரணமாய் எப்பிறப்பிலும் துன்பந்தரும் (138)

---



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### குறள் வெண்செந்துறை

பொறுமையு மடக்கமும் பூரண சாந்தியும்
மறுமை யின்பம் பயக்குமா நிலத்தே 16

பலபல வாக விரியும்பாழ் மனத்தை
மெலமெல வாக வெற்றிகொள் வாயே 17

அகல நீளங் காண வரியது
பகலு மிரவு மற்ற பரம்பொருள் 18

இனியதி லினியது ஈசன்மே லன்பு
முனிய வினியது மோகமுங் கோபமும் 19

பிறப்பிறப் பற்ற பெருமான் பாதம்
மறப்பில் லாதார் மையல்தீர் வாரே 20

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்

வெளியீடு- 2 | சுடர்- 189

2013 | புரட்டாதி



## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சிக்கன வாழ்வு | கு. சோமசுந்தரம் | 01 -03 |
| சிவ சின்னங்கள் | இரா. சாந்தன் | 04 -05 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 06 -10 |
| இந்து மதத்தில் சக்தி... | செ. சுரேந்திரா | 11 -14 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 15 -17 |
| இயற்பகை நாயனார் | கு. ஹேமலோஜினி | 18 -19 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 20 -22 |
| உடனே செயல்படவேண்டிய... | செல்வி செ. ஜடா | 23 -24 |
| தமிழினத்திற்கு ஏற்பட்ட... | சிவ. சண்முகவடிவேல் | 25 -26 |
| புருஷோத்தமனும்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 27 -29 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 30 -31 |
| உத்தமி கைகேயி | S.S. றஜீந்திரன் | 32 -34 |
| காளமேகம் பாடல்கள் | – | 35 -37 |
| சிறுவர் கதைகள் | – | 38 -39 |
| பாவேந்தரும் நாவேந்தரும் | முருகவே பரமநாதன் | 40 -42 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 43 -45 |
| கடவுளும் நானும் | மூனாக்கானா | 46 -47 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 48 -49 |
| குக சைவ சித்தாந்தம் | மு. கௌரிகாந்தன் | 50 -54 |
| நித்திய அன்னப்பணி | – | 55 -56 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 57 -60 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 61 -63 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 64 -68 |


PUBLIC LIBRARY
JAFFNA

அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஆவணிமாத ஞானச்சுடர் (188) மலருக்கான வெளியீட்டுரையினை உடுப்பிட்டி அ.மி. கல்லூரி ஆசிரியர் திரு க. ஸ்ரீசந்திரா அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு பல தடவைகள் வந்து போனாலும் இன்றுதான் முதன்முதலாக இந்த நிகழ்வில் கலந்து கொள்கின்றேன் என்று கூறியதோடு இங்கே வந்ததின்மூலம் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல செயற்பாட்டினை பூரணமாக அறியக்கூடியதாக உள்ளது என்றும், மீண்டும் மீண்டும் கலந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தினை சந்நிதிவேலவன் இவ் ஆச்சிரமப் பணிகள் ஊடாகத் தரவேண்டும் என்று கூறினார்.

ஒரு மலரை வெளியிடுவதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால் 188 மலர் எவ்வித தடங்கலுமின்றி வெளிவந்துள்ளது இது ஒரு ஆச்சரியப்படத்தக்க விடயம் அதற்கும் சந்நிதிவேலவனின் கருணைதான் காரணம் என்று கூறி தனது வெளியீட்டினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும், எழுத்தாளருமான திரு க. நடேசு (தெணியான்) அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தனது உரையில், தனது உடல்நலம் சிறிது பாதிக்கப்பட்டிருந்தாலும் வருடாவருடம் ஆவணி மாதம் வரும் சுடருக்குரிய மதிப்பீட்டினை மேற்கொள்வது வழக்கம். கடந்த பத்து வருடகாலமாக இச் செயற்பாடு என்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் இம் மதிப்பீட்டு நிகழ்வினைச் செய்வதில் பெரும் ஆர்வத்தோடும் விருப்பத்துடனும்தான் கலந்து கொள்கின்றேன் என்றும் கூறினார். தெணியான் அவர்கள் ஞானச்சுடர் சம்பந்தமாகவும் ஆச்சிரமப் பணிகள் பற்றிய கூறிய கருத்துக்களுடன் வெளியீட்டுரை நிகழ்த்திய ஆசிரியர் அவர்களது கருத்துக்களும் இணைந்தே காணப்பட்டது.

மேலும் தெணியான் அவர்கள் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி சபையோருக்குக் கூறியதோடு வருடாவருடம் இம்மதிப்பீட்டுரையின் காரணமாக சந்நிதிவேலவனை வந்து தரிசிக்கும் பாக்கியமும் கிடைக்கின்றது என்று கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

ஒற்றுமையாக வாழ முற்படாவிட்டால் அது நம் அனைவருக்குமே தீய விளைவுகளையே ஏற்படுத்தும் என்று சொல்வார்கள். ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வு என்பார்கள். அப்படியாயின் இன்னும் ஏன் யுத்தங்கள் இந்த உலகிலே என்பதே உலக மக்கள் அனைவருடைய அக்கறையாகவும் உள்ளது. இன, மத, மொழி, பிரதேச வேறுபாடின்றி உலக மக்களாகிய நம் அனைவருக்குமே இந்த அக்கறை அதிகமாகக் காணப்படுகிறது.

சிலரை நாம் நம்முடையவர்களாகவும் இன்னும் சிலரை அந்நியமானவர்களாகவும் கருதுகிறோம். எந்த அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றுபடுகிறோம் என்பதை நாம் மறந்து விடுவதே இந்த மன பேதம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம்.

நம் அனைவருடைய தந்தையும் இறைவன் ஒருவனே என்ற உணர்வு நமக்கிடையே உள்ள பல பிளவுகளை அடைக்கிறது. ஒரு குடும்பத்து சகோதரர்களுக்கிடையிலே எத்தனை மனக்கசப்புகள் இருந்தாலும், குடும்ப ஒற்றுமையின் நிமித்தம் அவற்றை எப்படியாவது தீர்த்துக்கொள்ளவே பார்ப்பார்கள். அதில் பெற்றோருடைய பங்கே அதிகமாக இருக்கும். சகோதரர்களை இணைக்கும் பாலமாக பெற்றோரே இருப்பார்கள். இன்றைய உலகத்திலும் இத்தனை பிளவுகள், யுத்தங்கள், பிரிவினை வாதங்கள் அனைத்தையும் இல்லாதொழித்து ஒற்றுமையை ஓங்கச் செய்ய நம்மைப் பெற்றவரால் படைத்தவராலேயே சாத்தியம்.

நம்மை நாம் உணரும்போது, இறைவனை உணர முடியும். இறைவனை உணரும்போது என்னால் எனது சகோதரர்களை உணரமுடியும். இதைவிட உலகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு மிகச் சிறந்த வழி இருக்க முடியாது. இந்த தத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# முருகா! நம்பியுந்தன் பாதம் பணிந்தோம்



செந்தமிழால் உன்னைப் பாடவும் – அடியார்
சேர்ந்த கூட்டம் தன்னை நாடவும்
வந்தனைகள் செய்து பணிவோம் – உந்தன்
மலரடியே தஞ்சம் நாமெடி

கந்தமா மலரைச் சூட்டியே – உந்தன்
கழலடியைப் பாடித் துதிப்போம்
சந்ததமெம் சிந்தனையிலே தோற்றிமுன்
சார்ந்து காட்சி ஆடிக்காட்டடா

இருக்கும் வரை எந்தனுடம்பு – யார்க்கும்
ஏதமின்றி முயலச் செய்யடா
வருத்தம் வந்து அழுந்த விடாதே – சந்நிதி
வாழும் முருகைய வேலையா

சோம உமா கந்த மூர்த்தியாய் – உன்னைத்
தோத்திரிந்து வணங்கி வருகின்றேன்
தான வள்ளி குஞ்சரியோடு – வேலுடன்
காட்சிதர ஓடி ஓடி வா

ஞானச்சுடர் வானச்சுடர்போல் – இந்த
வையமெல்லாஞ் சுற்றி வரவும்
ஆனபணி செய்யும் தொண்டர்க்கு – உந்தன்
அருண் மழையைப் பொழிந்து காட்டடா

பச்சைமயில் மீதிலேறிவா – உயர்ந்து
பறக்கும் கோழிக் கொடியுடனே வா
கச்சியப்பன் அருணகிரிக்கு போல – எனக்கு
காட்சிதர ஓடி வா வா

முதுபெரும் புலவர்
வை.க. சிற்றம்பலம் அவர்கள்

# புரட்டாதிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. M. யோகேஸ்வரதேவர்**
(நெல்லியடி, கரவெட்டி)

**Dr. K.இராதாகிருஷ்ணன்**
(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**Dr. G. உதயசீலன்**
(சுதுமலை, மானிப்பாய்)

**தலைவர்**
(தெல்லிப்பளை. ப.நோ.கூ.ச.தலைமையகம்)

**க. சொர்ணவடிவேல்**
(கதிர்காமசிங்கம் அன்சன்ஸ், அளவெட்டி)

**வே. தர்மராசா**
(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**
(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**
(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**
(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**
(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**இ. சுப்பிரமணியம்**
(இளை.கிராமசேவையாளர், ஏழாலை)

**ப. நடராசாக்குருக்கள்**
(ஆவரங்கால், புத்தூர்)

**சீ. முருகவேள்**
(கிராமசேவையாளர், இடைக்காடு)

**K. மங்கையற்கரசி**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**க. ஶ்ரீஸ்கந்தராசா**

(இளை. அதிபர், அச்சுவேலி)

**க. குமாரதாசன்**

(பொது சுகாதார பரிசோதகர், தும்பளை)

**க. இரத்தினம்**

(இளை. கிராமசேவையாளர், கரணவாய்)

**சோ. தனராசா**

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**

(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**சி. பகீரதன்**

(பிள்ளையார் கோயிலடி, கெருடாவில்)

**க. கந்தசாமி**

(வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

**ஆ. திருநாவுக்கரசு**

(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**

(தபால் வீதி, கொக்குவில்)

**ரஞ்சனதாஸ் ஜஷாந்**

(யாழ்ப்பாணம்)

**ச. வக்சலாதேவி**

(பூமகள் வீதி,அரியாலை)

**A. சிவதாசன்**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**ம. நிர்மலதாசன்**

(தில்லையர்கடையடி, கம்பர்மலை)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**க. கணேசலிங்கம்**

(சரவணபவனம், இணுவில் மேற்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி சு. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(புன்னாலைக்கட்டுவன்)

**நடராசா பாக்கியம்**

(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

**சி. சகுந்தலாதேவி**

(வங்களாலேன், மல்லாகம்)

**ஆ. விபுலானந்தராசா**

(இணுவில் மேற்கு, இணுவில்)

**ம. நாகேஸ்வரி**

(நவிண்டில்)

த. லதாசந்திரிக்கா
(மகாத்மா வீதி, நெல்லியடி)

க. நற்குணராஜா
(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

செ. இராஜேஸ்வரி
(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

சு. நவரட்ணம்
(முத்தமிழ் வீதி, கொட்டடி)

த. பூபாலன்
(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

கா.ஆ. சச்சிதானந்தம்
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

மா. கிருஸ்ணம்மா
(கைதடி, நுணாவில்)

செ. கேஷிகன்
(அரசடி வீதி, திருநெல்வேலி)

நா. கமலநாதன்
(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

செ. சோதிப்பெருமாள்
(சரஸ்வதி மஹால், இணுவில்)

கி. சிவப்பிரகாசம்
(புலோலி தெற்கு, புலோலி)

R. ஜெயராஜ்
(சிவராஜ் ரேடிங்கோ, பருத்தித்துறை)

Dr வை. தியாகராஜா
(முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம்)

சி. மகாலிங்கம்
(நீர்வேலி மேற்கு, நீர்வேலி)

சி. வேலாயுதம்
(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

# சிக்கன வாழ்வு

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

பணம், பொருள், பண்டம் எதுவாக இருப்பினும் அவற்றைச் சிக்கனமாக கையாள நாம் பழகிக்கொள்ளுதல் வேண்டும். அவற்றைத் தேவையறிந்து- அளவாக- விவேகத்துடன் செலவு செய்தல் "சிக்கனம்" எனப்படுகிறது. சிக்கனம், சிலர் நினைப்பதுபோல, உலோபித் தனமோ, கஞ்சத்தனமோ அன்று. பணத்தையோ, பொருள் பண்டங்களையோ தேவைக்கு அதிகமாக அல்லது அளவற்ற ஆசைகளால் உந்தப்பட்டு, ஆடம்பரச் செலவு செய்தல் என்பது ஊதாரித்தனம் ஆகும். பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைத்துவிட்டு, தமது குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைத்தன்னிலும் பூர்த்தி செய்ய மனங்கொள் ளாது, வாழ்ந்தும் வாழாதிருத்தல் என்பது உலோபித்தனம் எனப்படுகிறது. கஞ்சத்தனம், கருமித்தனம் என்றுகூட இதனைக் குறிப்பிடுவர். மனிதர்கள் நடுநிலையில் நின்று வாழ்தலே, விழுமிய வாழ்வாகும். அதைவிட்டு, ஊதாரித்தனம் பக்கமோ, கஞ்சத்தனம் பக்கமோ சாய்ந்து வாழ்தல் மனித வாழ்வு ஆகாது. சிக்கனமாக வாழ்தல் இவ்விரண்டிற்கும் இடையில், நடுப்புள்ளியில் நின்று, தேவைகளை இலட்சியம் செய்தும் ஆசைகளை அலட்சியம் செய்தும் வாழும் விழுமிய வாழ்வாகும். தமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கின்ற இத்தகைய விழுமிய வாழ்வை, வாழ்பவர்கள், மனிதருள் மாணிக்கங்களாகப் பரிணமிக்கின்றனர்.

காந்தியடிகள், மகாத்மா ஆனமைக்கு அவரின் சிக்கன வாழ்வும் ஒரு காரணம். கத்தியின்றி, இரத்தமின்றி இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வெற்றி கண்டவர். பிரித்தானிய வல்லரசின் முன்னூறு ஆண்டுகால ஏகாதிபத்திய ஆட்சியின் கோரப்பிடியிலிருந்து இந்திய மக்களுக்கு பூரண விடுதலை பெற்றுக்கொடுத்தவர். சத்தியம், அஹிம்சை என்னும் இரண்டினதும் பலம், ஆயுதம் மற்றும் படைபலங்களிலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமானது என்ற உண்மையை உறுதிசெய்து காட்டியவர்.

சத்தியம் என்பது, சிந்தனை, பேச்சு, செயல் என்னும் மூன்றிலும் தூய்மையுடனும் அதன்வழி உண்மையுடனும் இருத்தல். அஹிம்சை என்பது இன்னா செய்யாமை- அதாவது சிந்தனை, பேச்சு, செயல் என்பவற்றால் எவ்வுயிர்க்கும் எவற்றிற்கும் தீங்கு செய்யாமை ஆகும்.

மகாத்மா காந்தியடிகளின் தலைமைத்துவத்தை மேலும் மெருகு செய்தது, அவரின் எளிமையும் சிக்கனமும் நிறைந்த வாழ்க்கைமுறை என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நாமும் வாழ்க்கையில் உயர்வுபெற வேண்டுமாகில், மகாத்மா காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆசைகளைக் குறைத்து, ஊதாரித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, தேவைகளைப் பூர்த்தி செய்து, எளிமையும், சிக்கனமும் நிறைந்த

வாழ்க்கை முறையை மேற்கொள்ளுதல் அவசியம் ஆகும்.

பணம், பொருள், நேரம், ஆற்றல், உணவு, உடைகள் என்பவற்றை, உடையவர்கள் வீணாக விரயம் செய்வது இன்று அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டது. இவற்றை அளவாகப் பயன்படுத்தினால், வீசியெறிய வேண்டிய நிலைமை ஏற்படாது. ஊதாரித்தனம் கெடுதலை விளைவிக்கும் என்பது உணரப்பட வேண்டியது. வீசி எறியும் மிதமிஞ்சிய உணவுகளை, உணவு தேவைப்படுவோருக்கு வழங்கினால், எவ்வளவு நன்றாக இருக்கும். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்" எமது மரபு பேணப்பட வேண்டியது அவசியம்.

மகாத்மா காந்தியடிகளின் சிக்கன வாழ்வினை எடுத்துக் காட்டும் ஒரு சம்பவத்தை இனி நோக்குவோம்.

ஒருமுறை காந்தியடிகள், நீண்ட நேரமாக, எதையோ தனது ஆச்சிரமத்தில் தேடிக் கொண்டிருந்தார். இதனை அவருடைய உதவியாளராக இருந்த ஆங்கிலேய அம்மையார், மீராபென் அவதானித்துக்கொண்டிருந்தார். அம்மையார் ஆச்சிரமத்திற்கு வந்து கொஞ்ச நாட்கள்தான் ஆயிற்று. காந்தியடிகளிடம் அது பற்றிக் கேட்கவும் அவருக்குத் துணிவு வரவில்லை. தேடப்படுகின்ற பொருள் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகத்தான் இருக்க வேண்டும் என்பதைக் காந்தியடிகளின் முகக்குறிப்பில் இருந்தும், அவர் படும் வேதனையில் இருந்தும் அம்மையாரால் உணரக்கூடியதாக இருந்தது. மேலும், காலம் தாமதிக்காமல் காந்தியடிகளை அணுகி, "பாபுஜி, நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்? நானும் உதவட்டுமா?", என்று அம்மையார் மிகப் பணிவாகக் கேட்டார். அதற்குக் காந்தியடிகள், "நான் எனது பென்சிலைத் தொலைத்துவிட்டேன்" என்றார். "பென்சில் என்ன புதியதா? எந்த அளவில் இருக்கும்?" என்று அம்மையார் அக்கறையோடு கேட்டார். விவரங்களைத் தெரிந்து கொண்டால் தானும் சேர்ந்து தேடிப் பென்சிலைக் கண்டுபிடித்து விடலாம் என்பது அம்மையாரின் எண்ணம். காந்தியடிகள் தனது கைப் பெருவிரல் நீளம் இருக்கும்" என்றார். அங்கிருந்தவர்கள், அம்மையார் உட்பட இதைக்கேட்டுத் திகைத்துவிட்டனர்.

"இந்த ஒரு சின்னஞ்சிறிய பென்சிலைத் தவற விட்டதற்காகவா, இத்துணை சிரமப்படுகிறார்" என்பது அங்கிருந்த ஒவ்வொருவர் மனத்திலும் எழுந்த ஆதங்கம்.

"மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது" என்பதை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் அங்கு நின்ற ஒருவர், ஓடிச்சென்று புதியதொரு பென்சிலை எடுத்துக்கொண்டு வந்து காந்தியடிகளிடம் நீட்டினார். காந்தியடிகள் அப்பென்சிலை வாங்க மறுத்துவிட்டார். அவர் ஏன் வாங்க மறுத்தார்? அவரே கூறுகிறார்:

"கடந்த மூன்றுவார காலமாக இப்பென்சிலையே பயன்படுத்தி வந்தேன். இன்னும் சில நாட்களுக்கு அதனைப் பயன்படுத்த முடியும். அதற்குள் அதனை எங்கேயோ வைத்துவிட்டேன். எப்படியும் தேடிக் கண்டுபிடித்து விடுவேன். எதையும் வீணாக்கக் கூடாது, என்பதில் நான் கண்ணுங் கருத்துமாய் இருக்கிறேன்", என்று கூறிவிட்டுத் தேடலைத் தொடர்ந்தார் காந்தியடிகள்.

ஒரு பொருள், பயன்படக்கூடிய நிலையில் இருக்கும்போது, அதனை வீசிவிட்டுப் பதிலாகப் புதியபொருள் ஒன்றை எடுத்துப் பயன்படுத்துவது ஊதாரித்தனம் ஆகும். அத்துடன் அது ஒரு குற்றச்செயலும் ஆகும். ஊதாரித்தனம் செய்பவர்கள் விரைவில்

வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு அதற்குரிய தண்டனையையும் அனுபவிப்பர் என்பது அனுபவ உண்மையாகவும் உள்ளது.

காந்தியடிகள் தான் தவறவிட்ட பென்சிலைத் தொடர்ந்தும் தேடினார். ஈற்றில் அப்பென்சிலைக் கண்டுபிடித்து விட்டார். அந்தக் கணத்தில் அவர் பெற்ற இன்பமும், வெளிப்படுத்திய மகிழ்ச்சியும் அளவிடற்கரியன; வார்த்தைகளால் விளக்கிக் கூற முடியாதன.

அத்தகைய இன்பக் களிப்பில் காந்தியடிகள் மிதந்தமைக்கு உரிய காரணம் என்ன? என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

காந்தியடிகள், தான் ஒரு பாரதூரமான குற்றச் செயலைச் செய்வதிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டதாகத் தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பெருமகிழ்ச்சிக்கு அதுவே காரணம் ஆகும். பென்சிலை ஊதாரித்தனம் செய்த குற்றத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக்கொண்டதில் அத்துனை ஆனந்தம் அவருக்கு! எந்தப் பொருளையும், சிறிதோ, பெரிதோ, ஊதாரித்தனம் பண்ணலாகாது, அநாவசியமாக வீண் விரயம் செய்யக்கூடாது என்பதில் மிகக் கண்டிப்பாக இருந்தார். அதற்குத் தானே பல சந்தர்ப்பங்களில் முன்மாதிரியாகவும் விளங்கினார். "சிக்கனம்" என்னும் நடுவுநிலைமை அவரின் தாரகமந்திரம். சிக்கனமாக வாழ்பவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். அத்துடன் பிறரையும் மகிழ்ச்சியுடன் வாழச் செய்கின்றனர்.

உலகில் உள்ள எல்லாப் பொருள்களும், சொத்துக்களும் மற்றும் உடமைகளும் எல்லோருக்கும் சொந்தமானவை. ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளுக்கேற்ப அவற்றைப் பெற்று, ஆண்டு அனுபவிப்பதற்கு உரித்துடையவர். தமது தேவைகளுக்கு அப்பால் அவற்றைப் பெற்று வீண்விரயம் செய்யவோ, ஆடம்பரச் செலவு செய்யவோ எவர்க்கும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் மனித உரிமை மீறல் ஆகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பிறருக்குச் சேரவேண்டியவற்றைப் பறித்துக்கொள்வது, அவர்களுக்குச் சேரவிடாமல் தடுப்பது என்பன பாவகாரியங்கள். அவற்றிற்குப் பிராயச்சித்தம் கிடையாது.


இன்று பொதுவாக ஒரு குடும்பத்தில், ஒரு நாளில் வீசியெறியப்படும், வீணாக்கப்படும், உணவுகள், தின்பண்டங்கள் என்பன பல குடும்பங்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியன என்ற விஷயத்தை எம்மில் பலர் உணர்ந்து கொள்வதில்லை. இதை விளங்கிக் கொள்வதற்குப் பொருளியல் நிபுணர்களின் ஆய்வு அறிக்கையை எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை. இதை நாம் புரிந்துகொண்டால் சமுதாயத்தில் "இலர் பலர், உளர் சிலர்"- அதாவது வறுமையில் வாடுபவர்கள் பலர்; செல்வத்தில் திளைப்பவர் சிலர் ஆக உள்ளமைக்கான காரணத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

ஊதாரித்தனம், வீண்விரயம் என்பன பலரின் வாழ்வுரிமையை மறுக்கின்றன. கஞ்சத்தனம், கருமித்தனம் என்பன அதை மேற்கொள்பவரின் வாழ்வுரிமையை மறுக்கின்றன. எனவே, இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நடுவுநிலையில் உள்ள சிக்கனம் எல்லோரினது வாழ்வுரிமைகளையும் உறுதிசெய்கின்றது. எனவே, சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு, கண்ணியம் நிறைந்த வாழ்வு, எல்லோரையும் வாழ்விக்கும் வாழ்வு என்பதை உணர்ந்து கொள்வோமாக.

விஞ்ஞானம் இல்லாத சமயம் மூடத்தன்மையுடையது.

# சிவ சின்னங்கள்

திரு இரா. சாந்தன் அவர்கள்



எந்தப் பிராணியின் உடம்பிலும் துர்க்கந்தம் வீசும். எல்லாப் பிராணிகளின் மலமும் துர்க்கந்தமே. மற்றப்பிராணிகளைவிட மனிதனுடைய தேகமே அதிகத் துர்க்கந்தம் உடையது. ஆனால் பசுமாட்டின் மலம் அத்தகையது அல்ல. எல்லாவிதமான மலத்தையும் போக்குவது பசுமாட்டின் மலம். எல்லா மலத்தையும் தோஷத்தையும் போக்கும் சக்தி அதற்கு இருப்பதனால் அது மிகவும் பரிசுத்தமானது. அந்த மலத்தில் இருந்து உண்டாகும் பஸ்மம் மிகவும் பரிசுத்தம் உடையது. பசுமாடு மற்றப் பிராணிகளைவிடப் பரிசுத்தமான மிருகம். எல்லாத் தெய்வங்களும் பசுமாட்டின் சரீரத்தில் இருக்கின்றன என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

பரமசிவனுக்கு உரிய ஐந்து அடையாளங்களில் பஸ்மமாகிய விபூதி ஒன்று. அவனுக்குப் பிரீதியான மற்றோர் அடையாளம் ருத்திராட்சம். வில்வம் மற்றொன்று. வில்வம் மகாலக்சுமி வாசம் செய்யும் விருஷம். பஸ்மம் சத்திய ஸ்வரூபமானது. அதை சாட்சாத் பரமசிவனுடைய விஸ்வரூபமே என்று சொல்ல வேண்டும்.

பிரபஞ்சம் எல்லாம் அழிந்தாலும் அழியாமல் இருப்பவன்தான் பரமசிவன். உலகத்தில் உள்ள பொருள் எல்லாம் எரிந்து போனால் பஸ்மம் ஆகிவிடுகிறது. அதை எரித்தால் அது அழிவதில்லை. பஸ்மமாகவே நிற்கும். சிவஸ்வரூபமும் அத்தகையதே.

உருத்திராஷத்தின் பெருமை மிக அதிகம். உலகத்தில் எவ்வளவோ விருஷங்கள் உண்டு. எவ்வளவோ விதமான விதைகள் உண்டு. உருத்திராஷத்தைச் சிவபெருமானுடைய அடையாளமாகப் பெரியவர்கள் சொல்கிறார்கள். உருத்திரனுடைய நேத்திரம் அது. அதைத் தமிழில் "திருக்கண்மணி" என்று சொல்லுவார்கள். உருத்திராஷ மாலையை அட்சமணி மாலை, திருக்கண்மணி மாலை என்று சொல்வது வழக்கம். மற்றை விருட்சங்களுடைய விதைகளுக்கு இல்லாத சிறப்பு இதற்கு உண்டு.

இயற்கையில் துளையோடு உண்டாவது உருத்திராட்சம் ஒன்றுதான். இந்த உருத்திராட்சம் பாரத தேசத்தில் நேபாளத்தில் இருக்கிறது. ஜாவாதீவில் உண்டு. ஜாவாவைச் சார்ந்த இடங்களில் விஷ்ணு ஆலயம், சிவாலயம் வேதசாஸ்திரங்கள் எல்லாம் இருந்தன. வேறு இடங்களிலும் வைதீக மதம் பரவியிருந்தது. பாலித்தீவில்

இன்றும் சிவ ஆராதனை செய்கிறார்கள். சிவாகம விதிப்படி வழிபடுகிறார்கள். அங்கே உருத்திராட்ச மரம் இருக்கிறது.*

பஸ்மம், உருத்திராட்சம், வில்வம், படிகலிங்கம், பஞ்சாட்சரம் ஆகிய ஐந்தும் சைவ சின்னங்கள் ஆகும். நாக்கிலே தரிப்பது பஞ்சாட்சர மந்திரம், வேதங்கள் எல்லாம் சிவஸ்வரூபம், பிரபஞ்சத்திற்கெல்லாம் காரணமாக இருக்கிற பரமேசுவரனுடைய சுவாசமே வேதம் என்று சொல்லப்படுகிறது. சுவாசம் என்பது மூச்சு. மூச்சு இல்லாவிட்டால் மனிதன் வாழமுடியாது. மூச்சு இல்லாமல் மனிதன் இல்லை. வேதம் ஈஸ்வரனுடைய சுவாசம். வேதம் இல்லாமல் ஈஸ்வரன் இல்லை. ஈஸ்வரன் இல்லாமல் வேதம் இல்லை. இரண்டும் ஒன்றோடு ஒன்று ஐக்கியமாக உள்ளவை.

நாக்கைச் சுத்தமாக்கிக் கொள்ளச் சிவநாமத்தை சொல்வதுபோல் இருதயத்தைச் சுத்தமாக்கிக் கொள்ள ஸ்படிக ரூபமாகச் சிவபெருமானைத் தியானம் செய்யவேண்டும். மனதில் எதைத் தியானிக்கிறோமோ அந்த ஸ்வரூபம் ஆகிவிடுகிறோம். தேகத்தை பஸ்மத்தாலே பரிசுத்தம் செய்து நாக்கைச் சிவநாமா வளியினால் பரிசுத்தம் செய்து கண்டத்தில் உருத்திராட்சம் அணிந்துகொண்டு வில்வத்தைக் கையிலே தாங்கிச் சிவபெருமானை ஸ்படிகஸ்வரூபமாகத் தியானித்து மனதை பரிசுத்தம் செய்து அர்ச்சிக்க வேண்டும்.

ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்காக இந்தச் சின்னங்களை அணிகின்றேன் என்று நினைத்தால் உள்ளே பரிசுத்தம் ஏற்படுகிறது. புறத்திலே தரிக்கும் சின்னங்கள் ஆத்மாவுக்கு உபயோகப்படுகின்றன. "ஆத்ம பிரயோஜனத்திற்காக இதைச் செய்கிறேன்" என்ற நினைவு வேண்டும். இதனாலே மோட்சத்தை அடையலாம்.

சகல வஸ்துக்களும் அழிந்தாலும் கடைசியில்தான் ஒன்று மட்டும் சத்தியமாக இருக்கிற பஸ்மத்தை நெற்றியிலும், ஸ்வபாவமாகத் துவாரங்களுடனும், முகங்களுடனும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற உருத்திராட்சத்தைக் கழுத்திலும், சாட்சாத்மகாலட்சுமியின் வாசஸ்தலமாகிய வில்வத்தைச் சிரசிலும், வேதத்தின் மத்திய மணிக்கு நடுநாயகமாக மணிக்கு ஒப்பாக விளங்குகிற "சிவ" என்னும் இரண்டு அட்சரத்தையும் நாக்கிலும், சுத்த ஸ்படிகப் பிரகாச மகாலிங்கத்தை உள்ளத்திலும் தரித்துக்கொண்டு அடையவேண்டும். நாம் எதை நினைக்கிறோமோ அது மயமாக ஆகிவிடுகிறோம். சுத்த ஸ்படிகமாக விளங்குகின்ற பரமேசுவரனை நினைத்தால் நம் மனசு சுத்த ஸ்படிகமாக ஆகும். அவன்தான் எப்போதும் ஆனந்த சொரூபியாக இருக்கிறான். ஆகவே விபூதி, உருத்திராட்ச தாரணம், பஞ்சாட்சர ஜெபம், உள்ளே சுத்த ஸ்படிக லிங்க சொரூபியாக பரமேசுவரனுடைய தியானம், வில்வார்ச்சனை இவற்றை எப்போதும் நாம் செய்துகொண்டே இருத்தல் அவசியமாகும்.

---

*ஒரு குறிப்பு:

சந்நிதியான் ஆச்சிரம வைத்தியசாலைக் கட்டிடத்தின் தெற்மேற்கு மூலையில் மூன்று ஆண்டுகளுக்கு முன் நாட்டப்பட்ட உருத்திராட்ச மரம் இன்று பெரு மரமாகி வளர்ந்து நிற்கிறது.

---

சமயம் இல்லாத விஞ்ஞானம் அகம் பாவம் நிறைந்தது.

(தொடர்ச்சி...



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைமிக
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)



மரகதக் குவா அன் மாமணிப் பிறக்க
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொரு மின்றே பயிறொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
தாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்துந்

**பதவுரை:**

மரகதம் குவாஅல் மாமணி பிறக்கம் மின் ஒளி கொண்ட பொன் ஒளி திகழ- பச்சை மணியின் குவியலும் மாணிக்க மணியின் குவியலும் ஒன்று சேர்ந்து மின்னல்

கலாச்சாரமே நல்லொழுக்கத்தை நமக்குப் போதிக்கிறது.

ஒளியைத் தன்னகத்துக்கொண்ட பொன்னொளி போல விளங்கா நிற்ப; திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்- அது தமது போருக்கு இடையூறாக நிற்றலின் அதுகண்ட பிரமனும் திருமாலும் மேலும் கீழும் சென்று அதன் முடியையும் அடியையும் தேடினாராக அவர்க்கு அகப்படாமல் ஒளித்தும், முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்- நூல்களிற் சொல்லப்பட்ட முறையால் உள்ளத்தினை ஒன்றுபடுத்தி நின்று தன்னைக் காண முயன்றவர்க்கு ஒளித்தும், ஒற்றுமைகொண்டு நோக்கும் உள்ளத்து உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும்- அன்பினால் ஒன்றுபட்ட தன்மையினைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும் உள்ளத்தினையுடைய, உற்றார் வருந்தத் தாம் இறைவனைக் காண மேற்கொண்ட விரத முயற்சியால் உறைத்து நிற்பவர்க்கு ஒளித்தும், மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்- மந்திரங்களின் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து உருவேற்றி அவற்றால் தன்னைக் காண முயன்று வருந்தினர்க்கு ஒளித்தும், இத்தந்திரத்தின் காண்டும் என்று இருந்தோர்க்கு அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்- இந்த உபாயத்தினாற் காண்போம் என்று இருந்தோர்க்கு அவ்வுபாயத்தினால் அவ்விடத்தில் அறியப்படாமல் மறைந்தும் முனிவு அற நோக்கி- வெறுப்பு இன்றி ஆராய்ந்து பார்த்து, நனி வர கௌவி- அன்பினால் மிகுதியாகப் பற்றி, ஆண் என தோன்றி- ஒருகால் ஆண் என்று கருதும்படி தோன்றியும், அலி என பெயர்ந்து- மற்றொருகால் அலி என்று கருதும்படி இயங்கியும், வாள் நுதல் பெண் என ஒளித்தும்- பிறிதொருகால் ஒளிபொருந்திய நெற்றியினையுடைய பெண் என்று கருதும்படி மறைந்தும், சேண்வயின் ஐம்புலன் செலவிடுத்து- நெடுந்தூரத்தே ஐம்புல அவாக்களைச் செல்லுமாறு நீக்கி, அரு வரை தொறும் போய்- அரிய மலைகள் தோறும் சென்று, துற்றவை துறந்த வெற்று உயிர் ஆக்கை- தாம் முன்னர் நுகர்ந்தவற்றை விடுத்தமையால் உயிர் மட்டும் தங்கிய ஊனில்லாத உடம்பினையுடைய அருதவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்- செய்தற்கரிய தவத்தினைச் செய்தோரது தூய அறிவினுள் புலப்படினும் அவர் பிழை திருந்துமாறு ஒளித்தும், ஒன்று உண்டு இல்லை என்ற அறிவு ஒளித்தும்- ஒரு முழு முதற்பொருள் உண்டு இல்லை என்ற அறிவிக்கு ஒளித்தும், பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும் ஒளிக்கும் சோரனை கண்டனம்- பழைய காலநீதுப் பழகுந்தோறும் இந்நாளில் பழகுந்தோறும் தன்னை மறைத்துக்கொள்ளும் கள்வனைக் கண்டோம், ஆர்மின் ஆர்மின்- ஆரவாரியுங்கள் ஆரவாரியுங்கள், நாள் மலர் பிணையலின் தாள் தளை இடுமின்- புதிய மலர்களாற் கட்டப்பட்ட மாலைகளைக் கொண்டு திருவடியைக் கட்டுங்கோள். சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின் பற்றுமின் என்றவர் பற்று முற்று ஒளித்தும்- வலம் வாருங்கள்; சூழ்ந்து நில்லுங்கள்; பின் தொடருங்கள்; விடாதேயுங்கள் பிடியுங்கோள் என்று கூறியவர்களது பற்றுதற்கும் அகப்படாமல் முழுவதும் மறைந்தும்;

மரகதக்குவாஅல் மாமணிப் பிறக்கம் மின்னொளி கொண்ட பொன்னொளி திகழ என்றது திசைமுகனும் திருமாலும் தம்முட்டாமே பெரியரெனச் செருக்கிப் போர் செய்தபோது அவ்விருவருக்கும் நடுவே இறைவன் இறைவியொடு மின்னொளி போன்ற பேரொளியையுடைய பொன்னொளியுடையவனாகத் தோன்றி நின்றமையைக் குறித்தது. அவ்வடிவு அம்மையும் அப்பனும் இரண்டறக் கலந்த தொன்றாதலின் "மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்" என்றார்.

உண்ணும் உணவிற்கேற்பவே மனிதனின் இயல்பும் அமைகிறது.

மரகதம்- பச்சை மணியைக் குறிக்கும். வடசொல். "மரகதம் அரிமணி பச்சை மணியே" என்பது பிங்கலந்தை (6:112). குவா அல்- கூட்டம். "அணியி னோங்கலும் பன்மணிக் குவாஅல்களும் எனக் கந்தபுராணத்து (திருநகர 39) வருதலுங் காண்க. இறைவியின் நிறம் பச்சையாதலின் "மரகதக் குவாஅல்" என்றார். "கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை, வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லைக் கண்டேனே" எனத் திருவாசகத்தும், (கண்ட 10) "மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்" எனத் தேவாரத்தும் (நாவு 57:1) வருவனவும் காண்க. மாமணி- மாணிக்கம். "மாமணி செம்மணி மாணிக்கம் பதுமராகமென்பது மப்பெயர்க்குரித்தே" எனப் பிங்கலந்தையில் (6:109) வருதல் காண்க. பிறக்கம்- கூட்டம் "பிணத்தின் பிறக்கம்" (கம்ப நாகபாச 156) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் திருவுரு செந்நிறமாதலின் "மாமணிப் பிறக்கம்" என்றார். "வம்பனேன் றன்னை யாண்ட மாமணியே" (வாழா 2) என வருதலும் காணக. திசைமுகன் என ஒருமையாற் கூறித் தேறினா் எனப் பன்மையால் முடித்தமையின் திருமாலும் கொள்ளப்படும். "மாலொடு நான்முகன் தேடி ஓவியவ ருன்னி நிற்ப ஒண்கழல் விண்பிழந்தோங்கி... விரிசுடராய் நின்ற மெய்யன்" (குயில் 8) என அடிகள் அருளியவாறுங் காண்க. சென்று எனப் படர்க்கை வினையாற் கூறினமையின் அவர் சென்றது இறைவன் பாலன்றி மேலும் கீழுமாகிய படர்க்கையிடத்தென்பது புலப்படும். செருக்குற்றனராதலின் திசைமுகனுக்கும் திருமாலுக்கும் இறைவன் வெளிப்பட்டிலா். "இருவரும் தம் சலமுகத்தால் ஆங்காரந் தவிரார் காண்" (சாழல் 6) என்பதனால் இருவரும் செருக்குற்றமை அறியப்படும்.

உள்ளத்தை ஒருவழிப்படுத்துவதற்கு நூல்களிற் சொல்லிய முறையால் தன்னுள்ளே மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் தானங்களில் உள்ளத்தை நிறுத்தி இறைவனை அறிய முயலும் யோகிகளுக்கும் அவன் சேயனாய் நிற்றலின் "முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்" என்றார். முறை- நூல். "இளைய பாலகன், முறைவரை வேனென முயல்வதொக்குமால்" எனக் கந்தபுராணத்தும் (அவை 1) வருதல் காண்க. உளி, மூன்றாம் வேற்றுமைப் பொருள்படுவதோர் இடைச்சொல்.

ஒற்றுமை கொண்டு நோக்குமுள்ளத்து உறைப்பவா், உற்றவர் வருந்த உறைப்பவர் எனத் தனித்தனி இயையும்- கொல்லாமை வாய்மை கள்ளாமை புலாலுண்ணாமை கள்ளுண்ணாமை முதலிய நித்திய விரதங்களுடன் மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் கடவுளை வழிபட்டு நிற்கும் தம் நிலையினைக் கண்டு தம்மிடத்து அன்புடைய உறவினர் வருந்தா நிற்கவும், தாம் மேற்கொண்ட விரத நிலையில் உறைத்து நிற்பவர்க்கும் இறைவன் வெளிப்படாது நிற்றலின் "உற்றவர் வருந்த உறைபவர்க்கொளித்தும்" என்றார். உறைப்பவர் என்றது விரதியரை.

மறை- மந்திரம். மந்திரங்களை அவற்றின் எழுகோடிகளாகிய நம, சுவதா, சிவாகா, வௌஷட், வஷட், கும், பட் என்னும் அந்தங்களோடு தாம் விரும்பிய இறைவனின் அருளைப் பெற உருவேற்றி வழிபடும் உபாசகர்களுக்கும் இறைவன் காண்டற்கரியவன்

ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரி வரையில் ஆத்மீகக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

என்பார். "மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்" என்றார். மறைத்திறம் என்பதற்கு வேதங்களின் பொருட்கூறுபாடு எனினுமமையும்.

முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ தாம் செய்த பெரிய தீவினைப் பயன்களை நீக்குதற்குரிய உபாயங்களாக நூல்களிற் கூறப்பட்ட கழுவாய்களை முறைப்படி செய்து இறைவன் அருளைக் காண்போம் என்று இருப்போர்க்கும் இறைவன் காண்டற்கரியனாகலின் "இத் தந்திரத்திற் காண்டு மென்றிருந்தோர்க்கு அத்தந்திரத்தின் அவ்வயி னொளித்தும்" என்றார். தந்திரம் என்பதற்கு ஆகமம் முதலிய சமய நூல்கள் எனவும் உரைக்கலாம். தந்திரம்- நூல் என்னும் பொருட்டாதல், "அதிகாரம் பிடகமாரிடத் தந்திரம் பனுவ லாகமஞ் சூத்திர நூலே" என்னும் பிங்கலந்தையாலும் (7:299) அறிக காண்டும் என்னும் உளப்பாட்டுத் தன்மை வினைமுற்று எதிர்காலம் காட்டுதல், "உம்மொடு வருஉங் கடதற எதிர்காலம் பற்றிவரும்" எனச் சேனாவரையர் உரைத்தமையால் (தொல் வினை சூ5) அறிக. அவ்வயின்- அவ்விடத்து. வயின், ஏழனுருபு "கலந்தநோய் கைம்மிகக் கண்படாதென்வயின்" (கலி 46:23) என்புழிப்போல.

தாந்தாம் கைக்கொண்ட சமயவழி நின்று இறைவனைத் தாந்தாம் அறிந்தவாறு வணங்கி நிற்பாரைக் கருணைக்கடலாகிய இறைவன் வெறுப்பின்றி நோக்கி அவர் வழிபடும் உருவினைப் பற்றி நின்று அருள்புரியுமிடத்துத் தன்னைப் பெண்ணுருவில் வழிபட்டார்க்கு ஆணுருவிற்றோன்றியும், ஆண் பெண் உருவில் வழிபட்டார்க்கு அவ்விரண்டு மல்லாத அலியுருவிற்றோன்றியும், ஆண் உருவில் வழிபட்டார்க்குப் பெண்ணுருவிற் றோன்றியும் அவரவர் அறிவின் சிற்றெல்லையினையும் தனது பேரெல்லையினையும் தெரிவித்தருளுவான் என்பார். "முனிவற நோக்கி நனிவரக் கெளவி ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து வாணுதற் பெண்ணென வொளித்தும்" என்று அருளிச் செய்தார். முனிவு- வெறுப்பு. நனி என்பது மிகுதிப்பொருள் உணர்த்துவதோர் உரிச்சொல்.

ஐம்புல அவாக்களை விடுத்து அடைதற்கரிய மலைகளின் முழைஞ்சுகளிற் சென்று உணவை விடுத்து அதனால் உயிர்மட்டு முடைத்தாய் மெலிந்த உடலையுடைய செயற்கரிய தவத்தினையுடைய முனிவர்களது தூய அறிவின்கண் இறைவன் வெளிப்பட்டும், பின்னர் அவர் திருந்துமாறு ஒழித்தலின், "ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும் போய்த் துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்" என்றார். இதனால் இறைவன் கொடுத்த உடம்பையும் கருவிகளையும் யான் எனது என்னும் அறிவுமுனைப்போடு வாட்டி வருத்தி முயலும் தவமுயற்சியாற் பெரும்பயனின்று என்பது கூறியபடியாம்.

சேண்வயின் விடுத்து என இயையும். ஐம்புலன் என்றது ஐம்புல அவாக்களை. துற்றவை- நுகர்ந்தவை. "துற்றவை துற்றும் துணையிதழ் வாய்த்தொட்டி" (பரி 20:51) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. துறத்தல்- விடுதல். யாக்கையையுடைய அருந்தவர் என்க. காட்சி- அறிவு. "துனியில் காட்சி முனிவர்" (முருகு 137) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வெற்றுயிர் யாக்கை- உயிரை மாத்திரமுடைய ஊனற்ற உடம்பு. திருந்தவொளித்தும் என்றது அவர் யான் எனது என்னும் அறிவு முனைப்பு நீங்கி அருள்வழி நின்று தவஞ்செய்து திருந்துவதற்காக ஒளித்தும் என்றவாறு.

ஆயுதங்களைவிட தீய கருத்துக்களே இக்காலத்தில் பயங்கரமாக உள்ளது.

அமணர்கள் தமது கடவுளாகிய அருகனது உண்மையை அஸ்தி நாஸ்தி என்கின்ற உண்டு இல்லை என்னும் வாதத்தால் ஆராய்ந்து துணிவர். அவர்களது அறிவிற்கும் இறைவன் அறியப்படான் என்பார். "ஒன்றுண்டில்லை யென்றறி வொளித்தும்" என்றார்.

"ஐயுறு மமணரும் அறுவகைத் தேரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை"
(ஞான திருவெழுங்கூற்)

எனத் தேவாரத்தும் வருதல் காண்க. ஒன்று- கடவுள் என்ற ஒரு பொருள். என்ற அறிவு- என்றறிவு என அகரம் தொக்கு நின்றது.

பயில்தொறும்- பழகுந்தோறும். "பயிறொறும் பண்புடையாளர் தொடர்பு" (குறள் 783) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சோரன்- கள்வன். இறைவனை எக்காலத்தும் காண முடியாமையின் "ஒளிக்கும் சோரனை" என்றார். ஆர்மின் ஆர்மின் என்ற அடுக்கு ஒருவகையிலும் காணப்படாது ஒளிக்கும் சோரனைக் கண்ட மகிழ்ச்சி மிகுதியைக் காட்டவும் அச்சோரன் மீட்டும் ஒளிக்குமுன் அவனைக் காண்டற்கு எல்லோரும் வம்மின் என்பதனைக் காட்டவும் வந்தது. நாண்மலர்- அன்றலர்ந்த மலர். பிணையல்- மாலை சுற்றுமின் அரும்பொருளைக் கண்டமையால் வலம் வாருங்கள். சூழ்தல்- நாற்புறமும் நெருங்கி நிற்றல். தொடர்தல்- பின் தொடர்தல், விடேன்மின்- பின்தொடர்தலில் விடேன்மின்.

என்றவர் என்றது தத்துவ ஞானிகளை. துறவு நெறிக்கண் நின்று இறைவனைக் கண்ட தத்துவஞானிகளுக்கும் யான் எனது என்னும் செருக்குக் கெடாதவழி இறைவன் அவர்களது பற்றுதலுக்கும் அகப்படான் என்பார். "ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்" என்றும், "பற்றுமுற்றொழித்தும்" என்றும் அருளினார். பற்று முற்றும் ஒளித்தும் என்றது அவர்கள் உபாயங்கள் முழுவதற்கும் ஒழித்தும் என்றவாறு. இங்கே, "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" எனத் திருவள்ளுவ நாயனார் கூறிய நெறியில் நிற்பார்க்கும் இறைவன் ஒளிப்பன் என அருளியதை,

"பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே"
(உயிருண்ணி 6)

என அடிகள் அருளியமையானுமறிக. ஒளித்தும் (115) தானேயான தன்மை (146) என இயையும். (தொடரும்...

## மாயை


நிர்க்குணப் பிரம்மமே! உன்னுள் என்னை ஒடுங்கச் செய்வாயாக! இறைவனை அடையவிடாமல் ஜீவர்களை மயக்குவதே மாயையின் வேலை. இறைவனது எல்லைக்குள் நுழைந்துவிட்டால் மாயையால் நம்மைத் தொட முடியாது. அந்நிலையில் இறைவன் மாயையைத் தனது காலால் உதைத்துத் தள்ளி விடுவான். யார் என்னையே சரணடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள். (கீதையில் கிருஷ்ணர்) -கோபுரம்-

தெய்வத்தின் விருப்பப்படியே இந்த உலகம் நடக்கிறது.

# இந்துமதத்தில் சக்தி வழிபாட்டின் சிறப்பு

திரு செ. சுரேந்திரா அவர்கள்

இந்து மதத்தில் வேத உபநிடதக் கருத்துக்களை ஏற்று எழுச்சிபெற்ற சமயங்கள் "வைதீக சமயங்கள்" என்றும் வேத உபநிடதக் கருத்துக்களை ஏற்காது மறுத்து எழுச்சி பெற்ற சமயங்கள் "அவைதீக சமயங்கள்" என்றும் இரண்டுவகையான சமயங்கள் இருக்கின்றது. அந்த வகையில் வைதீக சமயங்களாக அறுவகைச் சமயங்கள் விளங்குகின்றன. அறுவகைச் சமயங்களாக சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் விளங்குகின்றன. இந்த வகையில் சக்தியை முழுமுதலாக கொண்ட சமயமே சாக்த சமயம் ஆகும். இறைவனை அன்னையாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும். சக்தியை முழுமுதலாக கொண்டவர்களை சாக்தர்கள் என அழைப்பர். சிவபெருமான் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதன் இயக்கமாக விளங்குகின்றாள்.



இந்து மதத்தில் சக்தி வழிபாட்டின் தோற்றமானது சைவ சமயத்தின் முன் தோன்றி மூத்த நாகரீகமான சிந்து வெளியில் தோற்றம் பெற்றது. இதற்கு எடுத்துக் காட்டாக ஆயிரத்து ஐநூறிற்கும் (1500) அதிகமான தரைப் பெண் வடிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. இவை சாந்தமுக, கோரமுக, தாயும் சேயுமான கருணைமுக வடிவங்கள் என மூன்று வகைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய வடிவங்கள் இன்று இந்துக்களினால் வழிபடப்பட்டு வரும் சரஸ்வதி, காளி, முருகனுடன் உமை

உண்மையான கல்வி பெறுவது இரண்டாவது பிறப்பைப் போன்றது.

அமா்ந்திருக்கும் முகம் போன்றவற்றினையே எடுத்துக் காட்டப்படுகின்றது. மேலும் சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட மொகஞ்சதாரோ இலட்சனை ஒன்றிலே பெண்ணொருத்தி தலைகீழாக நின்று கொண்டிருக்க அவளது வயிற்றிலிருந்து செடி ஒன்று வளருவது போன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் "உலகின் தோற்றத்திற்கு உமையே காரணம் எனும் இந்து தத்துவத்தினையே விளக்குகின்றது என கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சிந்துவெளியில் தோற்றம் பெற்ற சக்தி வழிபாடானது அடுத்துவரும் வேதகாலத்தில் வளர்ச்சி பெற்றது. வேதகாலத்தில் உசை, சவிதா, ராத்திரி போன்ற பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டமையும், ஆறுகள், நதிகள் பெண் தெய்வங்களாகவும் வழிபடப்பட்டமையும் சக்தி வழிபாட்டின் சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது.

வேத காலத்தினை அடுத்துவரும் காலப்பகுதியான இதிஹாச புராண காலத்திலும் சக்தி வழிபாடு சிறப்படைந்திருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக சக்திக்குரிய பெயர்களாக தாட்சாயினி, பார்வதி என இதிஹாச காலத்தில் அழைக்கப்பட்டமையும் மார்க்கண்டேய புராணத்தில் சக்தியின் பெருமைகள், வடிவங்கள் பற்றிய கருத்துக்கள் காணப்பட்டமையும் ஆகும். அடுத்து வரும் காலப்பகுதியான உபநிடத காலத்தில் கேன உபநிடதத்தில் முதன் முதலில் சக்தியை பரம்பொருள் என குறிப்பிடுகின்றது.

உபநிடத காலத்தை அடுத்துவரும் குப்தர் காலத்திலும் சக்தி வழிபாடு சிறப்படைந்திருந்தது. இதற்கு எடுத்துக் காட்டாக சக்திக்குரிய கோயில்கள் காணப்பட்டமையும் குப்தர் கால மன்னனான சந்திர குப்தனுடைய நாணயத்தில் சிங்கத்தின்மீது அம்மன் எழுந்தருளியிருக்கும் நிலை பொறிக்கப்பட்டமையும் சக்தி வழிபாட்டின் சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு வடநாட்டில் வளர்ச்சி பெற்ற சக்தி வழிபாடானது தென்னிந்திய வரலாற்றுக் காலங்களிலும் சிறப்புற்று விளங்குகின்றது. தென்னிந்திய வரலாற்றுக் காலங்களில் முதலாவது காலமான சங்க காலத்திலும் சக்தி வழிபாடானது சிறப்படைந்திருந்தது. இதற்கு எடுத்துக் காட்டாக சங்க காலத்தில் ஐவகை நிலங்கள் வழிபடப்பட்டிருந்தன. இதில் பாலை நிலத்து தெய்வமாகக் கொற்றவை எனும் பெண் தெய்வத்தினை மக்கள் வழிபட்டிருந்தமையும் அகநானூறு எனும் பாடலில் "ஓங்கு புகழ் கானமர்ச் செல்வி" எனக் குறிப்பிடப்பட்டமையும் சக்தி வழிபாட்டின் சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது.

அடுத்துவரும் சங்கமருவிய காலத்திலும் மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் சக்தியானவள் காளி, சரஸ்வதி, துர்க்கை, மகாலட்சுமி போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். மேலும் காரைக்கால் அம்மையார் சிவனைப் போற்றிப் பாடும்போது சக்தியினையும் போற்றிப் பாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பல்லவர் காலத்தில் சக்தி வழிபாடானது சைவத்துடன் இணைந்து வளர்ந்து சென்றுள்ளதனை காண முடிகின்றது. இதற்குச் சான்றாக நாயன்மார்கள் பாடிய பாடல்களில் "பிடியதனுருவுமை, மாதர்ப்பிறைக் கண்ணியானை, அப்பன்நீ அம்மைநீ, அம்மையே அப்பா ஒப்பிலா மணியே, மங்கையர்க்கரசி" போன்ற தேவார திருவாசகங்கள் எடுத்துக் காட்டுகின்றது.

மனித சமுதாயத்தின் பண்பை உருவாக்குவதில் உணவுக்கு முக்கிய பங்கு உண்டு.

சோழர் காலத்தில் சோழர்கள் தங்களுடைய ஒவ்வொரு வெற்றிக்கும் ஒவ்வொரு கோயிலை அமைத்திருந்தமை சக்தியின் சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது. மேலும் சக்திக்குரிய கோயில்களாக ராஜராஜேஸ்வரி கோயில், காஞ்சி காமாட்சி கோயில் தோற்றம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் விஜய நகர நாயக்கர் காலத்தில் குமரகுருபரர் சக்தியைப் போற்றி சகலகலாவல்லிமாலை எனும் பாடலையும் அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதி எனும் நூலினையும் சக்திமீது பாடியமையும் சக்தி வழிபாட்டின் சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு சிறப்புப் பெறும் சக்தி வழிபாடுகளில் நவராத்திரி விரதம் சிறப்புப் பெறுகின்றது. புரட்டாதி மாதத்து வளர்பிறையின் முதல் ஒன்பது நாட்களிலும் சக்தியை வீரம் தரும் துர்க்கை எனவும் செல்வம் தரும் இலட்சுமி எனவும் கல்வி தரும் சரஸ்வதி எனவும் மும்மூன்று இரவுகள் வழிபடுதலாகும்.

அன்னையின் துர்க்கை வடிவம் எம்மிடமுள்ள அசுரக் குணங்களையும், விலங்கு மனத்தினையும், அரக்கத் தன்மைகளையும் அகற்றி எம்மை சாத்வீகம் நிறைந்த மனிதர்களாக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்விக்கின்றது. துர்க்கை தரும் வீரம் பாவங்களை விலக்குவதற்கு எமக்கு வேண்டிய துணிவினை தருகின்றது.

அன்னையின் மகாலட்சுமி வடிவம் மனித வாழ்வில் ஒழிக்கப்பட வேண்டிய வறுமையை அழிப்பதற்கு செல்வத்தை நமக்கு வழங்கி எம்மை வாழ்விக்கின்றது.

சரஸ்வதி வடிவம் மனித வாழ்வில் இடம்பெறக் கூடாத அறியாமையினை அகற்றி அறிவொளி ஏற்றி மக்களை வாழ்வாங்கு வாழ வழிவகுக்கின்றது. நவராத்திரியில் ஒன்பதாம் நாள் மகாநவமி எனப்படும் அந்நாள் சரஸ்வதி விழாவாக கோயில்களில், பாடசாலைகளில், வீடுகளில், அலுவலகங்களில் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரியின் பத்தாம் நாள் விஜயதசமி நன்னாளாகும். இது மகாநோன்பு அல்லது மானம்பூத் திருவிழா எனவும் அழைப்பர். மானம்பூத் திருவிழாவன்று மகுடாசுர சங்கார நிகழ்வு ஆலயங்களில் நடைபெறுவதனை அவதானிக்கலாம். அதாவது மகுடாசுரன் எனும் அசுரன் காட்டெருமை வடிவம் தாங்கி தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். தேவர்கள் அத்துன்புறுத்தல்களை தாங்க முடியாது சக்தியிடம் போய் முறையிட்டனர். சக்தியானவள் மகுடாசுரன் எனும் அசுரனை சங்கரித்த நாளே விஜயதசமி நன்னாளாகும்.

சக்தி வடிவங்களில் வித்தைகளுக்கு அதிபதியாக விளங்கும் சரஸ்வதி வடிவமானது உயர்ந்த தத்துவ விளக்கத்தினை விளக்குகின்றது. அவள் அணிந்திருக்கும் வெண்மையான சேலையானது எமது உள்ளம் தூய உள்ளமாக எப்பொழுதும் இருக்க வேண்டும் எனும் தத்துவத்தினையும் விரிந்த வெள்ளைத் தாமரை மலரானது நாம் விரிந்த உள்ளம் அல்லது பரந்த மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டும் எனும் தத்துவத்தினையும் கையிலே உள்ள படிகமாலையானது கற்றதைச் செயற்படுத்த வேண்டும் எனும் தத்துவத்தினையும் கையிலே உள்ள ஏடானது உலகத்து அறிஞர்களது அறிவை முதலீடாகக் கொள்ள வேண்டும் எனும் தத்துவத்தினையும், அதாவது கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு எனும் தத்துவத்தினையும், வீணையானது நாம் நுண்கலைகளைக் கற்க வேண்டும் என்பதனையும், அபயகரமானது கற்றதை எண்ணி மலைக்கக் கூடாது. அதாவது ஆணவம் கொள்ளக்கூடாது எனும் தத்துவத் தினையும் விளக்குகின்றது.

பிறரிடம் அன்பும் சகிப்புத் தன்மையும் காட்டவேண்டுமேயன்றி பழிவாங்கும் போக்குக் கூடாது.

சக்தியை வழிபடுவதனால் கல்வி, செல்வம், வீரம் முதலான இம்மைப் பயன் களையும் மறுமைப் பயன்களையும் பெறுவர். சக்தியை வழிபட்டு ஈடேற்றம் பெற்றவர்களில் குமரகுருபரர், அபிராமிப்பட்டர், மகாகவி பாரதியார், காளிதாசர், இராம கிருஸ்ண பரம ஹம்சர், தாயுமானவர், சுகேதன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். குமரகுருபரர் சக்தியைப் போற்றி சகலகலாவல்லி எனும் நூலில் “பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்” எனவும், அபிராமிப்பட்டர் சக்தியின் பெருமைபற்றி அபிராமி அந்தாதி எனும் நூலில் “ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை அண்ட மெல்லாம்..... தொழு வார்க்கு ஒரு தீங்கில்லையே” எனவும் தாயுமானவர் பராபரக் கண்ணி எனும் நூலில் “எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே” எனவும் பாடியிருந்தமையும் சக்தியின் சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது. மகாகவி பாரதியாரும் சக்தியைத் தெய்வமாக வைத்து பல பாடல்களை பாடியுள்ளார். இதற்கு எடுத்துக் காட்டாக “எங்கெங்கு காணினும் அவள் சக்தியடா எழு வண்ணம் அவள் கடலடா” என்று பாடியுள்ளார்.

மேலும் இராமகிருஷ்ண பரமஹம்சர் சக்தி வழிபாட்டில் நின்று முத்தி கண்டவர். எல்லாம் சக்தியின் வடிவம் என நினைத்தவர். தனது மனைவியை சக்தியின் வடிவமாக கருதியவர். கிருதயுகத்திலே சுகேதன் எனும் அசுரனொருவன் இருந்தான். அவன் பக்தியிற் சிறந்தவன். அவன் தனது பகைவரால் இராச்சியத்தை இழந்து மனைவியோடு வனத்துக்குச் சென்றான். அங்கு ஆங்கிரசர் என்னும் ஒரு முனிவர் அவனைக் கண்டார். அவனது நிலைமையை அறிந்த அவர் நவராத்திரி பூசையின் மகிமையையும் வழிபடு முறையையும் அவனுக்கு உபதேசித்தார். சுகேதன் நவராத்திரி பூசையைப் பக்தி சிரத்தையோடு அருட்டித்துத் தனது நாட்டை மீண்டும் அடைந்தான் எனப்படுகின்றது.

எனவே சக்தியை வழிபட்டால் அதிக வரங்கள் பெறலாம் என்று சொல்லப்படு கின்றது. இவ்வாறு சிறப்புப் பெறும் சக்தியை வழிபட்டு எல்லோரும் அருள் பெறுவோமாக. எனவே இவ்வாறு சிறப்புப்பெறும் சக்தியின் பெருமை பற்றி அபிராமிப் பட்டர் பின்வருமாறு பாடுகின்றார்.

“தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே”

“மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்”


| |
|---|
| இயற்கையை வென்றுவிடத் துடிக்கிறான் மனிதன். தோன்றிய யாவற்றையும் என்றைக்காவது மறையச் செய்யும் இயல்புடைய இயற்கை இந்த மனிதனையும் விட்டுவைக்கப் போவதில்லை. இதை அறிந்தும் அறியாதவன் போல் நடிக்கிறான் மனிதன். |

சில சமயங்களில் வாய் திறந்து பேசுவதைவிட பேசாமல் இருப்பது மிக்க பயனளிப்பதாகும்.

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

–வாரியார் சுவாமிகள்–



31. பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே.

## பதவுரை

மயில்வாகனனே- மயிலை வாகனமாகக் கொண்ட முருகப் பெருமானே! பாழ் வாழ்வு எனும்- பாழ்படுவதான உலக வாழ்வு என்கின்ற, இப்படுமாயையிலே- இந்தப் பெரிய மாயை ஆகிய படுகுழியிலே, வீழ்வாய் என- நீ விழுவாயாக என்று, என்னை விதித்தனையே- அடியேன் தலையில் எழுதி விட்டீரே! தாழ்வு ஆனவை- (இதற்குக் காரண மான) இழிவான செய்கைகள், செய்தனதாம் உளவோ- அடியேன் முன் செய்தவைகள் இருக் கின்றனவோ? இனி நீ வாழ்வாய்- இனி நீ வாழ் வீராக.

## பொழிப்புரை

மயில்வாகனக் கடவுளே! பாழ்படுவதான உலக வாழ்வு என்னும் இம்மாயைப் படுகுழியில் என்னை விழுமாறு தேவரீர் விதி செய்து அனுப்பினீரே! அடியேன் முற்பிறப்பில் செய்த குற்றங்கள் இருக்கின்றனவோ? எது எப்படியிருப்பினும் இருக்கட்டும். இனி நீர் வாழ்வீராக.

## விரிவுரை

**பாழ் வாழ்வெனும் இப்படுமா யையிலே:-**

உலக வாழ்வானது நிலையில்லாதது. தோன்றி மறையும் இயல்புடையது.

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்"

-சுந்தரர் (7-78-1)

மாயை என்பது மாயையின் காரியமாகிய தநு கரண புவன போகங்களைக் குறிக்கும். இம் மாயப் படுகுழியில் விழுமாறு என்னை விதித்தருளினீரே! நான் என்ன பிழை செய்தேன்?

**வீழ்வாயென என்னை விதித்தனையே:-**

இறைவன் ஒவ்வோர் ஆன்மாவும் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைக்கு ஏற்ப நியாயத் தீர்ப்புக் கூறி வினைப் பயன்களை நுகருமாறு, பிறக்க வைக்கின்றார்.

நாம் நுகரும் இன்ப துன்பங்கட்குக் காரணம் நாம் செய்த நல்வினை தீவினைகளேயாகும். இறைவன் காரணனல்லன்.

இவறலும் இகலும் இன்றி எவர்க்குமோர் பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம் சிறந்தநோன் பியற்றிடாதே
தவறு செய்தனம் என்றெம்மை, நோவதே தக்க தென்றார்.

-கந்தபுராணம்.

ஒரு தாய் ஒரு குழந்தைக்கு நல்லுணவு வேண்டுமளவு தருகின்றாள். மற்றொரு குழந்தைக்கு உப்பில்லாத கஞ்சி தருகின்றாள். காரணம் யாது? நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கு உடல் நிலைக்கு ஏற்பத் தருகின்றாள். தாயின் கருணையிலே தாரதம்மியம் இல்லை. அதுபோல் இறைவன் முன் செய்த நலந் தீங்குகளின் பயனாக சுக துக்கங்களை விதித்தருளுகின்றார்.

மாயை ஒரு படுகுழி. அதனால் வீழ்வாய் என்று கூறினார். அதில் வீழ்த்தியருளினார்.

**தாழ்வானவை செய்தன தாமுளவோ:-**

இப் பிறப்பில் அடியேன் அநுபூதி பெறுவதற்கு முன் மாய வாழ்வில் உழன்றேனே, அப்படி உழல்வதற்குக் காரணம் யான் முற்பிறப்பில் ஏதோ குற்றங்கள் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்த குற்றங்கள் என்னவோ? அறிகிலேன்.

**வாழ்வாயினி நீ:-**

ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தேவரீர் வாழ்வீராக.

அன்றி, "முருகா! உன்னடிமையாகிய என்னை இந்த மாயப்படுகுழியில் தள்ளிவிட்டீரே. இது நியாயமா? எனக்கு உம்மையன்றிப் புகலிடம் ஏது? என்னை ஆட்கொள்பவர் உம்மையன்றி யாருளர்? நம்பிய என்னை இப்படிச் செய்தீரே! இனி நீர் நன்கு வாழ்ந்து போம்!" என்று நிந்தாஸ்துதியாகப் பாடுகின்றார்.

"காயங்காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே"
"மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே"

-சுந்தரர்.

**மயில்வாகனனே:-**

முருகா! நூற்றெட்டு யுகங்களாக ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்டு அமரர்களையும் முனிவர்களையும் அடக்கிக் கொடுமை புரிந்த சூரபன்மனுக்கு உன் விசுவரூபத்தைக் காட்டி அவனை மயிலாகக் கொண்டு அருள் புரிந்தீரே!

அவனை விடவா நான் கொடியவன்? அவனுக்கு அருள் புரிந்த கருணைக் கடலாகிய நீ எனக்கு அருள்புரியக் கூடாதா? என்று வேண்டுகின்ற குறிப்பு இதில் உள்ளடங்கி உள்ளது.

**கருத்துரை**

மயில்வாகனா! அடியேன் ஏதோ குறை செய்தேன் போலும். அதனால் என்னைப் பாழ் வாழ்வில் தள்ளி விட்டாய். ஆயினும் நீ வாழ்க என்றுதான் நான் உன்னைத் துதி செய்வேன். (தொடரும்...

## அழல் தீர்த்து அருள் காட்டும் அழகன் செல்வச் சந்நிதியானே

தேங்கு புகழ் திரிபுரமழித்த சங்கரன் மழலையேற்ற சந்நிதியே
தூங்கு புகழ் பூவரசில் உதித்த சிவகங்கைச் சீரோன் மைந்தனே
பாங்குயரும் பூங்கழ கதிர்காமர் கண்ணுற்ற கந்தவேட் பெருமானே
ஓங்குயர் அழல்தீர்த்து வரம்பெற்று மயில்வாகனமாய் நின்றவனே!

அத்துவிதபதமேயாகி ஆச்சிரமத்தத்துவப் பொருளே போற்றி
தத்துவ அடியார்கானும் ஐம்பொறி அருளே போற்றி!
தத்துவத்திலன்று நின்று செந்தில்வேற் கருளேயானாய் போற்றி
வித்தக அறிவுக் கெட்டாவிண்மதி மோகன் சேவைக்கதிபதியானாய் போற்றி!

உடலினுக் குயிரேபோல என்றும் அடியவர்க் கெளிதாய் போற்றி
உள்ளத்திற்களிவுகூட்டி உடலினைகளிப்பாய் போற்றி!
உடலுயிர் ஓங்கவைக்கும் தானமுறுப் பொருளே போற்றி
உடனுறை வுயிர்குமெட்டா வொளிப்பெரும் வேலே போற்றி!

பாவமெலாம் நீக்கியாள மேலான தொண்டையாறானாய் போற்றி
பாவுமடியார்முன் வரமுறக் உருக்கொண்டு வந்தருள்கந்தா போற்றி!
பகருமைந்தொழிலை நீக்கி மேலுயர்வினைப் பணிப்பாய் போற்றி
பாடுற்ற வுயிரைப்போக்கும் சுடர்ப்பெருங் கடலே போற்றி!

அடியவர்க் கெளிதாய் நின்று பலவுங்கைக் கொள்வாய் போற்றி
ஆற்றிடாப் போகங் கொள்ளப் புனர்த்தருள் போகியானாய் போற்றி!
மோட்சிடா யோகத்தார்க்கு முடித்தருள் யோகினான வேலே போற்றி
மெய்த்தொழிலெவர்க்குமிந்த அருள்நிறை சந்நிதியானே போற்றி போற்றி!!

-திரு. க. தெய்வேந்திரம்-


உழைப்பிலேதான் சுகம் உள்ளது.

# இயற்பகை நாயனார்

ஹேமலோஜினி குமரன் அவர்கள்

"இல்லையே என்னாத இயற்பகைக்கு அடியேன்" என சுந்தரமூர்த்தி நாயனார் போற்றும் இயற்பகை நாயனார் சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்தவர். சிவனடியாரைப் போற்றுதலும் அவர்கள் விரும்பும் பொருட்களைக் கொடுப்பதும் அவர்களுக்குப் பணி செய்வதுமாக வாழ்ந்து வந்தார். இவரது சிவத்தொண்டின் பெருமையை விளக்க நினைத்த சிவபெருமான் சிவனடியார் வேடம் பூண்டு திருநீற்று மேனியுடையவராக இயற்பகையார் முன் வந்து நின்றார். இயற்பகையாரும் அவரை உபசரித்து சிவனடியாருக்கு வேண்டுவன யாது என கேட்டு நின்றார்.

சிவவேடம் பூண்டு வந்த சிவனோ உம்மிடம் ஒரு பொருள்வேண்டி வந்தோம் எனக் கூறினார். அதற்கு இயற்பகை நாயனார் எம்மிடம் உள்ள பொருள் எதுவாகிலும் அது சிவனுடைமையே எனக் கூறி "எதுவாகினும் தருகிறேன்" என்றார். வந்த சிவனடியார் "உமது மனைவியை வேண்டி வந்தோம். எனக்குத் தந்துவிடும்" என்றார். தன்னிடம் உள்ள பொருளை சிவனடியார் கேட்டார் என்ற மகிழ்ச்சியால் தருகிறேன் எனக் கூறி தன் மனைவியிடம் நடந்தவற்றைச் சொல்லி அவள் சம்மதம் பெற்று சிவனடியாருடன் அனுப்பிவைத்தார். அதற்கு சிவனடியார் ஊர் எல்லைவரை துணையாக நீங்கள் வர வேண்டும் என்று கேட்க வீரர்கள் சகிதம் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். இடையில் தடுத்து நிறுத்திய உறவுக்காரர்களுடன் சண்டையிட்டு சிவனடியாரை ஊர் எல்லைவரை பாதுகாப்பாக அனுப்பி வைத்தார். ஊர் எல்லை வந்ததும் சிவனடியாரே நீர் செல்லலாம் எனக் கூறி மனைவியை விட்டுவிட்டு திரும்பிப் பாராது சென்றார் இயற்பகையார். இவரது மன வைராக்கியத்தைக் கண்ட இறைவன் "இயற்பகை முனிவா ஓலம் இவ்விடம் வருக விரைந்து" என ஓலமிட்டார். சிவனடியாருக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டதோ என நினைத்து அவ்விடம் நோக்கி ஓடோடிச் சென்றார். அங்கே சிவனடியாரைக் காணவில்லை. மனைவி மட்டும் நின்றாள். அத்தருணம் சிவபெருமான் இடபவாகனத்தில் உமையுடன் சேர்ந்து காட்சியளித்து இயற்பகையாரையும் மனைவியையும் தம்முடன் அழைத்துச் சென்றார். இறந்த உறவுக்காரர்களும் உண்மையறிந்து சிவப்பேறு பெற்றனர்.



நமது நாயன்மார்களின் செயற்பாடுகள் இவ்வுலக வாழ்வுக்கு ஒவ்வாததாக இருப்பினும் அவர்களது மனத்துணிபு, வைராக்கியம், பக்தி என்பவை அவர்களின் செயற்பாடுகள்மூலம் வெளிக்கொணரப்படுகின்றன. இந்த வகையில் இயற்பகை நாயனார் தன் மனைவியை சிவனடியாருக்கு இல்லையெனாது கொடுத்து சிவனருள் பெற்றார். இதனை திருத்தொண்டத் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி பின்வருமாறு சிறப்பிக்கின்றார்.

"செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன்றவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்த்த பெரும் புகழ்வற்
றெய்திய காவிரிப் பூம்பட் டினத்து வியற்பகையே"

## "உனக்கு மரணமென்பது இல்லை"

உனக்கு மரணமென்பது இல்லை, ஏனெனில்
உன் மனதில் மதுவுமில்லை மாதுவுமில்லை;

உனக்கு ஆசையென்பது இல்லை, ஏனெனில்
உன் வீட்டில் மேலதிகம் ஒன்றில்லை;

உனக்கு பதவியொன்று தேவையில்லை ஏனெனில்
உன் கடமைக்கு நிகர் வேறொன்றில்லை;

உனக்குப் பட்டங்கள் தேவையில்லை ஏனெனில்
உன் கஷ்டங்கள் அதற்குப் புரிவதில்லை;

உனக்கு பெரியவீடு தேவையில்லை ஏனெனில்
உனது இதயமோ பெரியதில்லை;

உனக்குப் பல நண்பர்கள் தேவையில்லை ஏனெனில்
உனது உழைப்போ போதுமானதில்லை;

உனக்குப் பல வாகனங்கள் தேவையில்லை ஏனெனில்
உனது கிரகபார்வை நல்லதாக இல்லை;

உனக்கு நான் என்ற மமதை இல்லை ஏனெனில்
நீ உனக்காக மட்டும் வாழவில்லை!

-கே.எஸ். சிவஞானராஜா -


தர்மத்தைச் சூது கவ்வும். பின்பு தர்மமே வெல்லும்.

(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 10. குதூகல ரமணன்

பழைய ஹாலில் நுழைந்து, பகவானை நமஸ்கரித்து எழுந்த முருகனார், பகவான் எதிரில், சோபா அருகில் சில புத்தகங்கள் அடுக்கப்பட்டு, புஷ்பம், மாலை முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டு பூஜை நடந்திருப்பதைக் கவனித்தார். அன்று சரஸ்வதி பூஜை என்று அப்போதுதான் அவருக்கு நினைவுக்கு வந்தது. அலங்கரித்து பூஜை செய்திருந்த புத்தகங்களையும், அருகில் சாந்த ஸ்வரூபியாய் சோபாவில் அமர்ந்திருந்த பகவானையும் மாறி மாறிப் பார்த்தார். அவர் முகத்தில் மெல்லிய கேலிச் சிரிப்புத் தோன்றி மறைந்ததைக் கவனித்த பகவான் அவரைக் கேள்விக்குறியுடன் பார்த்தது. பகவானுக்கும் முருகனாருக்கும் இடையில் இருந்த பந்தம் இணையற்றது. உலகம் உய்ய அனைவருக்கும் ஆன்மபோதனை செய் வதற்காகவே மனித உருத்தாங்கிய சத்பொருளின் சந்நிதியில் தான் இருப்பதை சந்தேகமற உணர்ந்திருந்த முருகனார், சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டு சொன் னார்: *பழுத்துச் செழித்த கரும்பை, இருக்கிப் பிழிந்தெடுத்த சாற்றை உருக்கி வார்த்தெடுத்த பதுமைபோல் உள்ளது நின் திருமேனி; சாறெடுத்த சக்கைபோல் உள்ளது இந்நூல் நின்திருமுன்.



"ஆயினும் இந்த நூல்களை தங்கள்முன் வைத்துப் பூஜித்ததை இன்னொரு கோணத்தில் நின்று பார்த்தால் அது எப்படி இருக்கிறதெனில், கருப்பஞ் சக்கையாகத் தோற்றமளிக்கும் எங்களிடமிருந்துதானே, இந்த அழகிய எழிலுருவம் தோன்றியது. அது அமைவதற்குக் காரணமாயிருந்த எங்களையும் கொஞ்சம் கௌரவியுங்கள் என்று வேண்டிப் பெற்றதைப் போல் தோன்றுகிறது இந்த பூஜை". இதைக் கேட்ட பகவான் புன்முறுவல் பூத்தபடியே தலையசைத்துச் சிரித்தார்.

அவர்களுக்கிடையே நிலவிய தனி உறவை நினைக்கும்போது முருகனாரின் "பல்லிப் பேச்சு" ஞாபகத்துக்கு வருகிறது. அனேகமாக அவர் ஹாலில் நுழையும்போதே, பகவான் அவரிடம் பேச ஆரம்பித்துவிடும். முருகனாரும் நமஸ்காரம் செய்யுமுன்பே பதிலளிக்க ஆரம்பித்து விடுவார். பேசிக்கொண்டே நமஸ்கரிப்பார். தரையில் நெடுஞ்சாண் கிடையாகக் கிடக்கிறோமே என்ற நினைவே இல்லாமல் பேசிக்கொண்டே இருப்பார். ஓணான் மாதிரி தலையைத் தூக்கி பகவானுடைய கேள்விகளுக்குத் தொடர்ந்து பதிலளித்துக் கொண்டிருப்பார். இந்த அபூர்வ காட்சியைப் பார்த்து, ஹாலில் இருக்கும்

*நம் கைக்குக் கிடைக்காமற் போன முருகனாரின் சில பாடல்களில் இதுவும் ஒன்று. ஆகையால் பாடலின் அமைப்புமுறை தெரியவில்லை.

மற்றவர்களுக்கு இது வினோதமாக இருக்கும். என்னிடம் முருகனார் இதைத் தெரிவித்து விட்டு, "இந்த 'பல்லிப் பேச்சை' விட்டுவிடும்படி விசுவநாதசுவாமி விளையாட்டாக என்னிடம் சொல்வார். ஏனென்றால் அந்தச் சமயத்தில் என் பேச்சு யாருக்கும் கேட்காதாம்-பகவான் உட்பட- நான் என்ன செய்வது? இதொன்றும் எனக்குத் தெரிவதில்லை. இந்த மாதிரி நேரங்களில் பகவானுக்கு உடனே பதில் சொல்ல வேண்டும் என்பதொன்றே என் நினைவில் நிற்கும். இந்த எண்ணம் மற்றெல்லாவற்றையும் விரட்டி விடும். சூழ்நிலையை மறந்து விடுகிறேன். என் உடம்பும், இந்த உலகமும் உள்ளிட்ட எல்லாம் மறைந்து விடுகின்றன." பகவானின் நிழலான முருகனார் பகவானிடம் கொண்டிருந்த பிரேமை ஈடிணையற்றது. அதை (பகவானை) அனேகமுறை விரும்பி விழுந்து வணங்குவார். அது ஹாலைவிட்டு வெளியேறும்போது தவறாமல் வினயமாக எழுந்து நிற்பார். சில சமயம் முருகனார் கவிதை புனைந்து எழுதிக் கொண்டிருக்கும்போது பகவான் வெளியே போகும். திரும்பிவரும் சமயம் அவர் இன்னும் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து, சோபாவுக்கு போகாமல் அவரருகில் சற்று நின்று, விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடரும். நிற்பது பகவானுக்கு மிகவும் கஷ்டம் என்பதும், சத்குரு நிற்கத் தான் உட்கார்ந்திருப்பது அபசாரம் என்பதும் ஒன்றுமே அவர் உணர்வில் உறைக்காமல் முருகனார் தொடர்ந்து பதிலளித்துக்கொண்டே போவார். ஹாலிலிருக்கும் மற்றவர்களுக்கு இது பகவானை அவமதிப்பதாகத் தோன்றும்; வெறுப்பூட்டும். ஆனால் முருகனாருக்கே, தான் இன்ன மாதிரி செய்கிறோமென்பது பிறர் சொல்லித்தான் தெரியவரும்.

இன்று பகவானின் கற்சிலை இருக்கும் புது அறையில், அன்று பகவானின் சந்நிதி மாத்திர விசேஷத்தால், சக்தி அலைகள் பொங்கி நிறைந்து பிரவகித்துக் கொண்டிருந்தன. கனகம்மாவுக்கு பின்பக்க மூலையில் உட்கார்ந்து தியானம் செய்வதுதான் விருப்பம். அன்று மற்றொரு பக்தையால், முன் வரிசையில், பகவானின் அருகாமையின் "பெருமை"யை அனுபவிக்கும்படி தூண்டப்பட்டு, முன் வரிசையில் போய் அமர்ந்து கொண்டார். பகவானின் சோபாவைச் சுற்றிப் போடப்பட்டிருந்த தடுப்பிலிருந்து வெளியேறும் வழியைத் தான் அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை அறியாமல், பகவானின் கனிந்த பார்வையால் மகிழ்வடைந்த மனதுடன், தியானத்தில் கண்களை மூடிக்கொண்டாள். ஏதோ ஒரு உந்துதலால் கண்களைத் திறந்த கனகம்மாவை பகவானின் கருணைப் பார்வை ஊடுருவவே, பரவசமடைந்து தன்னை மறந்த நிலையில் வெகுநேரம், சூழ்நிலையையும் புற உலகையும் அறியாமல் உட்கார்ந்திருந்தாள். பகவானுக்கு வெளியே போகும் நேரம் வந்தது. கனகம்மா வழியில் அசையாமல் அமர்ந்திருப்பது ஊழியருக்கு வெளிப்படையாகவே கோபமூட்டியது. கனகாவை முன்னால் உட்காரத் தூண்டிய அந்த பக்தையும் பரபரப்படைந்து அவரை எழுப்ப முயன்றார். பகவான் அதிருப்தியாக ஊழியரைப் பார்த்துவிட்டு, அந்தம்மாவையும், கனகாவின் தியானத்தைக் கலைக்க வேண்டாமென்று சைகை செய்தது. எல்லோரும் அறையைவிட்டு எழுந்துபோய் விட்டனர். கனகம்மாவோ முற்றும் ஆழ்ந்த தியான நிலையிலேயே இருந்தார். வாதத்தின் காரணத்தால் கஷ்டப்பட்டு பகவான், தடுப்பின் பக்கத்திற்கு நகர்ந்து, தடுப்பைச் சிறிது மாற்றச் செய்து, சற்று சிரமத்துடன் வெளியே நகர்ந்து வந்தது. கனகம்மாவின் தியானத்தைக் கலையாதிருப் பதற்காக பகவான், இவையனைத்தையும் சற்றும் ஓசையின்றி கவனமாகச் செய்தது. எழுந்து செல்லும்வரை கனகம்மாவின் மேலேயே பகவானின் கருணா கடாட்சம்

பதிந்திருந்ததை, அந்த பக்தை மூலம் பின்னரே அறிந்த கனகம்மா, தன் பேரதிஷ்டத்தை வியந்து மகிழ்ந்தார்.

* * * * *

பகவான் காலத்தில் சமையலறையில் உதவியாக இருந்தவர் சங்கரம்மா. புத்தி நுட்பமும், அமைதியான ஆனால் சற்று கடுமையான சுபாவமும் கொண்டவர். அனேகமாக யாரிடமும் பேசாமல் தன்னுள் ஆழ்ந்து இருப்பவர். தன் கடமைகளை நன்கு நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். அவரிடம் பழகப் பழக நான் அவரிடம் வைத்திருந்த மதிப்பு அதிகமாயிற்று. அவருடைய பெருமையைத் தெரிந்து கொண்டு நான், அவருடைய நிறைந்த நடுவுநிலைமையின் ரகசியம் என்ன என்று கேட்டேன். அவரும் பின்வருபவற்றை அன்புடன் தெரிவித்தார்.

"பகவானிடம் வருமுன்பே "ஞானவாசிட்டம்", "கைவல்ய நவநீதம்" போன்ற அத்வைத நூல்களை ஆர்வத்துடன் வாசித்து வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பதை தத்துவ ரீதியாக அறிந்ததனால், ஆன்மீக வாழ்க்கைக்குத் தயாராக இருந்தேன். பகவானைத் தரிசித்தவுடன் என் லட்சியத்தை அடைந்து விட்டதை உணர்ந்து கொண்டேன். எல்லா வேத, வேதாந்த நூல்களிலும் பரவசமாகப் புகழ்ந்து வர்ணிக்கப்பட்ட பரம்பொருள், சத்திய வஸ்து இதுவே. நான் அனுபவித்த அந்த சாந்தி எல்லாப் புறத்தடைகளையும், உள் தயக்கங்களையும் மீறி நின்றது. ஆனாலும் எண்ணங்கள் கலக்காத இந்த என் அமைதிதான் முடிவான நிலையா என்று எனக்கு சிறிது சந்தேகம் இருந்தது. ஒரு நாள், ஒரே ஒரு பணியாளைத் தவிர யாரும் அருகிலில்லாத சமயத்தில், பகவான் காலை உணவுக்குப் பின் கை கழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்து நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பகவானை அணுகி, அதன் மலர்ப் பாதங்களில் விழுந்து "கைவல்ய நவநீத"த்திலிருந்து பின்வரும் பாட்டை ஒப்பித்தேன்.

ஐயனே! எனதுள்ளே நின்று அனந்த ஜன்மங்களாண்ட
மெய்யனே உபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முக்தி நல்கும் உதவிக்கோர் உதவி நாயேன்
செய்யுமா றொன்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி.

என்னுடைய நிலையைப் புரிந்து கொண்ட பகவான் ஒரு அற்புத ஆனந்தப் பார்வையினால், முக்திநிலை உண்மையில் எளிதானது, இயற்கையானது என்பதை உறுதி செய்துவிட்டு, பின்வருமாறு சொல்லி அருளியது. "ஆமாம், ஆமாம், விடை அடுத்த பாடலிலேயே இருக்கிறதே", என்று அந்தப் பாடலை ஒப்பித்தது:-

சிட்டன் இவ்வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா எனஇருத்திக் கிருபையோடு அருளிச் செய்வார்
துட்டமாம் தடைகள் மூன்றும் தொடராமல் சொருப ஞான
நிட்டனா யிருக்கின் ஈதேநீ செய்யும் உதவியாமே.

(அறியாமை, சந்தேகம், தவறான அறிவு என்ற மூன்று தடைகளும் தடுக்க விடாமல், "தானா"க இப்படி நிலைத்திருத்தலே எனக்குச் செய்யும் பிரதியுபகாரம்.)

இந்த அம்மையார் தன் வாழ்நாளின் இறுதி நாளன்று கூட மாலைவரை ஆச்ரமத்தில் சேவை புரிந்துவிட்டு இரவில் அமைதியாக நாவில் பகவானின் நாமோச் சாரணத்துடன் அவன் திருவடி அடைந்தார். (தொடரும்...

ஒரு கொள்கைக்காக துன்பத்தை ஏற்றுக்கொண்ட பிறகு பின்வாங்கக்கூடாது.

# உடனே செயல்பட வேண்டிய "உத்தராயண காலம்"

செல்வி செ. ஐடா அவர்கள்

பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட ஒரு வருடத்தில் ஆறுமாத காலம் "உத்தராயண காலமாகும்" மறு ஆறு மாதம் "தட்சிணாயன காலமாகும்". உத்தராயண காலங்களில் செய்யப்படும் முக்கிய காரியங்கள் வெகு விரைவில் வெற்றிகளைத் தருகின்றன. தட்சிணாயன காலங்களில் செய்யும் காரியங்கள் மிதமான பலன்களையே கொடுக்கின்றன.

அவ்வாறெனில் "உத்தராயண" காலம் என்பது எப்போது வருகின்றது? என்கிற ஆவல் தோன்றுகிறது. அவை தை மாதம் தொடங்கி..... ஆனி மாதம் வரையிலுள்ள ஆறு மாத காலங்கள் உத்தராயண காலமாகும். ஆடி மாதம் தொடங்கி.... மார்கழி மாதம் முடியும் வரை உள்ள ஆறு மாத காலங்கள் தட்சிணாயன காலம் என்று பிரிக்கப்பட்டுள்ளது.

சூரியனுடைய சிறப்பான பார்வை தை மாத தொடக்கத்தில் பூமியின்மேல் விழுகின்றது. ஆகவேதான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற பழமொழியும் தோன்றியிருக்க வேண்டும். இந்த தத்துவத்தின் அடிப்படையில்த்தான் தை மாதம் முதல் நாள் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. வடமாநிலங்களில் இதனை "சங்கராந்தி" என்கிற பெயரில் கொண்டாடி வருகிறார்கள்.

பொங்கல் பண்டிகை அன்று தீப ஆராதனையை சூரியனுக்கு காட்டுவதும் இந்த உத்தராயண காலம் தொடங்குவதை அறிவிக்கவே செய்யப்படுகின்றது. ஆன்மீக சுடரொளியாகத் தோன்றி உலகம் முழுவதையும் ஆன்மீக வெள்ளத்தில் மூழ்கடிக்க சுவாமி விவேகானந்தரும் இந்த உத்தராயணம் தொடங்குகின்ற பொங்கல் திருநாளிலேயே திருஅவதாரம் செய்தார் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதனால்த்தான் குறைந்த வயதிலேயே பெரும் வெற்றிகளை அவர் பெற்றார் என்பதும் இதன்மூலம் அறியப்படுகின்றது.

இதற்கு மற்றுமொரு சான்றினையும் காட்ட முடியும். குருசேத்திர யுத்தத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. கௌரவர்களுக்கு சேனாதிபதியாக பொறுப்பேற்ற பீஷ்மர் பாண்டவர் படைகளை கடுமையாக தாக்குகின்றார். அவரைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியவில்லை. பஞ்சு மூட்டைகளை தீயானது பொசுக்குவதுபோல் பீஷ்மரின் ஆற்றலால் பாண்டவர் படைகள் பெரும் நாசத்தினை அடைந்தன.

நிலைமை இப்படியே நீடித்தால் பீஷ்மர் ஒருவரே அனைத்துப் படைகளையும் நிர்மூலமாக்கி விடுவார் என்று பாண்டவர்கள் கவலையடைந்தார்கள். அதன் காரணமாக "பேடி" என்கின்ற சிகண்டியை முன்னிறுத்திக் கொண்டு அர்ச்சுனன் பீஷ்மரிடம் யுத்தம் செய்கின்றான். அந்தப் பேடி பெண்ணாகப் பிறந்தவள் என்பதால் பீஷ்மர் எதிர்க்காமல் இருந்தார்.

அதனைப் பயன்படுத்திக்கொண்டு அர்ச்சுனன் அவர்மீது அம்புகளை செலுத்தினான். அப்போது எதிர்க்க ஆரம்பித்து இருந்தால்கூட பீஷ்மரை அர்ச்சுனனால் வீழ்த்தியிருக்க முடியாது. ஆனால் பேடியின் காரணமாக அவர் எதிர்க்காமலேயே நின்றுகொண்டிருந்தார். இதன் காரணமாக அவர் உடம்பிலே இடம் இல்லை என்று கூறும் அளவுக்கு அர்ச்சுனனின் அம்புகள் அவர்மீது பாய்ந்தன. "தேரில் இருந்து அவர் வீழ்ந்தார். அப்போது அவருடைய தோற்றமானது அம்புப் படுக்கையில் படுத்திருப்பது போல் காட்சியளித்தது.



அவருடைய உடம்பில் இடம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு அம்புகள் பாய்ந்தும் அவருடைய உயிர்பிரியவில்லை. அதற்கு காரணமும் இருந்தது. "அவர் எப்போது விரும்புகின்றாரோ அப்போதுதான் மரணம் சம்பவிக்கும்" என்கிற வரத்தினை அவர் பெற்றிருந்தார். அதனாலேயே அவரை விட்டு உயிர் நீங்காமல் நிலைபெற்றிருந்தது. அர்ச்சுனனுடைய அம்புகள் அவர் மீது பாய்ந்த காலம் தட்சிணாயன காலமாக இருந்தது.

அந்தக் காலகட்டத்தில் உயிர் பிரிந்தால் நற்கதி கிடைக்காது என்பதனால் அவர் உயிரினை விடாமல் இருந்தார். அதன் காரணமாக உத்தராயண காலம் வரும்வரை அவர் அம்புப் படுக்கையிலேயே இருந்தார். தட்சிணாயன காலம் முடிந்து உத்தராயண காலம் வந்த பிறகே அவர் உயிரினை விட்டதாக மகாபாரதம் தெரிவிக்கிறது.

"ஞாலம் கருதினும் கை கூடும்! காலம் கருதி இடத்தால் செயின்" என்று வள்ளுவர் பெருமானும் கூறுகின்றார். காலம் அறிந்து செயற்பட்டால் உலகமே வேண்டுமென்று ஒருவன் நினைத்தாலும் அது கிடைக்கப்பெறும் என்று அவர் கூறுகிறார்.

**பிரிக்கமுடியாத பந்தம்**

பாலில் வெண்மையாகவும், பழத்தில் சுவையாகவும் கலந்துறையும் இறைவா நானும் உன்னுடன் அல்லவா பின்னிப்பிணையும் நாள் வராதோ.

எமன் பாரபட்சமின்றி உயிர்களை இழுத்துச் செல்பவன். அவனது பிடியிலிருந்து தப்பவேண்டுமானால் சிவபெருமானை மார்க்கண்டேயன் இறுகப் பற்றியதுபோல நாமும் இறைவனைப் பற்றவேண்டும். எமன் பிடித்து இழுத்தால் என்னுடன் இறைவனை சேர்த்துத்தான் பிடித்து இழுக்க வேண்டும். அப்படிப் பிரிக்க முடியாதபடி இறைவனோடு மனதால் இணைந்திருக்க முயலவேண்டும்.

-கோபுரம்-

# தமிழினத்திற்கு ஏற்பட்ட சாபக்கேட்டினுள் இவை சில:

(தொடர்ச்சி..

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

இதுபோலவே திருத்தணிகை திருப்பதி முதலிய பல திருக்கோவில்களில் பழங்குடி மக்களே பண்டு தண்டமிழால் வழிபட்டு வந்து இடையே மாற்றப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.

ஆரிய மறையினும் தமிழ் மறையே சீரும் சிறப்பும் வாய்ந்ததென்பது அண்மையில் மறைந்த வள்ளலாரடிகளின் உள்ளம் நிறைந்த மாண்புரையாகும்.

ஆரிய நூலைச் சீரிய தமிழில் புனைபெருங் காப்பியமாக யாவரும் நினைவுற யாத்த கம்பரும் ஆரிய மறை மயக்கந் தருவதென்றும் அம்மொழியும் உலக வழக்கிறந்த தென்றும், கன்னிச் செந்தமிழ் மன்னிய முக்கட் செல்வனாய சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டதென்றும் அஃது எக்காலத்தும் இருவகை வழக்கிலும் பொன்றாது நின்று நிலவுவதென்றும் தென்றமிழ் நாட்டுமொழி செந்தமிழென்றும் ஆரிய மறையினும் உயர்ந்த நேரியதென்றும், தென்னாட்டுக் கடவுள் சிவபெருமான் என்றும் உண்மையை ஒரு சிறிதும் ஒழியாது உரைப்பாராயினர். அவ்வுண்மை வருமாறு:

உழக்குமறை நாலினுமு யாந்துலகம் ஓதும்
வழக்கினும திக்கலியி னினுமரபின் நாடி
நிழற்பொலிக ணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரைசு டர்க்கடவுள் தந்தமிழ் தந்தான்

(கம்பர் அகத்தியப்படலம் 41)

இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் விளங்கிய சிவப்பிரகாசரடிகள் ஆரிய வேதம் புரியாமொழியிலிருப்பதாலும் பொய்ம்மைத் தேவரை மெய்ம்மைத் தேவரென மயக்குவிப்பது உண்மையாலும் பெருமக்கள் மனத்தையொட்டி உருக்கும் தன்மைய தன்றெனவும் திருவாசகச் செழுந்தமிழ் திருமாமறை இருவகை வழக்கிலும் மக்களுக்குப் புரியும் கன்னிப் புண்ணியத் தமிழிலிருப்பதாலும் விழுமிய முழுமுதற் சிவபெருமான் ஒருவனே மெய்ப்பொருட் கடவுளென விளம்புவது உண்மையாலும் மக்கள் மனத்தை யெட்டிக் கனிவித்து உருக்கி அன்பராக்கும் உண்மையதெனவும் உரைத்தருளினர்.

இனி, இன்னொரு விதமாகத் திருமூலர் காலத்தை ஆராய்வோம். சிந்து நதிப் பிரதேசத்திலுள்ள அரப்பா- மொகஞ்சதாரோ என்னும் இடங்களில் அகழ்ந்து கண்டு பிடிக்கப்பட்ட கட்டங்களையும் பொருள்களையும் நோக்குமிடத்து அவைகள் எல்லாம் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும் அவைகள் எல்லாம் தமிழர் நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன என்றும் அந்நாகரிகம் ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்குப் பன்னூறாண்டுகள் முன்னர் இருந்த நாகரிகம் என்றும் அக்கட்டங்களில் தமிழில் உருவ எழுத்துக்களால் செதுக்கப்பட்ட பல வரிகள் காணப்படுகின்றன என்றும் அது தற்காலத்துக்கும் செப்புக் காலத்துக்கும் இடைப்பட்ட நாகரிகத்தைக் கொண்டது என்றும் தமிழருக்கே சிறப்பான மூக்கு ஆபரணங்களும் தாலி முதலிய கழுத்து ஆபரணங்களும் அக்கட்டங்களில் காணப்படுகின்றன என்றும் அறிஞர் சார் ஜான் மார்ஷல் என்பவரும் ரெவரெண்டு ஈராஸ் என்னும் பாதிரியாரும் கூறுகின்றனர்.

நண்பரைப் பாராட்டவேண்டியிருந்தால் பலர் முன்னிலையில் பாராட்டுங்கள்.

தமிழ் மொழியானது முதன்முதல் உருவ எழுத்துக்களையும் பின் கோல் எழுத்துக்களையும் பின் வட்ட எழுத்துக்களையும் பின் சதுர எழுத்துக்களையும் கொண்டு மாறுதல் அடைந்து வந்திருக்கின்றது.

உருவ எழுத்துக் காலத்திலேதான் தமிழிலிருந்து சீனம்- கடாரம்- சுமேரியம்- பினீசியம்- எகுபதியம் முதலிய பல மொழிகள் பிரிந்தன.

வட்ட எழுத்துக் காலத்தில் தமிழிலிருந்து தெலுங்கு- கன்னடம்- துளு- மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்தன.

கோல் எழுத்துக் காலத்தில் தமிழிலிருந்து மராட்டியம், வங்கம், கோசலம், பலுச்சியம், ஆரியம், பாளி, பிராகிருதம் முதலிய பல மொழிகள் பிரிந்தன. தமிழுக்குத் தற்காலம் சதுர எழுத்துக் காலம்.

ஆரியர்கள் வடமேற்குக் கணவாய்கள் வழியாய்த் தமிழ் நாட்டில் நுழைந்தது கோல் எழுத்துக் காலத்தில் ஆகும். அஃதாவது அரப்பா மொகஞ்சதாரோ முதலிய தமிழருடைய நகரங்கள் மண்மாரியால் அழிவெய்திய பிற்றைக் காலத்தில் ஆரியர்கள் முதன்முதல் சிந்துநதிப் பிரதேசத்தில் குடியேறி பிறகு கங்கை பாயும் நாட்டை விந்திய மலைவரை வென்று ஆரியாவர்த்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆரியா வர்த்தத்துக்கு இந்துஸ்தானம் என்று பெயர். இந்துஸ்தானம் என்ற பெயருக்கு இந்துக்கள் வசிக்கும் இடம் என்பது பொருள். ஆரியருக்கு இந்துக்கள் என்ற பெயர் பாரசீகர்களால் கொடுக்கப்பட்டது. "இந்து" என்ற பதம் பாரசீகமொழியைச் சேர்ந்தது.

ஆரியர் ஆரியாவர்த்தத்தை நிலைநாட்டிய காலத்தில் பல தமிழ் மன்னர்கள் விஸ்வாமித்திரர்- சனகர் முதலியோர் ஆரிய மதத்தை அனுசரித்துக் கொண்டார்கள். சைவராகவிருந்து சைனமதத்திற்குப் போன திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சைனர்கள் தங்களுடைய மதத்தலைமை கொடுத்ததுபோல, தமிழராயிருந்து ஆரிய மதத்தை அநுசரித்த விசுவாமித்திரருக்குப் "பிரமரிஷி"ப் பட்டமும் சனகருக்கு "ஞானரிஷி"ப் பட்டமும் ஆரியர்கள் அளித்து மேலும் பல தமிழர்கள் ஆரிய மதத்தை அனுசரிக்கும் பொருட்டு அவர்களைப் பெருமைப்படுத்தினார்கள். ஆரிய மதத்தை அநுசரிக்காத தமிழ் மன்னர்களும் ஏனைத் தமிழ்ச் சான்றோர்களும் விந்திய மலைக்குத் தெற்கே தக்கணம் என்ற தமிழ்நாட்டின் பகுதிக்கு ஓடிவந்து விட்டார்கள்.

தக்கணத்திலே தான் தமிழுக்குப்பின் வட்டெழுத்துக் காலம் துவங்கிற்று.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒக்டோபர் | 03 | புரட்டாதி | 17 | வியாழன் | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் | 04 | புரட்டாதி | 18 | வெள்ளி | அருணகிரிநாதர் |
| ஒக்டோபர் | 16 | புரட்டாதி | 30 | புதன் | கடையிற்சுவாமிகள் |
| நவம்பர் | 03 | ஐப்பசி | 17 | ஞாயிறு | மெய்கண்டதேவர் |
| நவம்பர் | 05 | ஐப்பசி | 19 | செவ்வாய் | பூசலார் |
| நவம்பர் | 07 | ஐப்பசி | 21 | வியாழன் | ஐயடிகள் காடவர்கோன் |
| நவம்பர் | 15 | ஐப்பசி | 29 | வெள்ளி | திருமூலர் |

இலட்சியம் குன்றாது உறுதி தளராமல் இருந்தால் தோல்வி ஏற்படாது.

# புருஷோத்தமனும் புல்லாங்குழலும்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்



கோகுலச் சிறுவர்களுடன் முதன்முறையாக குழந்தை கிருஷ்ணன் மாடுமேய்க்கப் புறப்படுகிறான். தாய் யசோதை திருஷ்டி சுற்றி அனுப்புகிறாள். கண்ணன் மாடு மேய்க்கப் போகும் அழகைக்கண்டு ஆனந்திக்க, அவனை யறியாமல் அவன் பின்னே செல்கிறாள் கோகுலத்துக் கோபி ராதிகா எனும் ராதை. ராதை கண்ணனைவிட வயதில் பெரியவள். கண்ணனின் ஸ்பரிசமும் தரிசனமும் இல்லாமல் அவளால் ஒரு கணம்கூட உயிர்வாழ முடியாத நிலை. ராதை பூமாதேவியின் அம்சம். ராதை ஜீவாத்மா. கண்ணன் பரமாத்மா. ராதா கிருஷ்ணன் உறவு காதல்- பிரேமை ஆகிய வற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட தெய்விகமான பந்தம். வானமும் பூமியும் தொடுவதைப் போலத் தோன்றும். ஆனால் தொடுவதில்லை. ராதையும், கிருஷ்ணனும் அடி வான சங்கமம்போல ஒன்றானவர்கள். இதுதான் உண்மையான ராதாகிருஷ்ண தத்துவம்.

மாடு மேய்க்கும் கண்ணனை ராதை மறைந் திருந்து பார்த்தாள். அப்போது எதிரே வளர்ந்திருந்த மூங்கிலொன்றை வண்டு துளைப்பதைக் கவனிக் கிறாள். மூங்கிலிலுள்ளே உள்ள தேனைப் பருக வண்டு மூங்கிலைத் துளைத்து உள்ளே செல்லும். இப்படி மீண்டும் மீண்டும் உள்ளே சென்று வந்து துளைகளைப் போட்டது. பின்பு பலமாக வீசிய காற்றில் மூங்கில் ஆட, துளைகள் வழியே நுழைந்த காற்று அழகான குழலோசையை எழுப்பியது. சட் டென ராதை மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. அந்த மூங்கிலை முறித்து ஒரு புல்லாங்குழலாக்கி கண்ணன் கையில் கொடுத்து ஊதச் சொன்னாள். கண்ணன் விரல்கள் லாவகமாக குழலை வருட, குழலை ஊத தெய்விக கானம் பிறந்தது. இதுதான் புல்லாங்குழல் தோன்றிய கதை.

பசுக்களும், பறவைகளும், வனவிலங்குகளும் தங்களை மறந்து கண்ணன் குழலோசையில் மயங்கி நின்றன. குழலிலிருந்து பிறந்த தெய்விக நாதம் ராதையைப் பக்திப்பரவசத்தில் ஆழ்த்தியது. கண்ணன் கையில் குழலைத்தந்து, குழலூதும்

ஆற்றலும் தூய்மையும் நிறைநிலையும் ஆத்மாவில் இருக்கின்றன.

கண்ணனாக்கியவள் ராதை. யமுனைக் கரையில் கண்ணன் இசைத்த குழலோசை எப்போதும் ராதையை பேரானந்தத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தது.

குழந்தைக் கண்ணன் இப்போது குருஷேத்திர வீரனாக, தர்மஸ்தாபனப் பணியில் ஈடுபடும் நேரம் நெருங்கியது. கண்ணன் குருஷேத்திரம் புறப்படுமுன் யசோதை, நந்தகோபர், கோபாலர்கள், கோபியர் எல்லாம் கண்கலங்கி துயரத்தால் வருந்தித் துடித்தனர். எல்லாரும் கலங்கிக் கதறிக் கொண்டிருக்க ராதை மட்டும் தெளிவாக இருந்தாள். கண்ணனை இதயத்தில் எப்போதும் நீங்காமல் தன்னிடமே வைத்துக் கொள்ளும் வழியினைத் தெரிந்திருந்தாள். கண்ணன் ராதையைச் சந்தித்துவிட்டு விடைபெற வந்தான். வழக்கம்போல ராதை தெய்விகமான ஆராதனைகளும், சேவையும் செய்தாள். "கண்ணா! ஒருமுறை உன் குழலோசையைக் கேட்க விருப்பம்" என்றாள். கண்ணன் குழலை இசைக்க ராதை பிரேம பக்தியில் தன்னை மறந்திருந்தாள். திடீரென "கண்ணா! எனக்கொரு சிறு ஆசை. அதை நிறைவேற்றுவாயா?" என்றாள். "குருஷேத்திரப் போருக்குப் போகாதே கிருஷ்ணா" என்று மட்டும் கேளாமல், எந்த வரம் வேண்டுமானாலும் கேள்" என்றான் கண்ணன். "கிருஷ்ணா! எனக்குத் தெரிந்தவரை நீ குழந்தைக் கண்ணன். அன்புத் தெய்வம். அமைதிகாக்கும் தேவன். பாசமும், பற்றும், பண்பும், பரிவும் மிக்கவன். தர்மத்தைக் காக்க நீ போர்க்கோலம் பூண்டாலும், உன் உள்ளே அடங்கியுள்ள அந்தக் கோகுல கிருஷ்ணனை, நான் கொடுத்த புல்லாங்குழலில் ஆவாகனம் செய்து என்னிடம் தந்துவிடு. நான் அதனைத் தினமும் ஆராதித்து என் மூச்சாய் நிரப்பி, தெய்விக நாதத்தை எழுப்பி, அந்த நாத மண்டலத்தில் உன்னுடன் இணைந்து வாழ்ந்து கொள்கிறேன்" என்று வரம் கேட்டாள். கண்ணனும் ராதைகேட்ட வரத்தைத் தட்டாமல் தந்து, தன்னையே தன் புல்லாங்குழலில் ஆவாகனம் செய்து ராதையிடம் கொடுத்தான். குழந்தைக் கண்ணனை புல்லாங்குழல் வடிவில் ராதை பெற்றுக்கொண்டபோது, பாஞ்சஜன்யம் என்னும் சங்கம் கண்ணன் கையில்மர்ந்து கோகுலக் கிருஷ்ணனை குருஷேத்திரக் கிருஷ்ணனாக்கியது.

குருஷேத்திரத்தில் கண்ணன் தர்ம சங்கம் ஊதிக்கொண்டிருந்தபோது, பிருந்தா வனத்தில் ராதை பிரேம பாவத்துடன் புல்லாங்குழலை இசைத்துக்கொண்டிருந்தாள். குருஷேத்திரப் போர் முடிந்தது. தர்மராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது. கண்ணனின் பாஞ்சஜன்ய முழக்கம் நின்றது. கண்ணனின் மனமே அமைதியையும், ஆனந்தத்தையும் தேடியது. குருஷேத்திரக் கண்ணன் மீண்டும் கோகுலக் கண்ணனாகித் தன் பிரேம பக்தர்களுடன் வாழ விரும்பினான். அவன் மூச்சு அவன் குழலைத் தேடியது. ராதையைத் தேடி வந்தான் கண்ணன். தன் புல்லாங்குழலைப் பெற்று ஊதத் தொடங்கினான். புல்லாங்குழல் கிருஷ்ணா! கிருஷ்ணா! என்ற சப்தத்தையே எழுப்பியது. அது ராதை செய்த ஆராதனையின் மகத்துவம்.!

"ராதா! சதாசர்வ காலமும் கிருஷ்ணா! கிருஷ்ணா! என என்னையே எண்ணி, என்னையே ஆராதித்து, என் நாமத்தையே ஸ்மரித்து, புல்லாங்குழலின் ஓசையைக் கூட கிருஷ்ண சப்தமாக மாற்றியிருக்கிறாயே இந்த ஆராதனையில் அப்படி என்ன ஆனந்தம் அடைகிறாய்? என்றான் கண்ணன். "கிருஷ்ணா! உன்னைத் தரிசிப்பதில், நினைப்பதில், நாமத்தைச் சொல்வதில் கிடைக்கும் பேரானந்தத்தை வார்த்தைகளில் விளக்க ஏலாது. தெரிந்துகொள்ள ஆசைப்பட்டால், நீயே ராதையாக மாறி அந்தக்

கிருஷ்ணனைத் தேடிப்பார்! அவன் நாமத்தைப் பாடிப்பார்! அவனைத் தரிசித்துப்பார்! அப்போது அந்தத் தெய்வீக ஆனந்தம் உனக்குக் கிட்டும்" என்றாள். எத்தனை உண்மையான வார்த்தைகள். இதனை மெய்ப்பிப்பதற்காக பகவான் கிருஷ்ணர் கலியுகத்தில் கிருஷ்ண சைதன்யராகத் தோன்றி, ராதையின் பாவத்தோடு தெருவெல்லாம் கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று பாடித்திரிந்து, பக்திப்பரவச நிலையில் கண்ணனைத் தேடித்திரிந்து, கிருஷ்ண நாம மகிமையை எடுத்துக்காட்டியுள்ளார்.

புல்லாங்குழல், மனித ஜீவன்கள் இரண்டிலுமே ஒன்பது துவாரங்கள். அவற்றின் வழியே செல்லும் காற்று குழலில் ஓசையாகவும், மனித உடலில் ஆசையாகவும் பரிணமிக்கிறது. மனிதன் என்னும் புல்லாங்குழல் இறைவன் கையில் அமர்ந்து, அவனது தெய்விக மூச்சு உள்ளே செல்ல மற்றத் துவாரங்களைக் கட்டுப்படுத்தி வாழும்போது மற்ற ஆசைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆன்மிகம் பிறந்து அமைதியும், ஆனந்தமும், தெய்விகமும் பரிமளிக்கிறது.

புருஷோத்தமன் புல்லாங்குழல் ஊதி வேணுகானத்தால் பசுக்களை எல்லாம் மயக்குவான். அவன் குழலூதும் சிறப்போ கொள்ளை அழகு. அவனுடைய கீதத்தில் பசுக்களோ கன்றுகளை விட்டு வீட்டை மறந்து செவி ஆட்டுவதை மறந்து மயக்கும். பறவைகள் எல்லாம் கூட்டைவிட்டு குஞ்சுகளைவிட்டுக் கண்ணன் குழலோசை கேட்க வந்துவிடும். மான்களெல்லாம் மேய்வதை மறந்து, மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர, அசையாது எழுதுசித்திரம் போல் நின்றுவிடும். குழலின் அமுத கீதத்தில் கந்தர்வர், தேவர்கள், அரம்பையர் எல்லாம் மயங்கினர். கோபிகைகள் எல்லாம் குழலோசையைக் கேட்டதும் வீட்டையும் குடும்பத்தையும் துறந்து வந்துவிடுவார்கள். வேணு கோபாலனான ஸ்ரீ கிருஷ்ணனின் அமுதகீத மழையில் உயிர்கள் தன்னை மறந்து நின்ற காட்சியைப் பெரியாழ்வார் மகிழ்ந்து பாடினார். நாம் அவற்றைப் படித்து, அந்த மோகனனின் கீத வெள்ளத்தில் திளைத்து, கண்கள் பனித்திட அந்தக் கானக்குழலூதும் கண்ணனை, புல்லாங்குழலூதும் புருஷோத்தமனை, வேய்ங்குழல் வித்தகனைப் போற்றிப் பணிந்து, அவன் செந்தாமரைச் சேவடிகளில் ஐக்கியமாவோமாக.

## அன்பு

உலகில் எல்லாவிதமாகவும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இரண்டு வகையான அன்பு உண்டு. யார்மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவரையே ஆள விரும்புகிற அன்பு ஒன்று. மற்றையது அவருக்கே ஆட்படுகிற அன்பு. ஆளவிரும்புகிற அன்பைக் காட்டிலும் ஆட்படுகிற அன்பு மிகவும் பக்குவமானது. ஆள விரும்புகிற அன்பில் சுயநலமும், அகங்காரமும் உண்டு. ஆட்படுகிற அன்பில் தியாகத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை. ஆள விரும்புகிற அன்புக்கு காதல் என்றும், பிரேமை என்றும் விதம் விதமாக பெயர் சொல்கிறார்கள். ஆட்படுகிற அன்புக்குப் பக்தி என்று பெயர் சொல்லுகிறார்கள். அவ்விதமான அன்பின்மூலம் பல அடியார்கள் இறைவனது அருளுக்கு ஆட்பட்டு பேரானந்த வாழ்வு பெற்றுள்ளார்கள். நாமும் அவ்வழி நடப்போமாக.

(தொடர்ச்சி)

# திருமந்திரக் கதைகள்

திரு கே.வீ. குணசேகரம் அவர்கள்

## II. பந்தல் பிரியும்.

"பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதக ன்றார்கள்"

உடம்பாகிய பந்தல் பலமிழந்து நலிந்து மெலிந்து அசைவற்றிருக்க உடம்பினைச் செயற்பட வைத்திருந்த பண்டாரமாகிய உயிர் அவ்வுடம்பின் கட்டுப்பாடுகள் இழந்து நிற்கப் பிரிந்து சென்றது. அவ்வேளை அவ் உடம்பில் உள்ள ஒன்பது வாசல்களும் ஒருமித்து அடைபட்டன. அனைவரும் துன்பமடைந்து அழுது புலம்பிய பின் அவ்விடத்தை விட்டு நீங்கிச்சென்றனர். உயிரற்ற உடல் சுடலையில் எரிந்து சாம்பரானது.

அவ்வூரின் தலைவன் தனபாலன். அவனில்லாமல் அவ்வூரில் எக்கருமங்களும் நடைபெறாது. அவன் வராத சபை சோபிக்காது என்பதால் சுப காரியங்கள் கூடச் சுபநேரம் தவறி அவன் வந்த பின்பே நடைபெறும். அதனால் சுபநிகழ்வுகள் தன்னால் தடை ஏற்படக்கூடாதென்பதற்காக அவன் குறித்த நேரத்திற்கு வந்துவிடுவான். அவன் வெளியூர்களில் இருக்கும் நாட்களில் அவ்வூரில் சுப நிகழ்வுகள் எதுவும் நடைபெறாது. ஊரவர்கள் தனபாலன் மீதும், தனபாலன் ஊரவர்கள் மீதும் அன்பு பூண்டிருந்தனர். தனபாலன் பெருந் தனவந்தன். தர்மவான். இரக்கசிந்தனை உடையவன். தன்னை நேசிப்பதைப் போல அவன் ஊர் மக்களையும் நேசித்தான். அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தன்னால் இயன்றளவு நீக்கினான். வீடுகளில் நடைபெறும் மங்கள காரியங்களுக்குப் பொருள் கொடுப்பான். அதனால் அவ்வூரவர்கள் அவனை அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் சிவனாகவே கருதினர். ஊர் மக்கள் சிவனிடம் தமது குறைகளை முறையிட்டு விட்டு தனபாலனுக்குச் சொல்வார்கள். அவன் அதைத் தீர்த்து வைப்பான்.

திடீரென்று இன்னதென்று கண்டுபிடிக்கமுடியாத ஒரு நோய் தனபாலனைத் தாக்கியது. அதனால் அவன் மெலிந்து நடக்க முடியாதவனாகப் பாயிற் படுத்திருந்தான். ஊர் வைத்தியர்களும் பட்டணத்தில் உள்ள வைத்தியர்களும் அவனைப் பரிசோதித்த போதும் அவனைப் பீடித்திருந்த நோயை அவர்களாற் கண்டுகொள்ள முடியவில்லை. ஊரவர்கள் தமக்குத் தெரிந்த வைத்தியர்களையெல்லாம் அழைத்துவந்து காட்டினர். ஊர்க் கோயில்களில் அவன் சுகம் பெறவேண்டும் எனப் பூசைகள் நடைபெற்றன. கோயிலுக்குச் செல்வோர் எல்லோரும் அவன் சுகமடைந்து மீண்டும் பழையபடி எழுந்து நடமாட வேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

எழுந்து நடக்க முடியாது பாயிற் படுத்திருந்த தனபாலனை ஊரவர்கள் மிகவும் அக்கறையுடன் பராமரித்தனர். தமது குடும்ப உறுப்பினர் ஒருவரைப் பராமரிப்பது

போல ஒவ்வொருவரும் தனபாலனை அன்புடனும் அக்கறையுடனும் கவனித்தனர். நாட்கள் நகர்ந்தன. ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு மூன்று முறை வந்து பார்த்துச் சுகம் விசாரித்தோர் பின் இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை வந்து பார்த்தனர். அதன் பின் அது வாரமாகிப் பின் மாதமானது.

தகப்பன் இறந்து விடுவதற்கு முன் அவரைப் பார்த்துச் சேவை செய்ய வேண்டுமெனப் பிற நாடுகளில் இருந்து வந்த அவரது பிள்ளைகள் தமது நாடுகளுக்குத் திரும்பினர். மிகவும் மோசமான நிலையில் உணர்வுகளில்லாது மலம், சலம் முதலிய படுக்கையில் கழித்துக் கொண்டிருந்த தனபாலனை பார்க்கவோ, பராமரிக்கவோ இப்போது ஊரவர்கள் வருவது குறைவு. வந்தாலும் தூர நின்று விசாரித்து விட்டு, பெருந்துன்பம் கொண்டவர்களைப்போல பேசிவிட்டுச் சென்றனர். உணர்வுகளின்றி மரம்போலக் கிடந்த தனபாலனின் ஒன்பது வாசல்களும் அடைபட உயிர் பிரிந்தது. ஊரவர்கள் கூடினர். பெருந் திருவிழாவைப்போல் ஊர் அலங்கரிக்கப்பட்டது. ஒலிபெருக்கி தனபாலனைப் பற்றி இல்லாத பொல்லாதவற்றையெல்லாம் கூறிக்கொண்டிருந்தது. பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்து புறப்பட்டுவிட்டதாகத் தகவல் வந்தது. மரண வீட்டுக்கு வந்தவர்கள் அழுதுவிட்டுச் சென்றனர்.

பிள்ளைகள் வந்ததும் ஊரவர்கள் மீண்டும் கூடினார்கள். தனபாலனைப் பற்றிப் பேசினார்கள். அவனது இழப்பு பெரும் இழப்பென்றனர். அதை ஈடு செய்ய முடியாதென்றனர். பிரேதத்தை தூக்கிப் பாடையில் வைத்துச் சுமந்துகொண்டு சுடலையை அடைந்தனர். அதைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டு வீட்டுக்கு வந்து நீராடினர். சில தினங்கள் ஊரில் தனபாலனைப் பற்றிய பேச்சிருந்தது. பின் அது மெல்ல மெல்ல மறைந்தது. இப்போ தனபாலனில்லாது ஊரில் பெரும் பெரும் வைபவங்கள் நடைபெறுகின்றன.

(தொடரும்...






எதையும் கைம்மாறு கருதாமல் மற்றவர்களுக்குக் கொடு.

# உத்தமி கைகேயி

திரு S.S. றஜீந்திரன் அவர்கள்

இதிகாசங்களில் ஒன்றான இராமாயண காவியம் இராமனை நாயகனாகவும் சீதையை நாயகியாகவும் கொண்டு விளங்குகின்றது. அயோத்தி மாநகரை களமாகக் கொண்டு இடம்பெறும் இக்காவியத்தில் ஒவ்வோர் கதாபாத்திரங்களினூடாகவும் மனிதன் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்ற அரிய பல கருத்துக்கள் முன் வைக்கப் பட்டுள்ளன. இக்காப்பியத்தில் அயோத்தி மாநகரை அரசாள்பவனாக தசரதச்சக்கரவர்த்தி விளங்குகின்றார். கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூவரும் தசரதன் மனைவியர். இவர்களுள் கைகேயி, தசரதன் காட்டும் அன்பில் இராமனுக்கு அடுத்தபடியாகவும், அவனால் மிகவும் விரும்பப்பட்டவளாகவும் காணப்படுகின்றாள். அதேநேரம் பரதனுக்கு தாயான கைகேயி இராமன் மேல் அதீத அன்பு கொண்டவளாகவும் காணப்படுகிறாள்.

இராமாயண காவியத்தில் இராமன் எவ்வளவு உயர்ந்தவனாக பேசப்பட்டானோ அதற்கு எதிர்மாறாக கைகேயி சுயநலம் மிக்க கொடுமைக்காரியாக அயோத்தி மக்களால் வெறுக்கப்பட்டவளாகப் பேசப்பட்டுள்ளாள்.

கைகேயி உண்மையில் அப்படிப்பட்டவளா?

கைகேயி எப்படிப்பட்டவள் என்பதை ஆராய்வோமாயின் அவளின் உயர்ந்த குணம் தெள்ளத் தெளிவாகப் புலப்படும்.

செல்வம் கொழிக்கும் கேகய நாட்டின் அரசன் கேகயனுக்கு மகளாகப் பிறந்தவள் கைகேயி. இதன் மூலமே அவள் பிறப்பினாலும் வளர்ப்பினாலும் கெட்டவள் அல்ல என்பது புலப்படும். அப்படிப்பட்ட அவள், தான் பிறந்த நாட்டிற்கும் தன் பெற்றோருக்கும் அவப்பெயர் ஏற்படுத்துவாளா?

அயோத்தி மாநகரின் மகாராஜாவான தசரதன் தேவர்களுக்காக அசுரர்களுடன் போரிடும் பொழுது தசரதனுடைய தேர்ச் சாரதியாகவும், அச்சாணி உடைந்தபோது தனது கையை வைத்து தேரோட்டி, தசரதனை வெற்றிகொள்ளச் செய்தவள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்தகைய குணம் கொண்ட கைகேயி தான் புகுந்த நாட்டிற்கும் தன்னுடைய கணவனுக்கும் அவப்பெயர் ஏற்படுத்துவாளா?

பரதனை மகனாகப் பெற்ற கைகேயி இராமன், இலக்குமணன், சத்துருக்கன் ஆகியோர் மீதும் அன்பு செலுத்தும் அவள் தனது புத்திரர்கள் தன்னையே அவமானப் படுத்துவதையே விரும்புவாளா?

இப்படி பல சிறப்புக்களைக் கொண்ட கைகேயி ஏன் சுயநலம் கொண்ட கொடுமைக் காரி என்று பெயர் எடுத்தாள். தசரதனிடம் இராமன் 14 வருடங்கள் காடாள வேண்டும் என்றும் பரதன் நாடாள வேண்டும் என்றும் ஏன் வரம் கேட்டாள்.

கேகய நாட்டின் இளவரசியாக இருந்தபோது கைகேயி ஒரு ஜோதிட சிகாமணியிடம் ஜோதிடம் கற்று அதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தாள். அவள்

இராமனுக்கு பட்டாபிஷேகம் நடைபெறப் போகின்ற செய்தி கேட்டு பூரிப்படைந்த காலத்தில் அயோத்தி நாட்டின் ஜாதகத்தை கணித்துப் பார்த்தாள். அதன் பலாபலன்களைக் கண்டு கொண்ட கைகேயி தனது குருவான ஜோதிட சிகாமணியை கேகய நாட்டிலிருந்து இரகசியமாக வரவழைத்து அவரிடம் அயோத்தி நாட்டின் ஜாதகத்தை காட்டினாள். அதைக் கணித்த குரு அவள் கணித்த ஜாதகம் மிகவும் சரியானது என்று கூறினார். அதன்படி இனிவரும் 14 வருட காலத்திற்கு அயோத்தி அரசின் சிம்மாசனத்தில் ஏறும் எந்த அரசனும் உயிர் துறப்பான் என்று பலன் கூறுகிறது என்றும் உரைத்தார்.

"அதனால்த்தான் தங்களை அழைத்துச் சந்தேகம் தீர்த்துக்கொண்டேன்" என்று கைகேயி கூறி அவ் இடரிலிருந்து அயோத்தி அரசைக் காப்பாற்றுவதற்காக தான் தசரதனிடம் சென்று தனது உயிருக்கும் மேலான இராமனைக் காப்பாற்றுவதற்காக அவனைப் 14 வருடங்கள் காட்டிற்கு அனுப்பும் படியும் பரதன் நாடாள வேண்டும் என்றும் இரண்டு வரங்களைக் கேட்கப் போவதாகவும் மற்றையவர்களுக்கு இந்த இரகசியம் தெரியாமல் இருக்கட்டும் என்றும் கூறினாள்.

அதற்கு குரு இராமனை காப்பாற்றுவதற்காக 14 வருடம் காடாளுமாறு அனுப்புவது சிறந்ததே, ஆனால் பரதனுக்கு அரச பதவி கிடைத்தால் பரதன் உயிர் துறப்பானே, இராமனைக் காடாள அனுப்பினால் முழு உலகுமே உன்னைத் தூற்றுமே என்றும் கூறினார். எனது பிள்ளை உயிர் துறந்தாலும் தவறில்லை. இராமன் வாழவேண்டும், நான் கெட்ட பெயர் எடுத்தாலும் அயோத்தி மாநகரம் சிறப்புடன் விளங்க வேண்டும் என்று கைகேயி விடை பகர்ந்தாள்.

தனது மாணவியின் சிறந்த குணத்தைக் கண்டு கொண்ட குரு உனது நல்ல எண்ணத்திற்காக எல்லாம் சுபமே நடைபெறும் என்று ஆசீர்வதித்தார். அதன் பின் கைகேயி தசரத மன்னனிடம் இரண்டு வரங்களையும் கேட்டாள். இராமன் காடு செல்ல தசரதன் புத்திர சோகத்தால் உயிர் துறந்தான். அதற்கு அயோத்தி மாநகரத்தின் ஜாதக பலனே காரணம் ஆகும்.

இராமன் காடு சென்றதை கேள்வியுற்ற பரதன் தானும் இராமன் இருக்கும் இடம்தேடி காட்டிற்குச் சென்றான். இராமன் அவனுக்கு அறிவுரை கூறி நீயே நாடாள வேண்டும் என்று பணித்தான். அதனை மறுத்த பரதன் நீங்கள் அமர வேண்டிய சிம்மாசனத்தில் நான் அமர மாட்டேன் என்று கூறி இராமனது பாதுகைகளை வாங்கித் தனது சிரசிலே சுமந்து சென்று அயோத்தியின் எல்லைக்கருகிலே கூடாரம் அமைத்து இராமனது பாதுகைகள் இரண்டையும் அரியாசனத்தில் வைத்து 14 வருடங்களும் தவவாழ்வை மேற்கொண்டான்.


அதனால்த்தான் அயோத்தி மாநகரின் ஜாதக பலன் காரணமாக 14 வருடங்களுக் குள் நடைபெறவிருந்த துர்ச்சம்பவங்கள் யாவும் தடைப்பட்டு அயோத்தி அரசு வீழ்ச்சி யடையாது நிமிர்ந்து நின்றது. அதற்குக் காரணமாக இருந்த கைகேயி சுயநலம் உடையவள் என்றும் கொடுமைக்காரி என்றும் பல இழிவான பெயர்களைப் பெற்று இராமாயண காவியத்தில் தாழ்ந்து நிற்கின்றாள். அயோத்தி மாநகரின் நன்மைக்காக

அவப்பெயர்களைப் பெற்றுப் "பெண் புத்தி பின் புத்தி" என்ற பழமொழிக்கமைய உயர்ந்த முடிவினை எடுத்த அந்த உத்தம குணம் கொண்ட கைகேயி அயோத்தியைக் காத்து இராமாயண காப்பியத்தின் திருப்புமுனைக்கு பாத்திரமானவளாக காணப்படுகின்றாள்.

இராமாயண காவியத்தில் பலபேர் உத்தமர்களாக இருந்தாலும், தான் அவமானப்பட்டாலும் தனது கணவனது இராஜ்ஜியம் நிமிர்ந்து நிற்க வேண்டும், இராமன் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்று நினைத்து செயற்பட்ட கைகேயி உத்தமி என்று மட்டுமே போற்றுவதற்குரியவளாவாள்.

# வணக்கம் சந்நிதி வேற்பெருமானே!

வணக்கம் சந்நிதி வேற்பெருமானே
வளமான வாழ்வு தந்து
வையகத்தில் எம்மைக் காப்பாய்
அருள்நிதியே!
நாடித் துதித்திடவே நல்
தொண்டைமானாற்றங் கரையில்
குடிகொண்டாய்
நம்பித் துதிப்பவர் உள்ளத்திலும்
நாவிலும் களிநடனம் புரியும் பொருளானாய்!
(வணக்கம் சந்நிதி...)



உள்ளமுருக உன்னைநாடி வந்தோம்
உலக நன்மை வேண்டி
உன்னருளைப் பாடி நின்றோம்
இப்பிறப்பில் எம் ஆத்மா
அனுபவித்த இன்னல்கள் போதும்
இன்னொரு பிறவி வாய்த்தால் உன்னையே
எம் இஷ்ட தெய்வமாகப் போற்றித்
துதித்திட வரங்கள் வேண்டும்
(வணக்கம் சந்நிதி...)

பூவரச மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டு
புன்மை தீர்த்தருளும் சற்குருநாதா!
வீரவாகு தேவர் பூசித்த
வியத்தகு அற்புதம் உறைவேலா!
காலைக் கதிரவன் ஒளியாகக்
கலிகாலக் கொடுமைகள்
நீக்கிட அழைக்கிறோம்
கந்தா... முருகா... கடம்பா...
கருணைக் கடலாய் வந்தெம்மை ஆட்கொள்வாய்!
(வணக்கம் சந்நிதி...)

-திரு செ. ரவிசாந் -

தூய்மையானவர்களும் மாசற்றவர்களும் இம்மையிலே கடவுளைக் காண்கிறார்கள்.

# "காளமேகம்" பாடல்கள் (தொடர்ச்சி...)



**சந்து போனால்:**

"பெருமான், ஏனப்பா இப்படி ஆடுகிறார்?" திருவாரூர்த் தியாகேசரைத் தொழுது நின்ற காளமேகத்தை ஒருவர் இவ்வாறு கேட்டு விடுகிறார். "ஒரு பெண்ணிடத்தில் ஒருமுறை அல்லாமல் இருமுறையும் தூதுபோய் வந்தவராயிற்றே! அந்தக் களைப்புத்தான் சரியாக நிற்க முடியாமல் கால் ஆட்டங் கண்டிருக்கிறது போலும்" என்று அவருக்குச் சொல்கிறார் கவிஞர்.

திருந்தா டாவணியுந் தென்கமலை ஈசர்
இருந்தாடா தென்செய் திடுதார் - பொருந்த
ஒருகாலே யல்லவே யொண்டடிக் காவன்
நிருகாலும் சந்துபோ னால்.

பரவையாருக்காக அவள் சுந்தரரோடு மனம் பொருந்துமாறு ஒரு தடவையேயல்லாமல், அன்றிரவிலேயே இரு தடவையும் தூது நடந்து சென்றால், நன்றாகப் படமெடுத்து ஆடுகின்ற பாம்பினை அணியும் அழகிய திருவாரூப் பெருமானின் கால் ஓய்ந்து ஆடாமல் என்னதான் செய்வார்?

பெருமான், தொண்டனுக்குத் தூது சென்ற சிறப்பினை உரைத்துப் பெருமானின் திருநடனத்தைச் சிறப்பிக்கின்றார் கவிஞர். "சந்து போனால்" என்பது, "சந்து நகர்ந்து போனால்" எனவும் பொருள்படும். சந்து நகர்ந்தால் அசைவின்றி நிற்கமுடியாமல் போய்க் கால்கள் தாமாகவே ஆட்டம் கொடுக்கும்; இப்படிக் கூறியதாகவும் நாம் கொள்ளலாம்.

**ஒற்றி யாச்சே!**

திருவாரூரிலே ஒரு சமயம் காளமேகப் புலவர் தியாகேசப் பெருமானைத் தரிசனம் செய்து கொண்டிருந்தார். அவருடைய திருநடனத்தைக் கண்ட அவருக்குப் பெருமானைத் துதித்துப் பாடவேண்டும் போலிருந்தது. அந்த ஆட்டத்தைக் கேலிசெய்வது போல வியந்து பாடுகின்றார்.

ஆடும் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடும் சமுசார மேலிட்டுக் கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவரிரண் டாச்சே
இருக்குமூ ரொற்றி யாச்சே!

திருநடனம் செய்யும் தியாகேசப் பெருமானே! உனக்கு ஏனய்யா இந்த வேண்டாத ஆட்டம் எல்லாம்? வீடும் சமுசார பந்தமும் வெறுத்துவிட்டதா? கா்வத்தோடு விளையாடிக் கொண்டிருக்க ஆண் மக்களும் இருவர் பிறந்து ஆய்விட்டதே! நீ இருக்கின்ற ஊரும் ஒற்றியூராயிற்றே! (ஒத்திக்கு வைக்கப்பட்டதாயிற்றே)

ஆட்டம்- ஆடம்பர வாழ்வு எனவும், கடனுக்கு ஈடாக போக்கியம் வைக்கப்படுவது எனவும் பொருள்பட்டு நிந்தையாக அமைவதுங் காண்க. "வளமானவர் ஆட்டமிடுவதிலே

பொருளிருக்கிறது; உமக்கு எதற்கு ஐயனே ஆட்டமெல்லாம்?' என்று உரிமையோடு கேட்கிறார்.

**ஏன் நஞ்சு தின்றார்?**

மனிதர்கள் வறுமையிலே வாடும்போது மனம் வெறுத்து நஞ்சைத் தின்று சாவதற்கு எண்ணுவார்கள். வாழ்வில் வெறுப்பு ஏற்படுவதும் சில சமயங்களில் தற்கொலைக்குக் காரணமாகலாம். ஒருவர், சிவபெருமான் நஞ்சினை உட்கொண்ட சிறப்பினை வியந்து கூறிக்கொண்டிருந்தார். மயிலாடுதுறை என்னும் தலத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சி இது. அதனைக் கேட்டுக் கொண்டிருந்த காளமேகம் இப்படி ஒரு பாடலைச் சொல்லி அவரைத் திகைக்க வைக்கின்றார்.

வள்ளலெனும் பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்கத் தெள்ளுமையாள்
அஞ்சலஞ்ச லென்றுதின மண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை யேனருதி னார்?

வள்ளல் எனும் பெரிய மாயூரநாதருக்கு- வள்ளன்மை உடையவர் என்று புகழ்பெற்றவரான மாயூரநாதருக்கு, வெள்ளிமலையாகிய கைலாசமும் பொன்மலையாகிய மகாமேருவுமே சொந்தமாயிருக்கும் பொழுதும், தெள் உமையாள் தினம் அஞ்சலஞ்சலென்று அண்டையிலே தானிருக்க- தெளிந்த அறிவுடையவளான உமையம்மையானவள், நாள்தோறும் அஞ்சவேண்டாம் அஞ்சவேண்டாம் என்று சொல்லியவளாக அவர் அருகிலேயே இருக்கும் பொழுதும், நஞ்சினை ஏன் அருந்தினார்- விரக்தியுற்றுப் பெருமான் ஏனய்யா நஞ்சினை உட்கொண்டார்? (மாயூரம்- மயிலாடுதுறை)

**புற்று மண்:**

வைத்தீஸ்வரன் கோவில் புற்றுமண் சிறப்பானதாகும். அதனைக் குறித்துக் காளமேகம் பாடுகிறார். தம்மை மதியாத சம்பத்தாண்டான் மீது காளமேகம் வசைபாட, அதனால் இவருக்கு நோய் வந்தடைந்ததாம். அந் நோயினின்றும் வைத்தீசர் கோயிற் புற்றுமண்ணை உண்டு இவர் விடுபட்டாராம். அப்போது அதனைச் சிறப்பித்துப் பாடியது இது என்ன வரலாறு.

மண்டலத்தி னாளும் வயித்தியராய்த் தாமிருந்தும்
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ - தொண்டர்
விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரென் னாதர்
மருந்தைப்பார்த் தாற்சுத்த மண்.

இந்த உலகில் எந்நாளும் மருத்துவராகவே தாம் வீற்றிருந்தபோதிலும், தம் கழுத்திலே அமைந்த கறையாகிய நோயினை அவர் தீர்த்துக் கொள்வதனை எவரேனும் கண்டிருக்கிறீர்களோ கண்டது கிடையாதே! தொண்டர்கள் படைக்கின்ற விருதுகளை எதிர்பார்த்து, அவற்றை உண்டு அருளுகின்ற, வேளூரிலிருக்கும் என்னுடைய தலைவரின் மருந்தைக் கவனித்துப் பார்த்தால், அது வெறும் மண் என்பதையாவது யாரும் அறிவீர்களோ?

பெருமானை இகழ்வதுபோலப் புகழ்கிறார். "கண்டவினை தீர்க்கின்றார்" என்பதனை "ஆன்மாவுக்கு நோயாகக் கண்ட இருவினையையும் போக்குகின்றார்" எனவும், தொண்டரின் காணிக்கையினை ஏற்று உதவுபவர் எனவும், புற்று மண்ணே சிறந்த மருந்தாகுமெனவும் கொள்க.

**நெருப்பை அணைத்தவள்:**

"புள்ளிருக்கு வேளூர்" எனப் புகழ்பெற்று விளங்குகின்ற வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்றிருந்தார் காளமேகம். அங்கே, பெருமானைத் தரிசித்தவர், அப்பனின் பாகமாயமைந்த அம்பிகையை எண்ணிப் பாடியது இது:

தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே
தீத்தானு முன்றன் சிரிப்பிலே - தீத்தானுன்
மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா உன்னையிந்தத்
தையலா ளெப்படிச் சேர்ந்தாள்?

புள்ளிருக்கு வேளூரிலே கோயில் கொண்டிருக்கும் பெருமானே! நின் நெற்றிக்கண்ணில் விளங்குவதும் நெருப்புத்தான். நின் திருக்கரத்திலே இருப்பதும் நெருப்புத்தான். திரிபுரம் எரித்த நின் சிரிப்பிலே எழுந்ததும் நெருப்புத்தான். நின் திருமேனி முழுவதுமே நெருப்பு மயமானதுதான். இப்படி இருக்கவும், இந்தப் பெண்மணியான உமையம்மை நின்னை எப்படி விரும்பி வந்து அணைத்தாளோ? அதுதான் எனக்கு வியப்பாயிருக்கிறது பெருமானே!

புள்ளிருக்கு வேளூர் சடாயு பூசித்த திருத்தலம். அம்மை குளிர்மை பொருந்தியவள். "அவள் எப்படி நெருப்பு மயமான உடலுடைய அப்பனுடன் சேர்ந்துள்ளாள்?" இப்படிக் கற்பித்து வியக்கிறார் கவிஞர்.

**எந்த வினை தீர்ப்பார்?**

வேளூர் வைத்தியநாதரைத் தரிசித்த பின், காளமேகம் அவரைப் பற்றிப் பாடுகின்றார். "இவருடைய சொந்தக்காரர்களின் துன்பங்களையே இவரால் தீர்க்க முடியவில்லையே? இவர் எங்ஙனம் ஐயா பிறருடைய வினைகளைத் தீர்ப்பார்" என்று கேலி பேசுகிறார்.

வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிறாம் பிள்ளைதனைக் - கோதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்த வினை தீர்ப்பார் இவர்?

வேளூரரான சிவபெருமானுக்கு வாதக்காலாம்; அவர் மைத்துனர்க்கு நீரிழிவாம்; அவர் பிள்ளைக்கு விகாரமான பெருவயிறாம்; இவ்வாறு தமக்கும் தம்மவர்க்கும் வந்த நோய்களைத் தீர்க்கவே வகையறியாதிருக்கும் இவர், வேறு எந்த வினையைத்தான் தீர்க்கப் போகிறார்?

கால் வாதம்- திருவடியான நடனநிலை; நீர் இழிவு- நீரான கடலிடையே துயில்வது; பேதப் பெருவயிறு- மாறுபாடான பருத்த தொந்தி, மகோதரம்.

தம் வீட்டு நோய்நொடிகளையே தீர்க்க முடியாது தத்தளிக்கும் இவர், எப்படி நம் வினைகளைத் தீர்க்கப் போகிறார் என்று நிந்திப்பது போலவும் தோன்றும்.

(தொடரும்...




## அசுரனின் உயர்வு

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (குறள் – 166)

தான் கொடுக்காவிட்டாலும் பிறர் யாருக்காவது எதாவது கொடுக்கும்போது கண்டு பொறாமைப்பட்டுத் தடுப்போனின் உறவும்கூட உணவும், ஆடையும் கிடைக்காமல் கெடுவர்.

ஆகவே, ஒருவர் தன் மனதில் பொறாமையில்லாமல் செய்து கொள்ள வேண்டும். யாரிடமும் பொறாமை கொள்ளாத பண்பே மிகச் சிறந்தது. அதையே கடைப்பிடிக்கும் நெறியாக்கிக் கொள்ள வேண்டும். பிறர் வளர்ச்சி கண்டு பொறாமைப்படுபவர், அறவழியில் வளர்ச்சி பெறாதவராவார். தீய வழிகளால் துன்பமே உண்டாகும் என்று அறிந்தவர் பொறாமையால் தீமை எதுவும் யாருக்கும் செய்யமாட்டார். பகைவரே இல்லாதவரையும் அவருடைய பொறாமைக் குணமே பாழாக்கி விடும். பிறர் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்ளுபவனிடம் திருமகள், தன் அக்காவான மூதேவியைக் காட்டிவிட்டுச் சென்று விடுவாள் என்பது சுக்ராச்சாரியார் சங்கதியில் நடந்தது.

அவர் அரசகுரு. அசுர மன்னனாக மகாபலி இருந்தான். அவனுக்குப் புரோகிதராக இருந்து யாகம் செய்வித்தார். யாகம் நடந்து கொண்டிருந்தபோது உபேந்திரன் என்ற குட்டை வடிவ மகாவிஷ்ணுவின் அவதாரம் ஐந்து வயது பிரும்மச்சாரியாக அங்கே வந்தார்.


அனைவரும் வாமனன் வடிவழகில் மயங்கி யாகத்தை நிறுத்திவிட்டு அவரையே பார்த்தனர். யாக தேவதைகளின் அந்தர்யாமியான அவரைக் குறித்தே அது செய்யப்பட்டதன்றோ! அவர் மான் தோலைப் போர்த்தி தாழங்குடை பிடித்து மிக அழகாக வந்திருந்தார். மான் தோலை அகற்றி திருமார்பில் வசிக்கும் இலட்சுமியை சுக்கிராச்சாரியாருக்கு மட்டும் காட்டினார்.

தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன் கடவுளிடம் நம்பிக்கை வைக்க முடியாது.

வந்திருப்பவர் மகாவிஷ்ணுவே என அவரறிந்து விட்டார். தேவேந்திரனின் சாகயமான பரமாத்மா அசுரனிடமிருந்து வானுலக ஆட்சியைப் பிடுங்கி இந்திரனுக்களிக்க வந்திருக்கிறார் எனக்கண்டு கொண்டார். இதற்குள் "பிருமச்சாரியே உங்களுக்குத் தேவையென்ன? எதைக்கேட்டாலும் தரத் தயார்" என்று கூறிவிட்டான் மகாபலி.

"மஹாபலி சக்கரவர்த்தியே! சொன்னபடி தருவதானால் எனது அடியால் மூன்றடி மண் நீ தந்தால் போதும்!" என்றார் வாமனன்.

"உங்கள் வடிவம் போலவே புத்தியும் குறுகியுள்ளது போலிருக்கிறதே? மூவுலகங்களின் சக்கரவர்த்தியிடம் இவ்வளவு சிறிய நிலத்தை மட்டும் யாசிக்கிறீர்?" என்ற பலியிடம், சிரித்துக்கொண்டே வாமனன் எனது அடியால் மூன்றடி மண் எனக்குத் தருவாயானால் போதும் என்றார். மகாபலி உடனே மனைவியை அழைத்தான். கிண்டியை நீர் வார்த்துத் தரக் கையிலெடுத்தான்.



"பலி, வந்திருப்பது யாரெனத் தெரியாமல் வரம் கொடாதே" என, அவன் தர முன் வந்த தானத்தைத் தடுத்தார் சுக்கிராச்சாரியார்.

"குருவே, இவர் யாராக இருந்தாலும் இவர் எதைக் கேட்டாலும் உடனே வழங்க வேண்டும் என்று தோன்றுகிறது."

"அது உன் விதி. ஏமாந்து விடாதே. இவன் இந்திரனுக்காக வந்திருக்கும் விஷ்ணு",

"அப்படியானால் என்னைவிடப் பாக்கியசாலி யார்?" என்று "பிருமச்சாரியே நீர் கேட்டதை அளித்தேன்" என நீரை மனைவியுடன் சேர்ந்து வாமனன் கையில் தாரை வார்த்தான். நீர் வரவில்லை. சுக்கிரர் வண்டாகி கிண்டி வழியை அடைத்திருந்தார்.

தானம் கொடுப்பதைத் தடுப்பது தீதன்றோ! அதன் பலன் அவருக்குக் கிடைத்தது. பவித்ர தர்ப்பையால் வாமனன் சுக்கிராச்சாரியாரின் கண்ணைக் குத்த, ரத்தம் வழிய, வெளியே வந்து விட்டார். தாரை வார்க்கப்பட்டது. ஆச்சார்யர் கைவிட மகாபலிச் சக்கரவர்த்தியின் மூவுலகங்களையும் இரண்டு திருவடிகளாலளந்தார் திரி விக்கிரமன். ஓங்கி வளர்ந்து மூன்றாம் அடியாக பலியின் தலையில் திருவடி வைத்து அசுரனைப் பாதாள உலகில் ஒரு சொர்க்கம் அமைத்து அங்கே தள்ளி உயர்வளித்தார்.

சுக்கிரரின் சுகபோகம் கெட்டு பல சிக்கல்கள் அவருக்கும் அசுரருக்கும் வந்தது, சுக்கிரர் பலியின் தானத்தைத் தடுத்ததனால்த்தான், பொறாமை எனும் பாவி தப்பு செய்ய வைத்தான். பொறாமையுற்றவன் செல்வம் பெற்றும் அது தங்காது. பொறாமையற்ற நல்லவனின் வறுமையும் நிலைக்காது. பொறாமைக்காரன் உயர்ந்ததோ, நல்லவன் கெட்டதோ இல்லை. மகாபலி வாமனனுக்கு நிலமளித்து நிரந்தர பேரின்பப் பெருவாழ்வை பரமாத்மாவின் அருளால் பெற்றுவிட்டான். இது அசுரனின் உயர்வு.

# பாவேந்தரும் நாவேந்தரும்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

பாவேந்தர் சுப்பிரமணிய பாரதியார்; நாவேந்தர் திருநாவுக்கு அரசர். தாண்டக வேந்தருமாம். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாடினார் பாரதி. பண்டிதமணியவர்கள் சீதாதேவியின் உடன் போக்கே சிறந்தது என வாதிட்டார். பாரதியின் திக்குத் தெரியாத என்ற பாடலிலே காட்டின் இயற்கை படிப்போர் நெஞ்சத்தோடு கொஞ்சுகிறது.

திக்குத் தெரியாதகாட்டில் - உன்னைத்
தேடி தேடி இளைத்தேனே

மிக்கநலமுடைய மரங்கள் - பல
விந்தைச் சுவையுடைய கனிகள் - எந்தப்
பக்கத்தையும் மறைக்கும் வரைகள் - அங்கு
பாடி நகர்ந்து வரும் நதிகள் - ஒரு

நெஞ்சிற்கனல் மணக்கும் பூக்கள் - எங்கும்
நீளக் கிடக்கு மிலைக் கடல்கள் - மதி
வஞ்சித் திடுமகழிச் சுனைகள் - முட்கள்
மண்டித் துயர் கொடுக்கும் புதர்கள்

-12. கண்ணன் என் காதலன் 3

இப்பைந்தமிழ்ப், பாவணத்தமிழில், மலர்களைப் பற்றிப் பேசும்போது “நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்கள்” என்பது ஒரு உயிரோட்டமான கவிதைவரி இயற்கையன்னையின் சிலிர்சிலிர்ப்பிலே வகை தொகையான மலர்கள் பளிச்சிடுகின்றன. அவை கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தளிக்கின்றன. மல்லிகை, இராச மல்லிகை, குண்டு மல்லிகை, பவள மல்லிகை: நிலத்தாமரை (ரோஜா) தாமரை, முல்லை. இருவாட்சி சந்தனம் போல்வன கமகம எனவாசம் கொட்டுகின்றன. அவ்வண்ணமே சிவ துளசி, விஷ்ணு துளசி, மருக்கொழுந்து போல்வன மூக்கைத் துளைக்கின்றன. இம்மலர்க்கூட்டங்கள் பூக்களாகவும், மாலைகளாகவும் இறைவன் திருமேனியை அலங்கரிக்கின்றன. இவ்வரிசையில், ஆண்டாள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிறாள். மணமில்லாத பூக்கள் குணமற்றவை என்பது வள்ளுவன் வாக்கு.

இணருழுத்தும் நாறா மலரனை யர் கற்றது
உணர விரித்துரையா தார்

குறள் 650.

தான் படித்ததைப் பிறருக்கு விளக்கிக் கூறாதவர்கள், மலர்ந்தும் மணக்காத பூவைப் போன்றவர்கள். நம் மண்ணிலே அவதாரம் செய்த விபுலானந்த அடிகளார் இறைவன் உவக்கும் இன்மலர் பற்றிப் பாடியுள்ளார்.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மல ரெதுவோ
வெள்ளை நிறப்பூவு மல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்தமலர் எதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றை யல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

இறைவன் உவக்கும் இன்மலர்கள் சுவாமி விபுலானந்தர்.

திருமூலர் இந்த உண்மையைப் பூவினில் வைத்தே விளக்குகின்றார்.

பூவினில்கந்தம் பொருந்திய வாறுபோல
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது

திருமந்திரம் 1459.

மலரில் மணம் பொருந்தி இருப்பதுபோல சீவனுக்குள்ளே சிவமணம் விளையும் என்பது பொருள். இவ் உண்மையை மணிமொழியார் பழகுமொழியில் அழகொழுகப் பாடியுள்ளார்.

உற்ற ஆக்கையின் உறு பொருள் நறு மலர்
எழுதருநாற்றம் போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர் சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

அதிசயப் பத்து 9

தாயுமான சுவாமிகள் பூசைக்காக மலர்பறிக்கப் போனார். இவர் எடுக்கப் போன மலரிலே இறைவன் இருப்பதை நேரிலே அனுபவித்து, பூப்பறிப்பதையே நிறுத்திவிட்டார்.

பண்ணேன் உனக்கானபூஜை ஒருவடிவிலே
பாவித்து இறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன்.....

கருணா கரக்கடவுள்.

சிலநேரங்களில் இன்பத்தைவிடத் துன்பமே மனிதனுக்குச் சிறந்த ஆசானாக அமைகிறது.

பொருள்: உனக்கு ஆன பூசை பண்ணேன்- உனக்குப் பிரியமான பூசனையைச் செய்யேன், ஒரு வடிவிலே பாவித்து- ஓர் உருவத்திலே உன்னைப் பாவனை செய்து வணங்க, ஆங்கே- அதற்காகவே பார்க்கின்ற மலரூடு- பார்க்கின்ற மலர்கள் எல்லாவற்றிலும், நீயே இருத்தி- நீயே நீக்கமின்றி இருக்கின்றாய். ஆதலால் அ பனிமலர் எடுக்க- அந்தக் குளிர்ச்சியான மலர்களைப் பறிக்க மனம் இசையேன்.

இப்பரந்த பூப்பந்திலே மலர்களுக்குப் பஞ்சமே இல்லை. எனவே அர்ச்சுனன் மலர்கொண்டு சிவபூசை பண்ணியே தீர்த்தம் அருந்துவான். பீமனோ மலர்களைப் பறிக்காமல் அப்படியே விட்டு அர்ப்பணஞ் செய்வான். பேர்னாட்ஷா ரோஜா மலர்களைப் பறிக்காமலே செடியில் வைத்து அனுபவிக்கும் வண்ணம் கூறினார். அவ்வைப் பாட்டி இளமையிலே வறுமையையும் முதுமையில் செல்வத்தையும் பற்றி விளக்க மலர்களையே ஆதாரமாகக் காட்டுகின்றார்.

இன்னா இளமை வறுமைவந்து எய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாள் அல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆள் இல்லா மங்கைக்கு அழகு

வாக்குண்டாம் 3

இன்பத்தை அனுபவிப்பதற்குரிய இளமைப் பருவத்தில் வறுமை வந்தடைந்தால் அது மிக்க துன்பத்தையே தரும். துன்பத்தைத் தரும் முதுமைக் காலத்தில் நன்மை தரும் பொருள்களும் துன்பத்தையே தருவனவாகும். அவை சூடுவதற்குரிய காலம் அல்லாக் காலத்தில் பூத்த நல்மலரையும் அனுபவிப்பதற்குத் தோதான கணவன் இல்லாத மங்கையின் அழகையும் போன்றனவாகும்.

இங்கே காட்டிய தரவுகளைக் கொண்டு அப்பர் சுவாமிகள் மணமுள்ள அழகான பூக்களிலே இறைவன் இரண்டறக் கலந்திருக்கிறான் எனக் கூறும் உண்மை புலனாகக் காணலாம்.

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

திருத்தாண்டகம்.

ஓசை- பொருளற்றது, ஒலி பொருளுள்ளது.

உலகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்.

(தொடர்ச்சி)

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

## கிருத்திகை உற்சவம்:

கிருத்திகைத் தீபம், கார்த்திகை மாதத்தில் நிகழ்வது. விநாயகன், சிவன், தேவி, விஷ்ணு. கார்த்திகேயன் ஆகியோருக்குத் தனித்தனியே அவரவர்கட்குரிய நாட்களில் இவ்வுற்சவம் நிகழும். இவ்வுற்சவம் நிகழ வேண்டிய வேளை சூரியன் மறைந்து கொண்டிருக்கும் சாயங்கால வேளை. விநாயகன், சிவபெருமான், தேவி எழுந்தருளியிருக்குந் தலங்களில் பௌர்ணமித் தினத்தன்று இவ்வுற்சவம் நிகழும்.

இவ்வுற்சவத்திற்கு முன்னாளிரவு அங்குரார்ப்பணஞ் செய்து தீபபூசை நிகழ்த்தி, தீபத்தை அதிவாசம் செய்தல் வேண்டுமென ஆகமங் கூறுகிறது. சம்பகம், தென்னை, தாலம், கருங்காலி, திலகம், அர்ஜுநம் முதலிய மரங்களுள் ஏதாவது ஒன்றால் தீபதண்டம் அமைத்தல் வேண்டும். இது பிரசாதம் அளவோ அல்லது கபோதமளவோ உயரமாக இருத்தல் வேண்டும். இத் தண்டத்தைச் சுற்றிலும் நூறு ஐநூறு அல்லது ஆயிரம் தீபகீலங்கள் அமைத்தல் வேண்டுமென ஆகமங் கூறுகின்றது. சுற்றிலும் ஓலையினால் வளைத்து வட்டவடிவமாகக் கட்டும் மரபு உண்டு. இதற்குச் சொக்கப்ப(ா)னை என்னும் பெயர் மக்களிடையே வழங்கி வருகிறது.

சிவனுக்குமுன் குண்டம் நிறுவி, அக்கினியை முறைப்படி வளர்த்து நெய், சரு, பருத்தி, பால் முதலிய விசேட திரவியங்களை உரிய மந்திரங்களால் ஹோமம் செய்து, ஒன்பது தீபபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் நெய் நிறைத்து குண்டத்தில் உள்ள அக்கினியினால் தீபங்களை ஏற்றுதல் வேண்டும். குண்டத்தின் முன் தண்டிலங் கற்பித்து, அதன்மீது நெல்லைப் பரப்பி, எட்டு இதழ்களால் அமையுந் தாமரை மண்டலம் ஒன்று கீறி, அதன்மீது தர்ப்பை மலர்கள் முதலியவற்றைத் தூவி, அதன் நடுவில் ஒரு தீபத்தையும் கிழக்கு முதல் வடகிழக்கு வரையுள்ள எட்டுத் தளங்களிலும் எட்டுத் தீபங்களையும் வைத்தல் வேண்டும். தீபங்களுக்குச் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அருச்சித்து அவற்றில் நவசக்திகளை ஆவாகித்தல் வேண்டும். ஹோமத்தைப் பூர்ணாகுதியுடன் நிறைவேற்றி அக்கினியில் ஆவாகிக்கப்பட்ட இறைவனை மூல லிங்கத்தில் ஒடுக்கிய பின் வெளியில் நிர்மாணிக்கப்பட்ட தீப தண்டத்தை அணுகி கௌதுகபந்தனம் செய்தல் வேண்டும்.

கிருத்திகா தீபோற்சவத்திற்குரிய மாலைப் பொழுதில் எழுந்தருளும் மூர்த்தியை அலங்கரித்து, பூசை முதலியன நிகழ்த்தி, திருவுலாக் கொண்டருளச் செய்து, தீபதண்டம் நிறுவப்பட்ட இடத்தைச் சமீபித்ததும் முன் ஒன்பது பாத்திரங்களில் இருக்கும் தீபங்களை நடுப்பாத்திரத்தில் ஒன்றாகச் சேர்த்து ஒரு தீபமாக்கி, அதைத் தருணதீபமாக அருச்சித்து, அதைத் தீபதண்டத்தின் உச்சியில் வடக்கு முகமாக விளங்குமாறு வைத்தல் வேண்டும். பின்னர் தண்டத்தைச் சுற்றி வளைந்து அமையும் சொக்கப்ப(ா)னை சுவாலைவிட்டுப் பெரும் ஒளிப்பிழம்பாய்த் தோற்றும் வண்ணம் சுவாலித்தெரியத் தீமூட்டல் வேண்டும்.

தூய்மை உள்ளவர்களுக்குத்தான் பந்தங்களில் இருந்து விடுதலை கிடைக்கும்.

கருவறையின் மேல் விளங்கும் பாலிகை, கபோதம், மகாநாசிகை, விருஷபதலம், ஸ்தூபி ஆகிய இடங்களெல்லாம் தீபங்களைப் பிரகாசமாக ஏற்றி வைத்தல் வேண்டும். பொருளுக்கேற்றவாறு தீபாலங்காரங்களுடன் உற்சவம் சிறப்பாக அமையும்.

## தநுர்மாத பூசை:

தைமாதம் முதல் ஆறு மாதங்களுக்கு தேவர்களுக்குப் பகற்காலம். ஆடிமாதம் முதல் ஆறு மாதங்கள் இரவு. ஆகவே ஒவ்வொரு மாதமும் தேவர்களுக்கு ஐந்து நாழிகைப் பொழுதாகிறது. தனு ராசியில் சூரியன் நிற்கும் வேளை, ஐந்து நாழிகைக்கு முன்னதான வைகறைப் பொழுதாக தேவர்களுக்கு மார்கழிமாதம் விளங்குவதையும் அக்காலத்தில் விஷேச பூசை நிகழ்த்த வேண்டுவதனையும் காரணாகமம் கூறுகின்றது.

விடியற்காலம் நிகழவேண்டிய இப்பூசைக்குரிய மலர்களை முதல்நாள் இரவே பாதி ராத்திரியின் பின் தேடிச் சேமித்துக் கொள்ளல் வேண்டும். நீலோற்பலம், கமலம், துளசி, வில்வம் முதலியவை முதல்நாள் எடுக்கப்பட்டவையாயினும் பூசைக்கு விலக்கப்பட்டனவல்ல என்ற விதி உண்டு. இப்பூசைக்குப் பயற்றஞ் சாதம், நெய்ச்சாதம், தயிர்ச்சாதம் முதலியன விஷேச நைவேத்தியப் பொருள்களாகக் கூறப்பட்டுள்ளன. ஆயிரம் தினங்கள் தொடர்ந்து நிகழ்த்தும் பூசைகளின் பலனை மார்கழி மாதம் விடியற்காலையில் ஒரு வேளைப் பொழுது மட்டும் நிகழ்த்தும் இப்பூசை அடைப்பிக்குமென ஆகமங் கூறுகின்றது.

## ஆர்த்திரா பூசை:

மார்கழிமாதம் திருவாதிரை தினத்திற்கு முதல்நாள் பின்னேரம் கௌரிபூசை விரிவாக நிகழ்த்துதல் வேண்டும். கௌதிகபந்தனம் நிகழ்ந்தபின் நடராஜ மூர்த்தியைத் திருவுலாக் கொண்டருளச் செய்தல் முறை. மார்கழித் திருவாதிரைத் தினத்தன்று அதிவிடியற்காலை மகாஸ்நபனமும் விரிவான அபிஷேகமும் நடராசப் பெருமானுக்கு நிகழ்த்திட, விஷேச அலங்காரங்களாலும் விஷேச நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, பூசை முதலியவற்றாலும் உபசாரப் பொருள்களாலும் உபசரித்து தசதரிசனங்களை நிகழ்த்துதல் வேண்டும்.

முதல்நாளிரவு பதினெட்டு நாழிகைக்குப் பின் உள்ள காலம் அபிஷேகத்திற்கும், இருபத்தினான்கு நாழிகைக்குப் பின் உள்ள காலம் நிவேதனத்திற்கும் உரிய காலங்கள் என உத்தரகாரணாகமம் கூறுகிறது. இது அபிஷேகம் விரிவாக நிகழ்வதற்கும் அலங்காரத்திற்கும் ஆறு நாழிகைகள் உரியன எனக் குறிப்பாயுணர்த்தி நிற்கின்றது. இதன்பின் தூபதீபம் விஷேச தீபாராதனை முதலியன முடித்த பின்னரே தர்சனமும் அதனைத் தொடர்ந்து கிராமத்தை வலம் வருதலான உற்சவமும் கூறப்பட்டுள்ளது.

முதல்நாளிரவு திருவூஞ்சல் நிகழ்வது ஆர்த்திரா பூசையின் முக்கியமான அம்சமாக ஆகமம் குறிப்பிட்டுள்ளது. ஊஞ்சல் அமைய வேண்டிய முறையினைத் தொடக்கமாகக் கொண்டு சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருவூஞ்சலில் எழுந்தருளிவித்து ஊஞ்சல் நிகழ்த்தும் வைபவம் வரை விரிவாகக் காரணாகமம் எடுத்துரைக்கின்றது.

**சிவராத்திரி:**

மாசி மாதத்தில் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி நாள் சிவராத்திரி தினமாகும். இத்தினம் உபவாசம் மேற்கொள்ள வேண்டிய திருநாள். இத்தினத்தில் நித்திரை விழித்தல் மிகவும் அவசியம். இதை ஆகமங்கள் வற்புறுத்திக் கூறுகின்றன. நியமங்களைக் கடைப்பிடித்து இவ்விரதத்தினை உரியவாறு மேற்கொள்வதனால் விரும்பியவற்றைப் பெறுதல், மேற்கொள்ளுங் காரியங்களில் சித்தி, ஆயுள், செல்வம், புகழ், வீடுபேறு முதலிய இம்மைப் பேறுகளும், மறுபேறுகளும் கிட்டுமென்பது ஆகமவாக்கு. விரதம் மேற்கொண்டவர்கள் நித்திரை கொள்வரேல் அவர்க்கு எவ்வகைப் பலனும் கிட்டாது. நித்திரை விழிப்பவர்க்கே பலன் உண்டு. சிவராத்திரி தினத்தன்று இரவில் நான்கு யாமங்களிலும் பூசைகள் நிகழ்வன. ஒவ்வொரு யாமத்திலும் பூசை அமையும் முறையினை ஆகமங்கள் கூறுகின்றன. முதல் யாமத்தில் அஷ்டோத்திரசதஸ்நபனமும் இரண்டாம் யாமத்தில் நாற்பத்தொன்பது கலசங்கள் வைத்து நிகழ்த்தும் ஸ்நபனமும், மூன்றாம் சாமத்தில் இருபத்தைந்து கலசங்களாலும் நான்காம் சாமத்தில் பதினாறு கலசங்களாலும் ஸ்நபனம் நிகழ்த்துதலும் காரணாகமத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. முதல் யாமத்திற்கு வில்வமும், இரண்டாம் யாமத்திற்கு தாமரையும், மூன்றாம் ஜாமத்திற்கு ஜாதி புஷ்பமும், நான்காம் யாமத்திற்கு நந்தியாவர்த்த மலரும் அர்ச்சித்தலின் பொருட்டு விஷேசமாக உரியவை. பஞ்ச வில்வங்களால் அருச்சித்தல் மிக விஷேசம். பயற்றன்னம், பாயசான்னம், எள்ளன்னம், சுத்தான்னம் ஆகியன நாலு யாமங்களுக்குமுரிய விஷேச நைவேத்தியப் பொருள்கள். இவை தனித்தனியே குறிப்பிடப்பட்டுள்ளன. சுத்தான்னம் நான்கு காலங்களுக்கும் உரியது. சிவராத்திரி பூசை விளக்கந்தரும் காரணாகமம் ஐந்து முகங்களுக்கும் அன்ன வகைகள் இன்னவை எனத் தனித்தனி கூறுகின்றது. பயற்றன்னம், பாயாசன்னம், எள்ளன்னம், சர்க்கரையன்னம், சுத்தான்னம் என்பவை ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களுக்கும் உரிய அன்னங்கள். இதிலிருந்து நான்கு யாமம் பூசைகளிலும் பஞ்சமுகார்ச்சினை ஆராதனை முதலியன நிகழவேண்டுவது குறிப்பாக உணர்த்தப் படுகின்றது. எல்லா யாமங்களிலும் இவ்வாறு நிகழ்த்த முடியாத இடத்தும் நான்காம் யாமமான இலிங்கோற்பவ காலத்தில் பஞ்சமுக பூசை, அருச்சனை முதலியவற்றை நிகழ்த்துதல் அவசியமாகும்.

**கிரகண பூசை:**

கிரகணங்கள் நிகழும்வேளைகளிலும், அயனம், விஷுபுண்ணியகாலம், சங்கிராந்தி, அமாவாசை, ஷடசீதி முதலிய புண்ணிய காலங்களிலும் சிவபெருமானை விஷேசமாகப் பூசித்தல் வேண்டும். இவ்வாறு நிகழும் விஷேச கிரியையில் புண்ணியாகவாசனம், பஞ்சகவ்யபூசை, ஸ்நபனம், சாந்திஹோமம் முதலியன இடம்பெறும். சிவனை விஷேச திரவியங்களால் அபிஷேகித்து பாயசம், சர்க்கரை அன்னம், அபூபம் முதலியவற்றை நிவேதித்து விஷேட தீபாராதனை ஆகியன நிகழ்த்துதல் வேண்டும்.

(தொடரும்...

# கடவுளும் நானும்

—மூனாக்கானா—

மண்ணிலே தான் பிறந்த மனிதர் படுந் துயரம்
எண்ணியே நான் வருந்தி இதற்கென்ன காரணமோ
என்று நினைத்து இறைவனிடம் கேட்போமென்று
சென்றேன் திருலோகம். தெய்வத்தைக் கண்டுவிட்டேன்
ஆழ்ந்த அமைதியுடன் ஆண்டவனார் வீற்றிருந்தார்
ஆண்டவனே! என் மனதில் ஐயமொன்று உள்ளதென்று
காண்டீபம் போல்வளைந்து கையெடுத்துக் கும்பிட்டேன்.
விண்ணில் இருந்து எங்கள் வேதனையைப் பார்ப்பதற்கோ
மண்ணில் எமைப் படைத்தாய் மனிதர் படும் துயரம்
என்னவென்று சொல்லி எடுத்துரைப்பேன் உங்களிடம்
சொன்னால் கண்ணீர் சொரியும் தூயவரே உங்களுக்கும்
அன்னையில்லாப் பிள்ளைகள் போல் அழுது தவிக்கின்றோம்
பஞ்சம் பசிகளவு பட்டினியும் பொய் கொலையும்
மிஞ்சும் பல நோய்கள் வேதனைகள் சோதனைகள்
சூறாவளி வெள்ளம் சுனாமியொடு மண்சரிவு
ஆறாத வெப்பம் அனர்த்தம் நிலநடுக்கம்
உயிரிழப்போ பல லெட்சம் உடமைகளோ பல கோடி
மயிரிழையில் நான் தப்பி வந்து இங்கே நிற்கின்றேன்
எம்மை இந்தத் துன்பங்கள் ஏன் வருத்துகின்றதென்று
இந்த மடையனிடம் இயம்புமென்று கேட்டு நின்றேன்
என் நிலையைக் கண்ட இறைவன் மனமிரங்கி
புன்முறுவல் பூத்து புனிதவாய் தான்திறந்து
மானிடனே! நானுமுன்னை மறு உயிர்க்கும் மேலாக
ஆறாம் அறிவு தந்து அவனியிலே படைத்தேன்
நியதி பல வைத்தேன் நீயுணர்ந்து முன்னேற
அமைதியைக் காத்திடுதல் அடியேனின் வேலையல்ல
என்றும் அமைதியுடன் இவ்வுலகில் நீவாழ
உன்னைப் படைத்துள்ளே உள்ளமொன்றை நான் வைத்தேன்
வைத்த அந்த உள்ளத்தின் மகிமை தன்னைப் போதிக்க
புத்தரொடு யேசு, நபி போன்ற எந்தன் தூதர்களை
சித்தர்களை முத்தர்களை இருடிகளை முனிவர்களை
எத்தனையோ ஞானிகளை அங்கே அனுப்பி வைத்தேன்
அங்கே அனுப்பிவைத்த அவர் வழியே நாடாமல்

எங்கோ அலைகின்றீர் அதுஉந்தன் குற்றமல்ல
அஹிம்சை தனையறிய அனுப்பினேன் காந்தி தன்னை
வன்பறிந்து நீவிலக வல்லரக்கர் நான் படைத்தேன்
கள்ளமல்லா உள்ளத்தை கைக்குழந்தை காட்டவைத்தேன்
எள்ளுக்குள் எண்ணெய் வைத்தேன் என்னை உணர்ந்துகொள்ள
நாநிலங்கள் காற்று மழை நல்லாறு கடல் மலைகள்
சோலை வனங்களுடன் தூயநீர்ப் பொய்கை வைத்தேன்.
இவைகளை நீ நஞ்சாக்கி இயல்பு நிலை மாறவைத்தாய்
எவையெல்லாம் தீமைகளோ அதன் வழியே நீ நடந்தாய்
சூரியனைச் சந்திரனைச் சுழலவிட்டேன் உனக்காக
உண்மையே வெல்லுமென்று உலகறியக் காட்டுதற்கு
மன்னன் அரிச்சந்திரனை வாய்மைக்கு நான் படைத்தேன்
கூடியே உண்பதற்கு குவலயத்தில் காகமுடன்
சோடி உறவுக்கு தூய அன்றில் நான் படைத்தேன்
நல்லதையே பிரித்தெடுக்க நான் அன்னம் படைத்திருந்தும்
கெட்டதையே தேர்ந்தெடுத்துகெடுவதும் நீதானே
பேதை மனந்தெளிய பெரியதர்ம சாத்திரங்கள்
கீதை குறளுனக்கு கிடைக்க வைத்தேன் மானிடனே
வருகுமே மேடு பள்ளம் வாழ்க்கையிலே என்றறிய
இரவு பகல் மாறவைத்தேன் இதை நீ உணர்ந்தாயா?
பிறந்த பொழுதிலும் சா பின்னூறு ஆண்டிலும் சா
இறப்பும் பிறப்பும் என் பொறுப்பு ஆதலினால்
பிஞ்சும் உதிரும் பெருங் கனியும் தானுதிரும்
அஞ்சாமல் நீவாழ ஆனஇடைக் காலமுண்டு
இந்த இடைக் காலத்தில் இவை உணர்ந்து வாழாமல்
என்னை மறந்து என்படைப்பின் தத்துவங்கள்
தன்னை மறந்து தலைகீழாய் நீநடந்து
நொந்து அழுது வந்தால் இதற்கு நான் என்ன செய்வேன்
அடிப்பதுவும் நீங்கள்தான் அழுவதும் நீங்கள்தான்
தடுக்கி வழிநடந்து தவிப்பதனால் என்ன பயன்
உண்மையை நீ உணர்ந்து ஒழுங்காய் நடந்து வந்தால்
என்னை நீ தேடி இங்குவரத் தேவையில்லை
ஆதலினால் மானிடனே! அயர்ந்து நீ போகாதே
உன்னுடைய உள்ளத்தின் உள்ளே நீ சிந்தித்தால்
என் படைப்பின் நோக்கமெல்லாம் எளிதில் புரிந்து விடும்
சென்று வா என் மகனே! திருந்தி நீ வாழ்ந்திடுக!
என்று சொல்லி என் தெய்வம் எனக்கு விடை தந்ததுவே.

**இக் கவிதை பல நேயர்களின் வேண்டுகோளுக்காக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் தேசிய சேவையில் மறுஒலிபரப்புச் செய்யப்பட்டது.**

இணக்க சுபாவம் அன்பை வளர்த்து வெறுப்பு உணர்ச்சியை களைந்தெறிகிறது.

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

–ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்–

## ௪. பஞ்சாக்ஷரவியல்

194. எப்படி இருந்து செபித்தலாகாது?

சட்டையிட்டுக்கொண்டும், சிரசில் வேட்டி கட்டிக்கொண்டும், போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக் கொண்டும், கௌபீனம் தரியாதும், வேட்டி தரியாதும், விரலிலே பவித்திரம் தரியாதும், பேசிக்கொண்டும், இருளில் இருந்து கொண்டும், நாய், கழுதை, பன்றி முதலியவற்றையும் புலையர் முதலாயினோரையும் பார்த்துக் கொண்டும் செபிக்கலாகாது. செபம் செய்யும்போது கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம்.

195. செபமாலை கொண்டு எப்படிச் செபித்தல் வேண்டும்?

பிறர் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் பரிவட்டத்தினால் மூடப்பட்ட செப மாலையை, வாசகமாகச் செபிக்கில் சுட்டுவிரலிலும், மந்தமாகச் செபிக்கின் நடுவிரலிலும், மானசமாகச் செபிக்கின் ஆழிவிரலிலும் வைத்து சிவபெருமானுடைய திருவடிகளை மனசிலே தியானித்துக்கொண்டு, பெருவிரலினாலே நாயகமணிக்கு அடுத்த முகமேனோக்கிய மணியை முதலாகத் தொட்டு, ஒவ்வொரு மணியாகப் போகத்தின் பொருட்டுக் கீழ்நோக்கித் தள்ளியும் முத்தியின் பொருட்டு மேனோக்கித் தள்ளியும் செபித்து, பின்பு நாயகமணி கைப்பட்டதாயின், அதனைக் கடவாது திரும்ப மறித்து வாங்கி, அதனைத் திரும்பக் கையில் ஏறிட்டுச் செபித்தல் வேண்டும். செபிக்கும்போது, செபமாலையின் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப்படின் பாவமுண்டாம்.

196. இன்ன இன்ன பொழுது செபித்தவர் போக மோஷங்களுள் இன்னது இன்னது பெறுவர் என்னும் நியமம் உண்டோ?

ஆம்; பிராணவாயுவானது இடப்பக்க நாடியாகிய இடையிலே நடக்கும்போது செபித்தவர் போகத்தையும், வலப்பக்க நாடியாகிய பிங்கலையிலே நடக்கும்போது செபித்தவர் மோஷத்தையும், நடுநிற்கு நாடியாகிய சுழுமுனையிலே நடக்கும்போது செபித்தவர் போகம் மோஷம் என்னும் இரண்டையும் பெறுவர்.

197. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபம் எவ்வெக் காலங்களிலே விஷேசமாகச் செய்யத் தக்கது?

அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிரண்டு மாதப்பிறப்பு, கிரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, தியானம் செபம் முதலியன

விஷேசமாகச் செய்தல் வேண்டும். சித்திரை, ஐப்பசி என்னும் இவ்விரண்டு மாதப்பிறப்பும் விஷு எனப்படும்; இவைகளிலே, மாதம் பிறத்தற்கு முன்னெட்டு நாழிகையும் புண்ணியகாலம் ஆடிமாதப் பிறப்பு பின்னெட்டு நாழிகையும் தஷிணாயனம் எனப்படும்.

இதிலே மாதம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தைமாதப் பிறப்பு உத்தராயணம் எனப்படும்; இதிலே மாதம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாதப்பிறப்பும், விட்டுணுபதி எனப்படும்; இவைகளிலே மாதம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணியகாலம். ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாதப்பிறப்பும் சடசீதிமுகம் எனப்படும். இவைகளிலே, மாதம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். சூரிய கிரகணத்திலே பரிசகாலம், புண்ணியகாலம்; சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணிய காலம். அர்த்தோதயமாவது தை மாதத்திலே ஞாயிற்றுக் கிழமை அமாவாசையும் திருவோண நட்சத்திரமும் விதிபாத யோகமும் கூடிய காலம். மகோதயமாவது தை மாதத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையும் திருவோண நட்சத்திரமும் விதிபாத யோகமும் கூடிய காலம்.

198. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்தாற் பயன் என்ன?

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பொருளை அறிந்து, சிவபெருமான் ஆண்டவன், தான் அடிமையென்னும் முறைமையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக்கொண்டுவரின் விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற் போல் ஆன்மாவிடத்தே சிவபெருமான் பிரகாசித்து, மும்மலங்களும் நீங்கும்படி ஞானானந்தத்தைப் பிரசாதித் தருளுவார்.

## 9. சிவலிங்கவியல்

199. சிவபெருமானை ஆன்மாக்கள் வழிபடும் இடங்கள் எவை?

சிவபெருமான், புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளும் குருவுஞ் சங்கமமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்குப் பெயராகிய இலிங்கம் என்னும் பதம் உபசாரத்தால், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைலம் முதலியவற்றிற்கும் வழங்கும். (சைலம்- பாறை, சிலை)

200. சிவபெருமான் இவ்விடங்களில் நிற்பர் என்றது அவர், எங்கும் வியாபகர் என்றதனோடு மாறுபடுமன்றோ?

மாறுபடாது; சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களில் மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர்; மற்றை இடங்களிலெல்லாம் பாலில் நெய் போல வெளிப்படாது நிற்பர்.

(தொடரும்...

பெருந்தன்மையான குணத்தை வளர்த்துக்கொள்வதன்மூலம் பொறாமையை ஒழிக்க முடியும்.

# குக சைவ சித்தாந்தம்

திரு முருகேசு கௌரிகாந்தன் அவர்கள்



சைவ சமயத்தின் முடிந்த முடிவான கருத்துக்களைக் கூறுவது சைவ சித்தாந்தம். இது தமிழர் கண்ட பெருந் தத்துவம். இதன் முதனூல் மெய்கண்ட தேவரின் சிவஞான போதம். சைவசித்தாந்த விருத்திக்கும் பரப்புகைக்கும் இலங்கைத் தமிழ்ச் சைவப் பெரியோர்களும் குறிப்பிடத் தக்க அளவு பங்களிப்பினை ஆற்றியுள்ளார்கள். அவ்வகை யில் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாச முனிவர் (1625- 1658) சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குச் செய்த உரை (1901, சென்னை சிவஞான யந்திரசாலை), ஆறுமுக நாவலர் (1822- 1879) எழுதிய இரண்டாஞ் சைவ வினாவிடை, மறைஞான சம்பந்தர் செய்த சைவசமய நெறிக்கு நாவலர் செய்த புத்துரை (1955 எட்டாம் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை) சு. சிவபாதசுந்தரம் (1878- 1953) திருவருட்பயனுக்குச் செய்த உரைவிளக்கம் (1918), மு. திருவிளங்கம் (1859- 1922) சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு எழுதிய பதவுரை, குறிப்புரை (1925, கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலை), சிவப்பிரகாசத்திற்கு எழுதிய புத்துரை, (1974, யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்), க.சா. முருகேசுப் போதகர் செய்த சிவஞான சித்தியார் சுபட்ச வசனம் (1931, என்.எம். சவரிமுத்து அன்ட்சன்ஸ் அச்சகம், யாழ்ப்பாணம்) சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் இ. செல்லத்துரை உண்மைநெறி விளக்கத்துக்குச் செய்த உரை (1966, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்) முதலானவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில் சைவ சித்தாந்தம் கந்தபுராண காப்பியத்தின்மூலம் விளக்கம் பெறுவதைக் காண்பிப் பதற்காக மேலைப் புலோலி சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை (1871- 1907) அவர்களால் "குக சைவ சித்தாந்தம்" என்பது முன்வைக்கப் பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

## முருகனும் சிவனும் ஒருவரே

இந்துசமயம் அறுவகைப் பிரிவுடையதென்பர். அவையனைத்தும் சைவத்துள் அடங்கும் என்பது சைவர் கொள்கை. சைவ சித்தாந்தம் சிவதத்துவம். குகன் என்பது முருகப்பெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று. பிள்ளையார் சுழிபோட்டு "சிவமயம்" எழுதுவதுபோன்று "குகமயம்" என்று எழுதுபவர்களிருக்கிறார்கள். சான்றுக்கு உடுப்பிட்டி

அ. சிவசம்புப்புலவர் (1830- 1910) வள்ளியம்மை திருமணப்படல உரை (சோதிட விலாச யந்திரசாலை, தும்பைநகர், பிலவவருடம்) நூலிலும் சி. கணபதிப்பிள்ளை ஐயராற் பாடப்பெற்று க. தாமோதரம்பிள்ளைக் குருக்களால் பதிப்பிக்கப்பெற்ற "கதிரை மலையிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேலவர் திருவூஞ்சல் (1954, ஊழியன் அச்சகம் பருத்தித்துறை) முதலான நூல்களில் "குகமயம்" என்றே எழுதப் பெற்றிருப்பதனைக் கூறலாம். "குகாரணி" என்பது உமையின் பெயர்களில் ஒன்று. முருகப்பெருமானை குகேசன் என்றும் அழைப்பர். முருகப்பெருமானும் சிவபெருமானும் ஒருவரே என்பதினைக் கந்தபுராணம் தெளிவாகக் காட்டுகின்றது. சிவபெருமானே இருவரும் ஒன்று என்று குறிப்பிட்டதாகப் பின்வரும் செய்யுளால் அறியலாம்.

"ஆதலி னமது சத்தி யறுமுகனவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்"

## இலங்கையில் கந்தபுராணத்தின் செல்வாக்கு

முருகப்பெருமானாகிய கந்தனைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு கச்சியப் பராற் பாடப்பெற்ற "கந்தபுராணம் ஒரு தமிழ்நாட்டுக் காப்பியம்" என்று மல்லாகம் ச. அம்பிகைபாலன் (1908- 1986) எழுதியுள்ளார். கந்தபுராணம் மாருதப்புரவல்லி காலத்தைச் சேர்ந்ததென்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1899- 1986) எழுதியுள்ளார். எனவே அந்தக் காலத்திலிருந்து கந்தப்பெருமான் ஆலயங்களில் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லப்பட்டு வரும் மகிமைக்குரியது. இலங்கையைச் சேர்ந்த தமிழ்ச் சைவர்களிற் பெரும்பாலானோர் முருக வழிபாட்டினர் ஆறுமுக நாவலரும் முருகவழிபாட்டினரே. அவரது தந்தையார் பெயரே கந்தப்பிள்ளை என்பதாகும். ஆறுமுக நாவலர் சாதாரண மக்களும் கந்தபுராணத்தைப் படித்துப் பயன்பெறுவதற்காக கந்தபுராண வசனத்தை எழுதி வெளியிட்டார்.

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களது கந்தபுராண விளக்கம் (1952, 5ஆம் பதிப்பு சாவகச்சேரி இலங்காபிமானி அச்சியந்திரசாலை) "திருப்பெருவடிவம்" (சூரபன்மன் வதைப் படலம், 420- 451 வரையான செய்யுட்களுக்கான விளக்கவுரை, (1938, சைவ பரிபாலன சபை வெளியீடு) நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்களது (1878- 1953) கந்தபுராணக் கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மை நூற்கருத்தும் (1938, யாழ் திருச் சண்முகநாத அச்சகம்), பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது "கந்தபுராண கலாசாரம்" (1959, யாழ் ஸ்ரீ சண்முகநாத அச்சகம், "கந்தபுராண போதனை (1960, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்), தட்சகாண்ட உரை வித்துவான் ந. சுப்பையாபிள்ளை (1900- 1908) அவர்களின் "கந்தபுராணம் -உரை (உற்பத்திக் காண்டம்- 100 செய்யுள், சைவப்பிரகாச யந்திரசாலை, 1964) காசிவாசி சி. செந்திநாதையர்

(1848- 1924) அவர்களது "கந்தபுராண நவநீதம் (1969, யாழ் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்), செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (1925- 2008) அவர்களது "கந்தபுராணச் சொற்பொழிவுகள். (1975, துர்க்கை அம்பாள் தேவஸ்தானம், தெல்லிப்பழை) செ. தனபாலசிங்கன் (1924- 1976) அவர்களின் "கந்தபுராணச் சிந்தனைகள் (1976, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்) போன்ற நூல்கள் இலங்கையில் கந்தபுராணம் காலந்தோறும் பற்பல கோணங்களில் பயிலப்பட்டு வந்துள்ளமையை எடுத்துக்காட்டப் போதுமானதாகும். எவ்வகையிற் பார்த்தாலும் கந்தபுராணத்தின் மறைபொருள் சைவசித்தாந்தமே.

## மதம் - சமயம்

ஆங்கிலத்தில் சமயத்தை "றிலிஜன்" என்பர். இச்சொல் "றிலிஜியோ" என்ற லத்தீன் சொல்லில் இருந்து வந்ததென்பர். நுணுகி நோக்கிக் கடைப்பிடிக்கப்பட வேண்டியது என்பது இதன்பொருளாம். தத்துவவியலாளர் ஒருவர் "மதம் ஒரு அபினி" என்று எழுதியிருக் கிறார். உண்மையில் "மதம்" என்பது மக்களுக்காக அல்லது உயிரினங்களுக்காக இருக்குமாயின் அவற்றின் மதமாகிய அறியாமையைப் போக்கி ஆன்ம விடுதலையினை வழங்குவதாகவேயிருக்கும்.

இனி, சமயம் என்றால் சமநோக்கு என்ற தத்துவத்தை அது அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். கந்தபுராணத்திலே முருகப்பெருமான் படைத்தற் கடவுளாகிய பிரமதேவனைச் சிறையிலிட்டுப் பின்னர் விடுதலை செய்த கதையினை அனைவரும் அறிவர். சிவபெருமானின் அம்சமாகிய முருகப்பெருமானைப் பிரமன் மமதை காரணமாக சிறுவனென்று இகழ்ந்து சென்றதாலேயே முருகப்பெருமானால் பிரணவ மந்திரத்தைப் பற்றிய கேள்வி கேட்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டு இறுதியில் முருகப்பெருமான் கருணையினாலேயே பிரமன் உய்தி பெறுகின்றான். இந்த உபகதை மூலம் பெற்ற தெளிவுதான் கதிரைவேற்பிள்ளை அவர்களின் குக சைவ சித்தாந்த சிந்தனைக்கு வித்திட்டிருக்க வேண்டும்.

## கந்தபுராணத்திற் பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களிற் சில

கந்தன் + புராணம்- கந்தபுராணம். கந்தன் என்பதன் பொருள் பற்றுக்கோடாக இருப்பவன் என்பதாகும். புராணம்- புராதனம் + நவம். பழைமையினையும் புதுமையினையும் கொண்டு எக்காலத்துக்கும் ஏற்ற கருத்துக்களைக் கொண்டது புராண இலக்கியம். வெல்லம் பூசப்பெற்ற மருந்து போன்றது புராணம். இதனைக் "காந்தா சம்மிதா" என்று வடநூலார் கூறுவர். வேதம் ஆணையிடுவது போலக் கூற, புராணம் அருமைத் துணைவியைப் போல அன்பு கலந்து சிறிய சிறிய கதைகள் மூலம் தத்துவக் கருத்துக் களைச் சொல்வதால் அதனைக் "காந்தா சம்மிதா" என்பார்களாம்.

கந்தபுராணம் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் எனும் ஆறு காண்டங்களையும்

10,345 செய்யுட்களையும் உடையது. ஒவ்வொரு காண்டத்திலும் பற்பல உபகதைகளுண்டு. அவை ஒவ்வொன்றும் சித்தாந்த தத்துவக் கருத்துக்கள் ஒவ்வொன்றை விளக்குவன.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் மூன்றையும் அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் தெளிவாகக் கூறும் தத்துவமாகும். பதி என்பதன் பொருள் மேலானது என்பதாகும். பசு என்றால் பந்திக்கப்பட்டது. அல்லது கட்டுண்டது என்பது பொருள். பாசம் என்பதன் பொருள் தளை அல்லது கட்டு என்பதாகும். பாசம் மலம் எனப்படும். அது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றுமாகும்.

கந்தபுராணத்திலே பிரமாவின் புதல்வனும் சூரபத்மனாதியோரின் தந்தையுமாகிய காசிபன் உபதேசம் மூலம் முப்பொருள் பற்றிய கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. காசிபனின் துணைவியாகிய மாயை என்பவளின் உபதேசமூலம் காமிய, நிட்காமிய கன்மங்கள் பற்றிய கருத்துக்கள் கூறப்படுகின்றன. கந்தன்- பரம்பொருள். சத்துவ, தாமோ குணங்கள் தேவர்கள் அல்லது ஆன்மாக்கள். சூரபன்மன்- ஆணவமலம். சிங்கமுகா சுரன்- கன்மமலம். தராகாசுரன்- மாயாமலம். கந்தப்பெருமானின் சக்திகளாகிய தெய்வானை அம்மனும் வள்ளியம்மனும் முறையே கிரியா சக்தியும் இச்சாசக்தியுமாம். பெருமானின் திருக்கரத்தில் உள்ள வேலாயுதம் ஞானசக்தி. அறிவிலே மூன்று வகையான அறிவு உண்டு. அவை ஆழம், அகலம், கூர்மை என்பனவாகும். முருகப்பெருமான் வேலின் அடிப்பகுதி ஆழமான அறிவையும் நடுப்பகுதி அகல அறிவையும் நுனிப்பகுதி கூர்மையான அறிவையும் குறிக்குமென்றும் விளங்கக் கூறுவர்.

முருகப்பெருமானின் வேலாயுதத்தினால் தாரகாசுரன் யானையாகி ஐயனாருக்கு வாகனமாகவும் சிங்கமுகாசுரன் சிங்கமாகி அம்பிகைக்கு வாகனமாகவும் விளங்கினர். சூரபன்மன் சேவலாகவும் மயிலாகவும் விளங்கி முருகப்பெருமானுக்குக் கொடியும் வாகனமுமாயினான். சேவல் நாத தத்துவத்தையும் மயில் விந்து தத்துவத்தையும் உணர்த்தும். சைவசித்தாந்த வாதம் சற்காரிய வாதமாகும். சத்- காரியம்- வாதம்- சற்காரிய வாதம். சத் என்றால் உள்ளது என்பது பொருள். அதன்படி காரியம் உண்மையென்றால் அதற்கான காரணமும் உண்மையாகும். இவ்வாதத்தின்படி "உள்ளது அழியாது; இல்லது தோன்றாது" "உள்ளத்திலிருந்தே உள்ளது தோன்றும்; இல்லதிலிருந்து உள்ளது தோன்றாது" எனும் கோட்பாடு பெறப்படுகின்றது. கந்தபுராணத்தில் குறிப்பாக ஆணவமாகிய சூரபன்மன் அழிக்கப்படவில்லை. அடக்கப்படுகின்றான். அதாவது ஆணவம் வலிகெட்டு மேநிலையடைகிறது.

இவற்றைவிட பக்குவான்மாக்கள் இறைவனை அடைவதனை மர்க்கட நியாய மூலமும் (குரங்குக்குட்டி தாய்க்குரங்கைத் தேடிப் பற்றுவதுபோன்றது. மர்க்கடம்- குரங்கு) மார்ச்சால நியாய மூலமும் (தாய்ப்பூனை தனது பூனைக்குட்டியைத் தேடிப் பற்றுவது போன்றது. மார்ச்சாலம்- பூனை) சைவ சித்தாந்தம் எடுத்துக் காட்டும் கந்தபுராணத்தில் தெய்வயானை திருமணத்தை மர்க்கட சம்பந்தமெனவும் வள்ளியம்மை திருமணத்தை மார்ச்சால சம்பந்தமெனவும் காட்டுவர். வள்ளி வேட்டுவரிலிருந்து விலகி வந்தமையை ஐம்புல வேடரிலிருந்து நீங்கி வந்ததாகவே சித்தாந்திகள் விளக்கமளிப்பர்.

மனத்தினுடைய சஞ்சலத் தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கு பரிபூரண வைராக்கியம் தேவை.

நிறைவுரை

இவைபோன்ற ஏராளமான சைவசித்தாந்தச் செழும் புதையல்களை புராண நன்னாயகமாகிய கந்தபுராணம் கொண்டிருந்தமையினை அவதானித்துத்தான் சதாவதானி கதிரைவேற்பிள்ளையவர்கள் "குக சைவ சித்தாந்தம்" என்ற எண்ணக்கருவை உருவாக்கித் தந்திருக்கிறார் என்று தெரிகின்றது. இவருடைய கோட்பாட்டுக்கு மிகவும் இலகுவான நல்வழிகாட்டியாக நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் இயற்றிய "கந்தபுராணக் கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மைநூற் கருத்தும்" என்ற நூல் திகழ்கின்றது. கடவுள், உயிர், மலம் ஆகிய முப்பொருள்கள் பற்றி ஆரம்பத்திலும் அடுத்து கதையுணர்த்தும் மெய்ப்பொருட்கொத்து சுருக்கமாகவும் நிறைவாக "கந்தபுராணக் கதைகளும் அவைகள் உணர்த்தும் உண்மை நூற்கருத்தும்" என்பது சற்று விரிவாகவும் சைவர் எல்லோரும் படித்துப் பயன்பெறத்தக்க வகையில் எழுதப்பட்டிருக்கின்றது. பிள்ளையவர்களின் "குக சைவ சித்தாந்தத்தினை" அர்த்தப்படுத்தும் வகையிலும் கந்தபுராணத்தைப் பொருளறிந்து படிப்பதற்கான நல்ல கைந்நூலாகவும் புலவர்களின் நூல் திகழ்கின்றது. எனவே சைவ சித்தாந்தப் பெருந் தத்துவத்தினை "சகலர்" நிலையில் உள்ளோராகிய நாம் இலகுவாக அணுகும் வகையில் வழங்கப்பட்டிருக்கும் "குக சைவ சித்தாந்தத்தின்" வழி ஒழுகி மேநிலையுறுவோமாக.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 44
### "யோகமலை வழங்கி யருள்வான்"

ஆடிட மான மன்றி லாடிடு பாதன் பங்கி
லாடுமை யாகு மன்னை - தருவேலாய்
ஆதர வாகு மன்ப ராசையெ லாம்வ ழங்க
ஆறரு கேயி ருந்து - அருள்வோனே!
ஈடில தாகு மெங்கள் கோமலை யீது வென்று
ஈழவ ரோது கின்ற - கதிர்காம
ஈசனின் வாச லன்று காமரி னோடு சென்று
ஏவயி லோடு வந்த - புயவீரா
தேடரி தான வுந்தன் சேவடி யேம றந்து
சேரிட ராலு லுலைந்து - திரிபேயன்
சீருடை வாழ்வு கண்டு போர்புக ழோடி லங்கு
யோகம தேவ ழங்கி - யருளாயோ?
கேடவை மாற வென்று பார்முத நாளி லென்றுங்
கேடக மேறி வந்து - அருளீசா!
கீதம தோது மன்பர் ஊழ்வினை யோடி யின்பங்
கூடருள் வாரு கந்தப் - பெருமானே!

- இராஜையா குகதாசன் -

தகுதி இல்லாதார் நட்பு மிகுவதால் பயன் இல்லாமையோடு இடர்களும் மிகுந்திருக்கும்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| மு. செந்திராசா | சோழங்கன் | 5000. 00 |
| க. வைரமுத்து | புளியம்பொக்கனை | 3000. 00 |
| T. சற்குணநாதன் | கோண்டாவில் | 3000. 00 |
| செ. செந்தூரன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| செ. செல்வரத்தினம் | தெகிவளை | 10000. 00 |
| திரு கனகரெத்தினம் | 2புட்டி கிழங்கு, 1மூடை அரிசி, பருப்பு | |
| வக்சலாதேவி | கொட்டாஞ்சேனை | 3000. 00 |
| இ. கிருஸ்ணராசா | கட்டுவன் | 3000. 00 |
| M. லவசீகன் மானிப்பாய்வீதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| K. யோகரட்ணம் | பருத்தித்துறை | 12000. 00 |
| வேல்முருகன் ரமணி | சுவிஸ் | 20000. 00 |
| T. வேணுகானன் | கொழும்பு | 6000. 00 |
| திரு சோமு மூலம் மதனசுந்தரம் ஸ்ரீதரன் | லண்டன் | 20000. 00 |
| உதயராசா ஸ்ரீராம் | கோண்டாவில் வடக்கு | 10000. 00 |
| மேல்மருவத்தூர் மன்றம் ஈஸ்ரன் | லண்டன் | 160 பவுன்ஸ் |
| பொ. சூரியகுமார் | | 5000. 00 |
| திருமதி ம. நாகேஸ்வரி | நவிண்டில் | 2000. 00 |
| சின்னப்பு ஞாபகார்த்தமாக நாவலடி | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| N. சுபாஸ்கரன் | கொடிகாமம் | 10000. 00 |
| சி. விநாசித்தம்பி | நவக்கிரி | 3000. 00 |
| செல்லையா மதியானந்தகுரு | வல்வை 1மூடை அரிசி | 1000. 00 |
| நளாயினி சுரேன் | கனடா | 30000. 00 |
| ந. சர்வானந்தம் | ஊரெழு | 1மூடை அரிசி |
| குழந்தைவேலு சுப்பிரமணியம் | அச்சுவேலி | 1000. 00 |
| T.R. கனகலிங்கம் குடும்பம் | வெள்ளவத்தை | 10000. 00 |
| K.V. முனீஸ்வரன் | திருகோணமலை | 5000. 00 |
| மார்க்கண்டு ஸ்ரீதரன் (பாரதி) உரும்பராய் | (கனடா) | 10000. 00 |
| பாலா ரதிகரன் லண்டன் | (உரும்பராய்) | 10000. 00 |
| செ. ஈஸ்வரன் | சித்தங்கேணி | 5000. 00 |
| யுகானந்தன் யுகானி | கொல்லங்கலட்டி | 5000. 00 |
| திருமதி இரத்தினம் | சாவகச்சேரி | 10000. 00 |
| கந்தையா தர்மலிங்கம் நினைவு | உரும்பராய் கிழக்கு | 10000. 00 |
| சிவசீலன் | மன்னார் | 1000. 00 |

நன்றாக நடத்தினாலும்கூட தீயவர்கள் தீமையையே செய்வர்.

| | | |
|---|---|---|
| ரீகன் | திருநெல்வேலி | 1000. 00 |
| சுரேஷ் சிவலோகநாதன் | உரும்பராய் | 3000. 00 |
| சிவானந்தன் ரஜனி | ஜேர்மனி | 3000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| G. ஓவியா | கொழும்பு | 1000. 00 |
| ச. கார்த்திகேசு | கொழும்பு | 1000. 00 |
| செ. கணேசபிள்ளை | இணுவில் | 2000. 00 |
| திருமதி ராமநாதன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| இ. பிரதீப் | கரணவாய் | 5000. 00 |
| S. விக்கினராஜ் கார்த்திகேயன் மூலம் | லண்டன் | 13000. 00 |
| ஜெகா மோட்டோர்ஸ் | நெல்லியடி | 1மூடை அரிசி |
| பா. சிவபாலசுந்தரம் | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| ந. தனஞ்சயன் | இமையாணன் வடக்கு | 2000. 00 |
| சி. யசோதரன் | இமையாணன் வடக்கு | 1000. 00 |
| M. கிருஸ்ணம்மா | கைதடி | 2000. 00 |
| சீ. கமலதாஸ் | நீர்வேலி | 25000. 00 |
| அ. பாலசிறி | ஊரெழு | 3000. 00 |
| செல்வராசா செந்தூரன் | பண்டத்தரிப்பு | 25000. 00 |
| இராஜவேல் இராஜேஸ்வரி | கொக்குவில் தெற்கு | 10மூடை அரிசி |
| கு. சற்குணராசா குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| நா. மோகனகரன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| J. லட்சுமி | காரைநகர் | 500. 00 |
| V. சிவப்பிரகாசம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| க. கண்ணதாசன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| Dr பிரதீபா சிவனேசலிங்கம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வே. தம்பாப்பிள்ளை ஆசிரியர் | சுதுமலை | 500. 00 |
| சி. கோகுலதாசன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. செல்வராசா இமையாணன் வடக்கு | உடுப்பிட்டி | 1500. 00 |
| சு. விஜயசீலன் இமையாணன் வடக்கு | உடுப்பிட்டி | 1000. 00 |
| அ. சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 6000. 00 |
| ந. குகசங்கர் | புத்தூர் | 1000. 00 |
| ந. சிவராஜா குமரகோட்டம் | கோண்டாவில் | 500. 00 |
| திருமதி ந. கங்காதேவி | புத்தூர் | 1000. 00 |
| திருமதி R. சோமசுந்தரம் | | 2000. 00 |
| வைகுந்தன் தேவகி | | 5000. 00 |
| திருத்தேவி ஏகாந்தன் | வல்வெட்டித்துறை | 500. 00 |
| T.R. ரட்ணவேல் | உரும்பராய் | 2000. 00 |
| B. தேவபாலன் | கனடா | 1500. 00 |
| S. சிவானந்தன் | கனடா | 2000. 00 |


தெய்வ நம்பிக்கைக்கு அடுத்து உழைப்பில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

# படங்கள் தரும் பதிவுகள்



தாஜ்மகாலுக்கு முன்பாக வட இந்திய யாத்திரிகைக் குழுவினர்.

அகமபாத்தில் அம்பாஜி அம்மன் ஆலய முன்றலில் யாத்திரிகைக் குழுவினர்



கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே நிகழ்காலம்.



காசியில் கங்கைக் கரையில்

கயாவில் பிதிர்க்கடன் நிகழ்வு





சத்தியத்தை வளைக்கலாம் முறிக்க முடியாது.



ஹரித்துவாரில் கங்கா ஸ்நானம்


பஞ்சலிங்க தரிசனத்தின்போது சமுத்திர ஸ்நானம்



கீழ்ப்படிவினால் மற்றவர்களைப் பணிய வைக்கலாம்.




திருவண்ணாமலை



சக்திபீடம்

காசி





மற்றவர்களின் வடுக்கள் எமக்குப் பாடமாக அமைய வேண்டும்.

# கண்டோம் கதிர்காமம்

(தொடர்ச்சி...



திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள்

ஓர் அருமையான அன்னையின் அனுக்கத் தொண்டர்களின் திருவருட் பிரசாதத்தினை மாந்தியபின் புறப்பட்ட பயணம் அனைவர்க்கும் ஓர் புதிய உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் தர பிரயாணம் தொடர்கிறது. என்னதான் பேருந்தினுள் இருந்த பொழுதிலும் என் மனம்..... பொற்கோயிலின் பேரழகும், அப்பிள்ளைகள் தம் பெற்றோர் மீதும் தம் மண்மீதும், தம் சந்ததி மீதும் வைத்த பற்றும் பாசமும் என்னை ஒரு கணம் சிலிர்க்க வைத்தது. அதுமட்டுமல்ல அந்த ஆலய விதான அமைப்பு அத்தூண்களின் உறுதித்தன்மை சீமெந்து மண்கலவையின் உறுதி, அசல் கருங்கல்லிற் பொழிந்தது போன்று மெருகுத் தோற்றத்தைத் தாங்கி நிற்கின்றதை வியந்த வண்ணம் பயணம் தொடர்கிறது.


சந்நிதியானின் பேருந்தின் ஓட்டுநர்களின் லாவகம், சீர் ஒழுங்கு, கார்பெற் தெரு என்பனவற்றுடன் இவர்களின் pen drive இலிருந்து வந்த பாடல்கள் அப்பப்பா அவற்றை எப்படிச் சொல்வது. ரசனையற்ற பிரகிருதிகளையும் ஒருமுறை செவிகளைத் திருப்பவல்ல தெரிவுகள் T.M.S. இன் சீர்காழியின் ஜேசுதாசின் ,ராகம், பாவம் மிக்க பக்திப்பாடல்கள். அந்தநாள் நினைவுகளை நெஞ்சில் கொண்டுவரவல்ல தத்துவப் பாடல்கள் அத்தனையும் அருமை. அவர்களின் தெரிவின் ரசனையையும் பேருந்தில் உள்ளவர்கள் வியந்த வண்ணத்தை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

என்னதான் பாடிப்பரவி பக்தி செலுத்தினாலும் எனது 63வயது வாழ்க்கை காலத்தில் இதுவரை நான் கதிர்காமக் கந்தனிடம் காலடி வைத்ததில்லை. மாறாக அவன் என்னைத் தன்னிடம் அழைத்ததில்லை. இப்போ ஆட்டிடையன் வேடத்தில் அந்தக் கதிர்காமரை அழைத்து கதிர்காமம் காட்டிய அழகன் என் குருநாதர்களில் ஒருவரான மயில்வாகன சுவாமிகளின் பிரதமசீடரான மோகனதாஸ் சுவாமிகளூடாக சந்நிதியான் ஆச்சிரமப் பேருந்தில் அழைக்கும் கருணையையும் ஒரு கணம் சிந்திக்கின்றேன். “தெய்வம் என்றால் அது தெய்வம். வெறும் சிலை என்றால் அது சிலைதான்...” என்ற கண்ணதாசனின் பார்வையில் சந்நிதியான் ஆச்சிரமச் செயற்பாடுகள் அனைத்திற்கும் பின்னால் அந்த ஆற்றங்கரையானின் அருளாடல் நிறைந்திருப்பதை என் ஆன்மீகப் பார்வை உணர்த்துகிறது.

வழியில் பல்வேறு ஊர்களையும் பட்டினங்களையும் தாண்டி 5.45 மணியளவில் திருகோணமலையில் அமைந்துள்ள ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் எனும் திவ்ய ஷேத்திரத்தை அடைந்தோம்.

நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்பு செலுத்த முடியாது.

இந்த ஆலயம் யாத்திரிகர்களுக்கு மேலும் வியப்புத்தரும் வண்ணமாகவும் ஓர் புனிதமான பிரமாண்ட அமைப்புடனும், பார்த்த உடனே பக்திதரும் வண்ணம் அமைந்து பொலிந்து விளங்குகிறது. இதன் சிறப்புப்பற்றி எழுதுவதானால் ஒரு தனிநூலாகிவிடும். காரணம் இதன் அடிக்கல் நடுதல் தொடக்கம், கும்பாபிடேகம் வரை அடியேன் உடனிருந்து கண்டு கேட்கும் வாய்ப்பை அரங்கன் தந்தவன். உப்புவெளியில் வைத்தியராக இருந்த எமது மகளின் குடும்பத்தைப் பார்க்க நாம் அடிக்கடி இங்கு வந்ததனால் கிடைத்த அரிய வாய்ப்பு எம் பிரயாணத்தைத் தொடரச் சுவாரஸ்யமாக்க உதவுவதையும் திருவருள் என்று உணர்கிறோம்.



இம்மாயவனை வந்து தரிசிக்கப்போகும் அடியவர்களிற்காக பின்வருவனவற்றைச் சுருக்கித் தருகிறோம்.

❖ எம் வல்வெட்டித்துறையைத் தாயகமாகக் கொண்டு இங்கு வாழும் மக்களால் தமக்கென ஓர் தனித்துவமான பண்பாடு கலாசார விழுமியங்களைக் கொண்ட தாய்த் தெய்வமான அம்மனுக்கு ஆலயம் அமைத்து தொழும் அடியவர் கூட்டம் வாழும் சாம்பல் தீவின் நுழைவாயிலில் திருமலை, புல்மோட்டை முல்லைத்தீவுப் பெரும் பாதையில் திருமலை நகரிலிருந்து 5ம் கட்டையில் (7கி.மீ) சாம்பல் தீவுச் சந்திக்கருகில் அமைந்துள்ள ஓர் மாபெரும் விஷ்ணு ஆலயம்.

❖ சல்லி அம்மனின் திருவிழாவில் கிழக்கின் மக்கள் அனைவரும் கூடுங் காட்சியைக் கண்ணாரக் காணத் தாய் தந்த சந்தர்ப்பத்தினால் இதில் அமாவாசையில் அம்புலி எனும் பிரசங்கத்தை நிகழ்த்தியதையும் மறத்தலரிது.

❖ இதுவும் ஓர் தனிநபரின் அருட்பணியின் ஆன்மீகச் சொத்து. இவர் மிகப்பெரும் ஹோட்டல் உரிமையாளர், பிரயாண முகவர், தாராள சிந்தையர் சைவ உலகிற்கு தமிழர் பெருமையுந் தந்து பரிபாலிக்கும் தனிப்பெரும் ஆலயம்.

❖ ஏறக்குறைய 15 ஏக்கர் நிலப்பரப்பின் நடுவே பெருங்கோவில். அதனைச்சூழ எம்பெருமானுக்கு நித்திய நைமித்திய பூசைகளுக்குரிய பாலை வழங்கும் பொருட்டும்

மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவது துன்பங்களே.

(வெண்ணெய்ப் பிரியனல்லவா கண்ணன்) கண்ணன் வாழ்ந்த சூழலை ஏற்படுத்தும் வண்ணமும் அமைந்துள்ள கோசாலை. (கோகுலம்) அதற்குரிய தொழிலாளர் வசதிகள். மாயவனுக்கு பூசை செய்வதற்காக இந்தியாவிலிருந்து வைணவ மரபில் தேர்ந்தெடுத்த பிரதமகுரு, உதவியாளர்கள் தங்குவதற்குரிய படுக்கையறை, நவீன சமையலறை, ஓய்வு அறைகொண்ட (அக்கிரகார) கட்டிடத்தொகுதி. புற்றரை நீர்வசதி ஒளி, ஒலி அமைப்பு அனைத்துங்கொண்ட ஓர் வைணவ குக்கிராமத் தோற்றம்.

❖ கருங்கற் சிற்பங்கள், தனித்துவமாக மாமல்லபுரச் சிற்பிகளை வரவழைத்துச் செதுக்கப்பட்ட சிற்பங்கள், தூபிகள், விக்கிரகங்கள் அதற்கேற்ற வண்ணம் படாடோபமற்று பக்தியைத் தூண்டவல்ல வர்ணத்தேர்வு. கலை நுணுக்கம் கொண்ட திராவிட மரபு பேணும் வடிவமைப்பு என்பன எம்பெருமானின் ஆலயத் தனித்துவங்கள்.

❖ சகல ரோக வைத்தியத்துக்கு அதிபதியான, தன்வந்திரி, கலைகளுக்கு அதிபதியான சரஸ்வதிக்கே குருவான கயக்கிரீவர் முதலான பரிவார மூர்த்தங்களைக் கொண்ட அமைப்புடன் அங்கு சென்று திருப்பதியானைத் தரிசிக்கும் வசதியற்ற எம்போன்றவர்களுக்கு இங்கு அவனைத் தொழும் வண்ணம் தேர்ந்து தேர்ந்து அமைக்கப்பட்ட அருட்கூடம்.

❖ கோவிந்தனுக்கே உரித்தான ஞாயிறு வழிபாட்டில் வாரந்தோறும் விசேட திருவிழா இதன் மகிமை ஏனைய எம் சிவாலயங்கள் போலன்று. இதன் நிறைவில் வழங்கப்படும் அருட்பிரசாதம் தயிர் அமுது. அதன் சுவை..... அதனைத் தொடர்ந்து தாமரையிலையில் வரும் அடியவர் அனைவருக்கும் வழங்கப்படும் வெண்சாதம் அதற்கு சுவை சேர்க்கும் கறித்தேர்வு சுவைத்தவர்களுக்கே அதன் அருமை, தனித்துவம் தெரியும். அதுமட்டுமல்ல இதனை ஆக்கிய பெருந்தகையினரால் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எங்கோ ஆக்கப்பட்டு இங்கு வாகனங்களிற் தருவிக்கப்பட்டு அனைவரும் வயிறார உண்டு வழி செல்லும் வண்ணம் வழங்கப்படுவது ஏனைய ஆலயங்களுக்கு முன்மாதிரியான நிகழ்வு.

❖ ஒரு சிறு ஆலயத்தை அமைத்து அதில் தம் பெயர் பொறித்து "உபயம்" எனப் பயப்படுத்தும் இக்காலத்தில் இத்தனைகோடி பணத்தை முதலிட்ட பெருந்தகையின் பெயரற்ற தன்மையை வியக்காமலிருக்க முடியாது. அவரது பெயர் தாங்கி நாமமிடாது. ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் என வழங்குவதும் சிறப்பே.

இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த ஸ்ரீ லக்ஷ்மி நாராயணரை அனைவரும் பக்தியுடன் அழுது தொழுது வணங்கியபின் சுவாமிகளின் அறிவுறுத்தலுக்கமைய மூதாரூடாக வெருகலில் வீற்றிருக்கும் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகளைத் தரிசிக்கும் மார்க்கத்திற்குப் புறப்பட்டோம். போரோய்ந்து புதுப்பொலிவு பெற்ற தெருக்கள் எங்கும் வண்ணமிகு இந்திரஜாலங்காட்டும் மின்விளக்குகள் இரவுநேரப் பட்டினக் காட்சி நெஞ்சுக்கு இதந்தர மப்பு மந்தாரமான மழைக்காற்றுடன் கூடிய குளிர் ஒட்டுநர்களின் தேர்வான மெல்லிசை சூழ தொடர்ந்த பயணம் இரவு 8.30 மணியளவில் வெருகலம்பதியானை அடைந்தது. அந்த ஸ்ரீ சித்திரவேலாயுத புட்கரணியில் கால் கை சுத்தஞ்செய்ய புறப்பட அங்கே முதலைகள்.....

(காட்சி தொடரும்...

மௌனத்தின்மூலமாகத்தான் இறையனுபவத்தை அடையமுடியும்.

தமிழகத் திருக்கோவில் வரிசை:

# திருவெண்பாக்கம் பூண்டி (நீர்த்தேக்கம்)

–வல்வையூர் அப்பாண்ணா–

சென்னையிலிருந்து வேலூர் செல்லும் பிரதான சாலையில் 47கி.மீ பயணித்து திருவள்ளூர் நகரத்தை அடைய வேண்டும். திருவள்ளூரின் பிரதான சந்திப்பில் வலதுபுறம் திரும்பி, 4கி.மீ தூரம் (மிக மோசமான பாதையினூடாக) பூண்டி நீர்த்தேக்கத்து அணைக்கட்டு அருகாகவே சென்றால் திருவெண்பாக்கம் திருக்கோவிலை அடையலாம். திருவள்ளூரிலிருந்து குறித்த நேரங்களில் திருவெண்பாக்கத்திற்குப் பேருந்துச் சேவை உண்டு. அந்த வீதி ஓரத்திலேயே கோயிலின் சிறிய தெற்கு வாசல் காணப்படுகிறது. கோவிலின் கிழக்கு வாசற்கதவின் சட்டம்போட்ட இரும்புக்கதவுகள் பெரும்பாலும் பூட்டப்பட்டிருப்பதற்கான அடையாளம் தெரிகிறது. நாம் கோவிலைச் சென்றடைந்த நேரம் காலை 8மணி. எனினும் வாசற்கதவுகள் பூட்டப்பட்டே இருந்தன. சற்று தள்ளி இருந்த ஒரு சிறிய தேனீர்க்கடையில் கோயிற் குருக்களின் கைத்தொலைபேசி இலக்கம் பெற்று, பெருமுயற்சி செய்து அவரை வரவழைத்து, தெற்கு வாசற் கதவைத் திறந்து உள்ளே போகிறோம். நுழைந்த உடனேயே நமது இடது கைப்புறமாக சிறு சந்நிதியில் அமர்ந்துள்ள "வலம்புரி விநாயகர்" நம்மை வரவேற்று உள்ளே அனுமதிக்கிறார். "நேரே தெற்குப் பார்த்தபடி தெரிவது அம்பாள் வாசல்" எனக் குருக்கள் கூறியதால், நாம் எதிர்வளமாக புற்தரைமீது கால் வைத்து மண்டப முகப்பிற்கு வருகிறோம். அந்த சொற்ப தூரம் நடந்து வருவதற்குள்ளாகவே புல்லும், புல்லுடன் கூடவே தாராளமாக வளர்ந்துள்ள முட்செடிகளும் காலைப் பதம் பார்க்கின்றன. முன்னரே நான் குறிப்பிட்ட, பூட்டப்பட்டிருக்கும் கிழக்கு வாசற் கதவுக்கும் முன் மண்டபத்திற்கும் இடை நடுவே உயரமான தம்பம் ஒன்று புதிதாக வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

உண்மையில் பழைய திருவெண்பாக்கம் திருக்கோவில் தற்போதைய பூண்டி நீர்த்தேக்கத்தினுள் மூழ்கிக் கிடக்கிறது. இக்கோவில் அமைந்திருந்த இடம் "திருவிளம்பூதூர்" எனும் கிராமம். திருவிளம்பூதூர் என்பது அடர்ந்த இலந்தை மரக்காடு சூழப்பட்டதாக "குசஸ்தலையாற்றின்" கரையில் இருந்திருக்கிறது. சென்னை மாநகர குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குசஸ்தலையாற்றின் பெரும்பகுதியும் அதைச் சூழவுள்ள பல்லாயிரம் ஏக்கர் நிலப்பரப்பும் கொண்ட பகுதி முழுவதையும் உள்ளடக்கியதாகப் "பூண்டி நீர்த்தேக்கம்" அமைக்கத் திட்டமிட்ட வேளையில் திருவிளம்பூதூர் கிராமம் முழுவதும், அதன் நடுவே இருந்த திருவெண்பாக்கம் கோவிலும் 1942இல் இந்திய மத்திய அரசினால் கையகப்படுத்தப்பட்டது. அதற்கான திட்ட வேலைகள் ஆரம்பமான வேளையில் திருவெண்பாக்கம் கோவிலும் திருவிளம்பூதூரிலிருந்து இடம் பெயர்ந்தது. ஒரு கும்பாபிஷேகத்திற்காக பாலஸ்தாபனம் செய்யும் கைங்கரியம் போன்று

சகல விக்கிரகங்களுடன், கோயிற் சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் பலவும் சேர்த்து எடுக்கப்பட்டு, பூண்டி நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டுக்கருகிலேயே புதிய கோயில் கட்டப்பட்டு 05.07.1968இல் "முதற்கும்பாபிஷேகம்" நடைபெற்றுள்ளது. இந்தச் செய்தி அம்பாள் சந்நிதி வாசலில் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. பூண்டி நீர்த்தேக்க அணைக்கட்டின் முடிவுப் பகுதியினை தற்போது, ஒரு மக்கள் சுற்றுலா இடமாக - சகல வசதிகளுடனும் அமைத்துள்ளார்கள். இன்று அழகான பூங்காவாக அவ்விடம் காணப்படுகிறது. "முதற் கும்பாபிஷேகம்" என்று சொன்னேன் அல்லவா! ஒரு கருவறை, ஒரு முன் மண்டபம், மண்டபத்தின் ஒரு பகுதியில் தெற்கு பார்த்த அம்பாள் சந்நிதி, இதனை உள்ளடக்கிய சிறிய உட்பிரகாரத்தில் சில முக்கிய மூர்த்தங்கள், புல்லும் புதருமாக உள்ள ஒரு வெளிப்பிரகாரம். இதுவே திருவெண்பாக்கம் கோவில். முதற்கும்பாபிஷேகத்தின் பின்னர் எவ்வித திருத்த வேலைப்பாடுகளும் செய்யப்படாமல், பல நூற்றாண்டு காலத்திற்கு முற்பட்ட ஒரு கோயில் போன்று பொலிவிழந்து, வெண்மையிழந்து, மண்டப விதானத்தின் மேற்பகுதியில் சிறு மரங்கள் வளர்ந்து, மனதுக்கு மிகச் சங்கடமான நிலையில் இன்று உள்ளது. மிகப் பிரபலமான திருவேற்காடு கருமாரி அம்மன் தேவஸ்தானத்தின் பராமரிப்பில் இக்கோவில் இருந்தபோதும் திருவெண்பாக்கம் ஈசனுக்கு இக்கதி.

இத்தனைக்கும் இக்கோவில், சுந்தரருக்கு இறைவன் ஊன்றுகோல் கொடுத்த வரலாற்றோடு கலந்த - முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயிலாகும். திருவொற்றியூரில் சுந்தரர் - சங்கிலியார் திருமணம் இனிதே நிறைவு பெறுகிறது. "திருவொற்றியூர் எல்லையைத் தாண்டமாட்டேன்" எனத் திருமணத்திற்கு முன்னரே சங்கிலியாருக்குச் சத்தியம் செய்து கொடுத்த சுந்தரர், நாளாக நாளாக, திருவாரூர் தியாகேசரைத் தரிசிக்கும் எண்ணம் மேலோங்க, திருவொற்றியூர் எல்லையைத் தாண்டி வர முற்பட கண்கள் இரண்டும் ஒளியிழந்து பார்வை பறிபோய்விடுகிறது. வரும் வழியில் திருமுல்லை வாசல் ஈசனிடம், "சங்கிலியாருக்காக எனது கண் ஒளியைப் பறித்தாயா?" எனக்கேட்டு ஒருவாறாக "திருவெண்பாக்கம்" வந்து சேர்கிறார். அடியார்கள் புடைசூழத் திருக்கோவிலை வலம் வந்து, "இறைவனே நீர் கோயிலில் உள்ளீரா?" எனக் கேட்க "இறைவன் சுந்தரருக்கு ஊன்றுகோல் ஒன்றினைக் கொடுத்து "உளோம் போகீர" என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்தச் சூழ்நிலையில் திருவெண்பாக்கம் ஈசன்மீது சுந்தரர் பாடிய பதிகம் இது. பதினொரு பாடல் கொண்ட இப்பதிகம் 7ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

மான்திகழும் சங்கிலியைத் தந்தவரு பயன்களெல்லாம்
தோன்ற அருள் செய்து ரைத்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோல்அருளி "உளோம் போகீர" என்றானே.

-சுந்தரர் தேவாரம். ஏழாம் திருமுறை. பாடல் இல 911.

பாடலைப் பதம்பிரித்து பொருள் புரிந்து படிப்பவர்களுக்கு பதிகம் முழுவதிலும் உள்ள பொருட்சுவையும், சுந்தரரின் "கெஞ்சுதலும்" - இறைவனின் "மிஞ்சுதலும்" புரியும். "நாங்கள் நலமாக இருக்கிறோம். நீங்கள் போய் வாருங்கள்" என்று ஒரு வேற்று மனிதன் கூறுவதைப் போன்று இறைவனின் கூற்று இருந்ததாக "பெரியபுராணம் கூறுகிறது.

அற்பனுக்குப் பணம் வந்தால் வைக்க இடமறியான்.

அணைந்த தொண்டர்கள் உடன்வல மாக அங்கண் நாயகர் கோயில்முன் எய்திக்
குணங்கள் ஏத்தியே பரவிஅஞ் சலியாற் குவித்த கைதலை மேற்கொண்டு நின்று
வணங்கி நீர்மகிழ் கோயிலு ளீரேஎன்ற வன்றொண்டர்க் கூன்றுகோல் அருளி
இணங்கி லாமொழி யால்உளோம் போகீரென்றி யம்பினார் ஏதிலார் போல்

ஏதிலார்- அயலார் -பெரியபுராணம் பாடல் இல: 3433

சுந்தரருக்குக் கைத்தடி வழங்கும்வரை இறைவனைத் “திருவெண்பாக்க நாதர்” என்றும், அம்பிகை “கனிவாய் மொழி” என்றும் வழங்கப்பட்டு வந்ததாக 7ஆம் திருமுறை சுந்தரர் தேவாரம் பதிகவிளக்கம் கூறி நிற்கிறது. தற்போதைய பெயர்கள் பின்னர் வரும்.

திருவெண்பாக்கம் கோயில் வாசல் தாண்டி உள்ளே போகிறோம். நமது இடது பக்கம் சூரியன். அக்கினி மூலையில் (தென்கிழக்கு) நவக்கிரகம். உட்பிரகார வலத்தின் தென்மேற்கு மூலையில் மகா கணபதி. வடபிரகார நடுப்பகுதியில் (கருவறைக்கு நேர் பிற்பக்கம்) வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகர், வடமேற்கு மூலையில் மகாலெட்சுமி. கோஷ்ட மூர்த்தங்களாக நிருத்த கணபதி, தெட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை அமர்ந்துள்ளனர். மிகச்சிறிய சந்நிதியில் சண்டிகேஸ்வரர் அமர்ந்துள்ளார். உட்பிரகார ஈசான மூலைக்கு வந்துவிட்டோம். எட்டுக் கைகளுடன் உள்ள அஷ்டபுஜ வைரவர், நால்வர், அருணகிரிநாதர் மூர்த்தங்கள் மேற்குப் பார்த்தபடி உள்ளன. இந்த வரிசையிலே இரண்டு அறைகள் மூர்த்தங்கள் எதுவுமில்லாமல் பூட்டப்பட்டிருந்தது. உற்வச மூர்த்தங்களான பிரதோச நாயகர், சுப்பிரமணியர்- வள்ளி தெய்வானையுடன், சோமாஸ்கந்தர், அம்பலக்கூத்தர்- சிவகாமி அம்மை, அருணகிரிநாதர் ஆகியோர் அமர்ந்திருந்த இரு அறைகளுமே பூட்டப்பட்டிருந்த அறைகளாகும். இந்தப் பூட்டிய அறைகள் பற்றிய விபரத்தை குருக்களிடமே கேட்டேன்.

**“எனது காலத்தில்கூட இக்கோவிலில் பிரதோஷம், சிவராத்திரி, சோமவாரம், கார்த்திகை, ஆர்த்திரா தரிசனம் எனப் பல விழாக்கள் இங்கு நடைபெற்று வந்தன. ஆனால், கோவில்களின் சிலைத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளதால், பாதுகாப்புக் கருதி, திருவேற்காடு கருமாரி அம்மன் தேவஸ்தானத்தில் உலோக விக்கிரகங்கள் வைக்கப் பட்டுள்ளன. அத்துடன் விழாக்கள் அனைத்தும் நின்றுபோய்விட்டன. ஆனாலும் பிரதோஷ நாளில் திருவேற்காட்டிலிருந்து பிரதோஷ நாயகரின் ஐம்பொன் விக்கிரகம் மிகுந்த பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டு, குறித்த நேரத்தினுள் பிரதோஷம் முடிந்ததும் மீண்டும் திருவேற்காடு கொண்டு செல்லப்படுகிறது. இந்த ஒரு விழா மட்டுமே மனதுக்கு சற்றே நிறைவைத் தருகிறது” என்றார் கோவிற் குருக்கள்.**

**“சரி முன்பக்கம் ஒரு தம்பம் புதிதாக இருக்கிறதே. மகோற்சவம் நடைபெறுமா” என மீண்டும் கேட்டேன். “அதை ஏன் கேட்கிறீர்கள். தம்பம் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும் மகோற்சவம் நடாத்துவதற்கான எந்த முஸ்தீபுகளும் இங்கில்லை. தம்பம் நாட்டிய தேதியும்- நாட்டியவர்களின் பெயர்ப்பட்டியலும் அதோ! அந்த சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது” என ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டினார்.**

பக்தர்களின் மகிழ்ச்சி பகவானுக்கு ஆகாரம் போன்றது.

மண்டபத்தின் மையத்தில் உள்ள நந்தி, பலிபீடம் தாண்டி, கருவறையின் வாசலின் இருமருங்கும் வீற்றிருக்கும் துவார கணபதியையும், சுப்பிரமணியரையும் வணங்கிக்கொண்டு மூலவரை நோக்குகிறோம். அழகிய லிங்கத்திருமேனி. ஆவுடையார் பகுதி சற்றே பதிவாகக் காணப்படுவதால் லிங்கபாணம் உயர்ந்ததாகத் தெரிகிறது. மூலவர் ஊன்றீஸ்வரருக்கு ஆதாரதண்டேஸ்வரர் எனும் திருநாமமும் உண்டு. சுந்தரருக்கு ஊன்றுகோல் கொடுத்ததால் "ஊன்றீஸ்வரர்" என்றும், நடப்பதற்கு ஆதாரமாகத் தண்டம் கொடுத்ததால் "ஆதாரதண்டேஸ்வரர்" என்றும் இன்றைய திருநாமங்கள். சுந்தரருக்கு கைத்தடி வழங்க முன்னர் இறைவன் "திருவெண்பாக்கநாதர்" என்றும், அம்பிகை "கனிவாய் மொழியம்மை" எனவும் வழங்கப்பட்டு வந்ததாக முன்னரே கூறினேன். அளவான அலங்காரத்துடன் உள்ள மூலவரைக் கரங்கூப்பித் தொழுது பணிகிறோம். இந்தத் தெய்வத்தை நோக்கியேதான் சுந்தரர் "நீர் இங்கு உள்ளீரோ" என உரிமையோடு கேட்டார்.

கருவறையின் மிக அருகிலேயே தெற்குப் பார்த்தபடி தனிச் சந்நிதியில் அம்பாள் வீற்றிருக்கிறாள். "மின்னொளியம்மை" என்பது அம்பாளின் திருப்பெயர். கண் இழந்த சுந்தரர் திருமுல்லைவாசலிலிருந்து தட்டுத்தடுமாறி வந்தபோது மின்னல்போன்று ஒளிக் கீற்றினைக் காண்பித்து திருவெண்பாக்கம் அழைத்து வந்ததால் அம்பிகைக்கு "மின்னொளியம்மை" எனும் திருநாமம் வந்தது. நின்ற திருக்கோலம் அபயவரதத்துடன் கூடிய நான்கு திருக்கரங்கள். உயர்ந்த அழகிய தோற்றம். சந்நிதிக்கு வெளியே சிறியதாக சிம்மமும் - பலிபீடமும்.


இப்பொழுது நாம் மூலவரின் முன்புறம் உள்ள சிறிய நந்தியின் அருகே வந்து நிற்கிறோம். நந்தியின் வலது கொம்பு ஒடிந்துள்ளது. சுந்தரர் பார்வையிழந்த நிலையில் "இங்கே நீ இருக்கிறீரோ" என இறைவனைக் கேட்க, எம்பெருமான் அவருக்கு ஊன்றுகோல் ஒன்றினைக் கொடுத்துப் "போய்வாரும்" என்று சொன்னாரல்லவா! "கண் கேட்கக் கைத் தடியா தருகிறாய்" எனச் சுந்தரர் கோபித்து அந்தக் கைத்தடியை விட்டெறிய, சிவனேயென முன்னே படுத்திருந்த நந்தியின் வலது கொம்பினை உடைத்துக்கொண்டு கைத்தடி அப்பாற் போய் விழுகிறது. கொம்பொடிந்த நந்திபற்றி நாம் ஏற்கனவே அறிந்திருந்த செய்தியினை, அப்படியே அட்சரம் பிசகாமல், அச்சொட்டாக கோவிற் குருக்கள் கூறியதும் நாம் அசந்துபோய்விட்டோம். பூட்டனார், பேரனார், தகப்பனார்- இவ்வாறு வழிவழியாக இந்த வரலாற்றினைத் தாங்கள் தெரிந்து கொண்டதாகக் கூறியதுடன் உடைந்திருந்த கொம்புப் பகுதியையும் தொட்டுக் காண்பிக்கிறார். எட்டித்தொடும் தூரத்தில் நின்றிருந்த நாமும் குனிந்து உடைந்திருந்த கொம்புப் பகுதியினை உன்னிப்பாகப் பார்க்கிறோம்.

திருவெண்பாக்கத்தில் சுந்தரர் கைத்தடி பெற்றார் என்பது "பெரியபுராணம்" தரும் ஆதாரம். பாடல் இல: 3433, 3434. ஆனால் நந்தியின் கொம்பு ஒடிந்த கதை பெரியபுராணத்தில் காணப்படவில்லை. நாயன்மார்களின் சரிதத்திற்கும்- வரலாற்றுக்குமென நமக்குரிய வேதநூல் பெரியபுராணமே. நம்மைப்போன்ற சாமானியர்களுக்கு அதுவே மந்திரம். ஆகவே கொம்பொடிந்த வரலாறு ஒரு செவிவழிக்கதை எனக் கொள்ளுதலே பொருத்தம்.

கண்பார்வை இழந்த சுந்தரர் கைத்தடியை ஊன்றியபடி உள்ள திருவுருவம் (2' உயரம்) நந்திக்கு மிக அருகிலேயே வலது பக்கமாக உள்ளது. கைத்தடியுடன் காணப்படும்

எது நேர்ந்தாலும் சரி ஒன்றுமே நேராததுபோல நடந்துகொள்.

சுந்தரரின் திருவுருவத்தினை "திருவெண்பாக்கம்" தவிர வேறு எங்கும் காணமுடியாது. சுந்தரருக்கு ஊன்றுகோல் கொடுத்த திருவெண்பாக்க நாதரையும்- நாயகியையும் கண்குளிரக் கண்டு தரிசிக்க வேண்டும், கொம்பொடிந்த நந்தியினைப் பார்க்க வேண்டும் எனும் ஆவல் நீண்ட நாட்களுக்கு முன்னரே ஏற்பட்டதாயினும், 17.04.2013இல் அந்த எண்ணத்தை நிறைவேற்றித்தந்த ஈசன் கருணையை வியந்து போற்றி விடைபெறுகிறோம்.




# என்றும் மறவா....

சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்து, ஆச்சிரமப் பணிகளுக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்கி வந்த உரும்பராயைச் சேர்ந்த அமரர் செ. தபேந்திரநாதன் (கணபதி வெதுப்பக உரிமையாளர்) தமது இறுதிக் காலங்களில் ஒரு ஆன்மீக வாதியாக மிளிர்ந்து, பல தலயாத்திரிகர்களுடன் தான் இணைந்ததோடு மட்டுமல்லாமல் பல அடியார்களையும் தன்னுடன் இணைத்த பெருந்தகையாளர்.



இவ்வருடம் இடம்பெற்ற கதிர்காம உற்சவத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து மட்டக்களப்பைச் சேர்ந்த திரு மகேஸ்வரன் (வேல்சாமி) தலைமையில் நடாத்தப்பட்ட பாத யாத்திரையில் அவரோடு இணைந்து கலந்கொண்ட அடியார்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிய ஒரு அன்பர்.

எமது ஆச்சிரமத்தினால் மேற்கொண்ட கதிர்காம யாத்திரையின்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள உகந்தைமலை முருகனை வணங்கச் சென்ற அடியார்கள் அனைவரது தேவைகளையும் முருகனுக்குச் செய்யும் பணியாக எண்ணி பக்தி சிரத்தையோடு செயலாற்றிய ஓர் அன்பர்.

அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய சந்நிதி வேலவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம்.

-சந்நிதியான் ஆச்சிரமம்-

# ஐப்பசிமாத வாராந்த நிகழ்வுகள்

**04.10.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தெய்வ வாசகம்"

வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

---

**11.10.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- திரு செ. குமாரசாமி (கரவைக்குமரன்) அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

**18.10.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**25.10.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் ஐப்பசிமாத வெளியீடு

190ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு சி. பத்மநாதன் J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :- சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்

[ஆசிரியர்]

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

